

# Winmeen's

# 10th Std தமிழ்

## Book Back + Important Questions

New Book

www.winmeen.com

# 10th Tamil Book Back Questions – [New Book]

## [ Book Back + Important Questions ]

### இயல் – 1 : மொழி

### 1. அன்னை மொழியே

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**மனப்பாடப்பகுதி**

*அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!*
*முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே!*
*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!*

*தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!*
*இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!*
*மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!*

**1. முக்கிய குறிப்புகள்**

- இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்பல்துறை அறிஞர்களில் முதன்மையான ஒருவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
- இவர் சேலம் மாவட்டம் சமுத்திரம் என்னும் ஊரில் பிறந்தார். இவரின் பெற்றோர் துரைசாமியார், குஞ்சம்மாள் என்பவராவர்.
- மாணவப் பருவத்திலேயே ‘குழந்தை’ என்னும் பெயரில் கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தியவர்.
- தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாய்த் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர்.
- இவரது இயற்பெயர் துரை.மாணிக்கம் என்பதாகும்.
- இவர் உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலிய நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார்.
- இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.
- பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் **‘கனிச்சாறு’** பாடல் தொகுப்பு எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. தொகுதி 1 பகுதியில் தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும் என்னும் இருவேறு தலைப்பிலுள்ள பாடல்களிலிருந்து **அன்னைமொழியே** என்னும் தலைப்பிலான இப்பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.
- **“மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே**
  **முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!”** – இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள ஐம்பெருங்கப்பியங்கள் இடம் பெறாத காப்பியங்கள் யாவை?
  பாடலின் **இடம் பெற்ற ஐம்பெருங்காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை** இவ்வடிகளில் **இடம் பெறாத மற்றைய காப்பியங்கள் சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி** என்பவையாகும்.

- *சாகும்போது தமிழ்ப்படித்துச் சாகவேண்டும் – என்றன்*
  *சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்* **– க.சச்சிதானந்தன்**

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
   **அ) எந் + தமிழ் + நா** ஆ) எம் + தமிழ் + நா
   இ) எந்த + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. பா எழுதி பாவலரேறு எனப்பட்டவர் .........................
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
   **அ) பெருஞ்சித்திரனார்** ஈ) பாவாணர்
3. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் .....................
   **அ) துரை. மாணிக்கம்** ஆ) மாணிக்கவாசகன்
   இ) மார்த்தாண்டன் ஈ) மாதவன்
4. இன்னறும் பாப்பதே என்பதில் "பாப்பத்தே" என்பது ......................
   அ) ஏர் எழுபது **ஆ) பத்துப்பாட்டு**
   இ) பரிபாடல் ஈ) பதிற்றுப்பத்து
5. 'மன்னுஞ் சிலம்பே' என்பதில் 'சிலம்பே' என்பது ................
   அ) சிலம்பணிகலன் ஆ) சிலம்பவிளையாட்டு
   **இ) சிலப்பதிகாரநூல்** ஈ) சிந்தாமணி நூல்

## 2. தமிழ்ச் சொல்வளம்

**- தேவநேயப் பாவாணர்**

**முக்கிய குறிப்புகள்**

- நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடிப்பகுதி "தாள்" என குறிப்பிடுகின்றன.
- கீரை, வாழை முதலியவற்றின் அடிப்பகுதி "தண்டு" என குறிப்பிடுகின்றன.
- நெட்டி, மிளகாய்ச் செடி ஆகியவற்றின் அடிப்பகுதி "கோல்" என குறிப்பிடுகின்றன.
- குத்துச்செடி, புதர் போன்றவற்றின் அடிப்பகுதி தூறு என குறிப்பிடப்படுகின்றன
- கரும்பின் அடி கழி என குறிப்பிடப்படுகின்றன.
- மூங்கில் அடி கழை எனவும், புளி வேம்பு அடி 'அடி' எனவும் அழைக்கப்படுகின்றது.
- இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு என்பன இலைகளின் பல்வேறு சொற்களாகும்.
- பூவின் நிலைகள்

| | | |
|---|---|---|
| அரும்பு | - | பூவின் தோற்றநிலை |
| போது | - | பூ விரியத் தொடங்கும் நிலை |
| மலர் | - | பூவின் மலர்ந்த நிலை |
| வீ | - | மரம், செடியிலிருந்து பூ வீழ்ந்த நிலை |
| செம்மல் | - | பூ வாடிய நிலை |

- சம்பா நெல் வகைகளைக் கூறுக
- ஆவாரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிகூமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகை சம்பா நெல் உள்ளன.
- கெட்டுப்போன காய்க்கும், கனிக்கும் வழங்கும் சொற்களை எழுதுக

| | | |
|---|---|---|
| நுனியில் சுருங்கிய காய் | - | சூம்பல் எனபும் |
| புழு, பூச்சி அரித்த காய்கனி | - | சொத்தை எனவும் |
| குளுகுளுத்து நாறியபழம், காய் | - | அழுகல் எனவும் |
| பதராய் போன மிளகாய் | - | சொண்டு எனவும் |
| சுருங்கிய பழத்தை | - | சிவியல் எனவும் |
| 'தேரை' அமர்ந்ததால் கெட்ட காய் | - | தேரைக்காய் எனவும் |
| தேரை அமர்ந்தால் கெட்ட தேங்காய் | - | அல்லிக்காய் |

- நாற்று, கன்று குருத்து, பிள்ளை, குட்டி, மடலி அல்லது வடலி, பைங்கூழ் போன்ற பலவும் தாவர இளம் பருவச் சொற்கள் ஆகும்.
- தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் கிளைப்பிரிவுகள் பெயர்கள்

மரத்தின் அடியிலிருந்து பிரியும் மாபெரும் கிளை – கவை

| | | |
|---|---|---|
| கவையின் பிரிவு | - | கொம்பு (அல்லது) கொப்பு |
| கொம்பின் பிரிவு | - | கிளை |
| கிளையின் பிரிவு | - | சினை |
| சினையின் பிரிவு | - | போத்து |
| போத்தின் பிரிவு | - | குச்சு |
| குச்சின் பிரிவு | - | இணுக்கு |

- தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்களை வகைப்படுத்துக

நெல், புல் முதலியவற்றின் கொழுந்து – **துளிர் (அ) தளிர்**

புளி, வேம்பு ஆகியவற்றின் கொழுந்து – **முறி (அ) கொழுந்து**

சோளம், கரும்பு, தென்னை, பனை ஆகிய தாவரங்களின் கொழுந்து – **குருத்து**

கரும்பின் நுனிப்பகுதி – **கொழுந்தாடை**

- தேவநேயப் பாவாணர் மொழி ஞாயிறு எனப் போற்றப்பட்டவர்.
- திருநெல்வேலி மாவட்டம் சங்கரம் கோயில் என்னும் ஊரில் ஞானமுத்து தேவேந்திரனார், பரிபூரணம் அம்மையாரின் மகனாக 1902ஆம் ஆண்டு பிப்ரவரி இரண்டாம் நாள் பிறந்தார்.
- உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவி அதன் தலைவராக இருந்தவர்.
- உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு **மலேசியாவே**. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் **தமிழே**.
- மொழிஞாயிறு என்றழைக்கப்படும் தேவநேயப் பாவாணரின் "சொல்லாய்வுக் கட்டுரைகள்" நூலில் உள்ள தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரையின் சுருக்கம் பாடமாக இடம்பெற்றுள்ளது.
- **கடல்கடந்து முதலில் அச்சேறிய தமிழ்**: போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ் மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன்

வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது. ரோமன் எழுத்துருவில் வெளிவந்த இதன் முழுப்பெயர் **Carthila de lingoa Tamul e Portugues**. இது அன்றைய காலத்திலேயே இரு வண்ணங்களில் (கறுப்பு, சிவப்பு) மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது. **இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்**.

1. **"காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்"** நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்டப் பகுதி குறிப்பிடுவது ......................

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் **ஈ) சருகும் சண்டும்**

2. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ..................................

அ) குலைவகை **ஆ) மணிவகை**

இ) கொழுந்துவகை ஈ) இலைவகை

3. 'பூ' பின் தோற்ற நிலையைக் குறிப்பது ....................

**அ) அரும்பு** ஆ) போது

இ) செம்மல் ஈ) வீ

4. நெல், புல் முதலியவற்றின் கொழுந்தைக் குறிக்கும் சொல் ................

**அ) துளிர்** ஆ) முறி

இ) குருத்து ஈ) கொழுந்தாடை

5. பொருத்துக

1. பூம்பிஞ்சு - அ) தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு
2. வடு - ஆ) எள்பிஞ்சு
3. மூசு - இ) மாம்பிஞ்சு
4. கவ்வை - ஈ) பலாப்பிஞ்சு
5. குரும்மை - உ) பூவோடு கூடிய இளம்பிஞ்சு

அ) 1 – அ, 2 – ஆ, 3 – இ, 4 – ஈ, 5 – உ ஆ) 1 – ஆ, 2 – இ, 3 – ஈ, 4 – உ, 5 – அ

**இ) 1 – உ, 2 – இ, 3 – ஈ, 4 – ஆ, 5 – அ** ஈ) 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ, 5 – உ

6. முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற நாடு ......................

அ) இந்தியா ஆ) இலங்கை

இ) சிங்கப்பூர் **ஈ) மலேசியா**

7. நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்றவர் .......................

அ) பாரதிதாசன் **ஆ) பாரதியார்**

இ) பாவாணர் ஈ) பாவலரேறு

8. 'மொழி ஞாயிறு' எனப் போற்றப்படுபவர் ..................

**அ) தேவநேயப்பாவாணர்** ஆ) தேசிய விநாயகம்பிள்ளை

இ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஈ) இளங்குமரனார்

9. தாவரங்களின் இளம்பருவத்திற்கான சொற்களை அதனதன் தவாரங்களுடன் பொருத்தி எழுதுக

1. நாற்று - அ) தென்னையின் இளநிலை

2. கன்று - ஆ) வாழையின் இளநிலை
3. குருத்து - இ) மா, புளி, ஆகியவற்றின் இளநிலை
4. பிள்ளை - ஈ) நெல், கத்தரி போன்றவற்றின் இளநிலை

அ) 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ **ஆ) 1 – ஈ, 2 – இ, 3 – ஆ, 4 – அ**
இ) 1 – அ, 2 – ஆ, 3 – இ, 4 – ஈ ஈ) 1 – ஈ, 2 – ஆ, 3 – ஈ, 4 - இ

10. ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக

பதம் – சோறு, வழி, சொல், கால், ஈரம், புனல், காலை
மெய் – உண்மை, மெய்யெழுத்து, வாய்மை
மை – ஆடு, கருமை, கொண்டல், குற்றம்
அயில் – வேல், கூர்மை
கதலி – வாழை, துகில், கொடி
கறை – நிறம், உதிரம், உரல், கிளவி

11. நிலவகைகளின் பொயர்களுக்கா காரணம்

**தரிசு** – போதிய பருவமழையின்றியோ, போதிய பராமரிப்பு இன்றியோ விளைச்சல் இல்லாமல் போன நஞ்சை நிலமே தரிசு எனப்படுகிறது

**சிவல்** – நெந்நிலம்

**கரிசல்** – நீண்டநாள் ஈரத்தைத் தன்னுள் வைத்திருக்கும் கருப்பு நிற மண்ணுள்ள நிலம்

**புறம்போக்கு** – சாகுபடிக்கு ஏற்றதல்லாத அல்லது பொதுப்பயன்பாட்டிற்கு விடப்பட்ட தீர்வை விதிக்கப்படாத நிலம்.

**முரம்பு** – பருக்கை கல்லுள்ள மேட்டு நிலம்

**சுவல்** – மேட்டுநிலம்

**அவல்** – விளைநிலம்

## 3. இரட்டுற மொழிதல்

- சந்தக்கவிமணி தமிழழகனார்

**முக்கிய குறிப்புகள்**

- ஒரு சொல்லோ அல்லது சொற்றொடரோ இரண்டு பொருளைத் தருமாறு பாடினால் அதனை இரட்டுறமொழிதல் என்பர். இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.
- சந்தக்கவிமணி எனக்குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் சண்முக சுந்தரனார் என்பதாகும்.
- பாரதிதாசன் விருது, கவிமாமணி விருது, சந்தக்கவிமாமணி விருது, கவிஞானி, தமிழ்ச்சுடர், தமிழ்க்காவலர் எனப் பலவிருதுகளைப் பெற்றவர்.
- பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.
- தமிழ், கடல் இரண்டினையும் ஒன்றுசேரப் பாடியுள்ளார். இரண்டனுக்கும் உள்ள குணங்களையும், செயல்களையும் ஒருமைப்படுத்தியுள்ளார்.

| பாடல்வரி | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ்<br>முத்து + அமிழ் | இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் | முத்து, அமிழ்தம் கடலில் இருப்பதால் |

| | | |
|---|---|---|
| முச்சங்கம்<br>மூன்று + சங்கு | முதல், இடை, கடையென<br>மூன்று சங்கங்கள் | மூன்று வகையான<br>சங்குகள் |
| மெத்த வணிகலன்<br>மெத்த + அணிகலன் | ஐம்பெரும் காப்பியங்கள் | வணிக கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப்பலகையிலிருந்து<br>புலவர்கள் தமிழைக் காத்தல் | கடல் நீரின்<br>அவையிலிருந்து<br>சங்குகளைக் காத்தல் |

**1. இலக்கணக்குறிப்பு**

முத்தமிழ் – பண்புத்தொகை

முச்சங்கம் – பண்புத்தொகை

அணிகலமும் – உம்மைத்தொகை (முற்றுமை)

**2. சொல்லும் பொருளும்:**

துய்ப்பது – கற்பது, தருவது

மேவலால் – பொருந்துதல், பெறுதல்

முச்சங்கம் – மூன்று + சங்கம் – முதல், இடை, கடை, சங்கங்கள்

முத்தமிர் – மூன்று + தமிழ் – இயல், இசை, நாடகம்

**3. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. ஒரு சொல்லோ, ஒரு தொடரோ இரு பொருள்பட வரும் அணி.

அ) உவமையணி ஆ) சொல்பொருள் பின்வருநிலையணி

இ) தற்குறிப்பேற்றணி **ஈ) சிலேடையணி**

2. மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ..................

**அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்**

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெருங்காப்பியங்களும், அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

3. முச்சங்கம் கண்டதால் என்பதன் சிலேடை ..................

அ) மூன்று சங்கங்களும், முத்தமிழும் **ஆ) மூன்று சங்கங்கள், மூன்று சங்குகள்**

இ) முச்சங்கும், முத்தமிழும் ஈ) முத்தமிழும், முத்தும், சங்கும்

4. அணிகலன் எனப்பாடலின் சுட்டப்பெறும் இலக்கியங்கள் ....................

அ) ஐஞ்சிறு காப்பியங்கள் ஆ) ஐங்குறுநூறு

**இ) ஐம்பெருங்காப்பியங்கள்** ஈ) ஐந்திணை ஐம்பது

5. ஐம்பெருங்காப்பியங்கள் என்பவை ..................

**அ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி**

ஆ) சிலப்பதிகாரம், உதயணகுமாரகாவியம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி

இ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, சூளாமணி

ஈ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, நீலகேசி

## 4. உரைநடையின் அணிநலன்கள்

**- எழில் முதல்வன்**

**முக்கிய குறிப்புகள்**

- "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்" என்று தண்டியார் உருவகம் பற்றி கூறிகிறார்.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. சங்க இலக்கியங்களின் தொகுப்பு .....................

அ) பாட்டும் பிரிவும் **ஆ) பாட்டும் தொகையும்**

இ) பாட்டும் கருத்தும் ஈ) பாட்டும் பொருளும்

2. "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கைப் பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்" என்ற தொடரை எழுதியவர், நூல் .......................

**அ) நா. பார்த்தசாரதி, குறிஞ்சிமலர்** ஆ) நா. பார்த்தசாரதி, மணிபல்லவம்

இ) நா. பார்த்தசாரதி, பொன்விலங்கு இ) நா. பார்த்தசாரதி, கபாடபுரம்

3. *"புறத்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை*
*வாய்மையால் காணப்படும்"* – இக்குறட்பாவில் பயின்று வரும் அணி

அ) எடுத்துக்காட்டு உவமையணி ஆ) உருவக அணி

இ) இல்பொருள் உவமையணி **ஈ) உவமையணி**

4. "ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்" எனக்கூறும் இலக்கணநூல் ..................

அ) அகத்தியம் **ஆ) தொல்காப்பியம்**

இ) தண்டியலங்காரம் ஈ) நன்னூல்

5. "குடிசைகள் ஒரு பக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒரு பக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்; மெலிந்த எலும்புக்கூடுகள் ஒருபக்கம்; பருத்த தொந்திகள் மறுபக்கம்" கேடுகெட்ட இந்த சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம் என எழுதியவர் .......................

அ) மு.வரதராசனார் ஆ) ரா.பி.சேதுப்பிள்ளை

இ) பேரறிஞர் அண்ணா **ஈ) ஜீவானந்தம்**

## 5. எழுத்து, சொல்

**முக்கிய குறிப்புகள்**

- சார்பெழுத்துகள் பத்து வகைப்படும். அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பனவாகும்.
- செய்யுளில் ஓசை குறையும்போது, அவ்வோசையை நிறைவு செய்ய உயிரெழுத்துகளுள் நெட்டெழுத்துகள் ஏழும் தம் அளவில் நீண்டு ஒலிக்கும். அவ்வாறு உயிர் எழுத்துகள் நீண்டு ஒலிப்பதால் உயிரளபெடை எனப்படும்.

- உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை செய்யுளிசை அளபெடை, இன்னிசையளபெடை, சொல்லிசையளபெடை என்பனவாகும்.
- செய்யுளில் ஓசை குறையும் போது, அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகளுள் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும் ஆய்த எழுத்தாகிய ஃ ஆகிய எழுத்துகள் ஒரு குறிலை அடுத்தும், இருகுறிலை அடுத்தும் அளபெடுக்கும். இவ்வாறு இனிய ஓசையை நிறைவு செய்வதை ஒற்றளபெடை என்கிறோம்.
- செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் **செய்யுளிசை அளபெடை** என்கிறாம். இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர். இது சொல்லின் முதல், இடை, இறுதியிலும் இடம் பெறும்.

  எ.கா: ஓஒதல் வேண்டும் - மொழிக்கு முதலில்

  **உறாஅ**ர்க்கு உறுநோய் - மொழிக்கு இடையில்

  நல்ல **படாஅ** பறை - மொழிக்கு இறுதியில்
- ஒற்றளபெடையில் ஆய்தம் ஃ அளபெடுக்கும். ஆய்தம் அளபெடுப்பதை அறிய ஆய்த எழுத்தே அதன் பக்கத்தில் வரும். ஆய்தம் குறிலின் கீழ் இடையிலும், குறிலிணையின் கீழ் இடையிலும் **ஆய்தம் அளபெடுக்கும்.**

  எ.கா: எஃஃ இலக்கிய – குறிற்கீழ் ஆய்தம்

  இலஃஃகு முந்தின் இன்பம் – குறிலிணைக் கீழ் இடையில்
- ஒரு எழுத்து தனித்து நின்றோ, இரண்டு முதலிய பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருளைத் தருமாயின் சொல் எனப்படும்.
- பதம், மொழி, கிளவி என்பன சொல் எனப் **பொருள் தரும் பிற சொற்கள்**.
- பகுபதம், பகாப்பதம் என பதம் இருவகைப்படும்
- மொழி தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழி மூன்று வகைப்படும்.
- தொழிலை உணர்த்துவது தொழிற்பெயர் எனப்படும். இது ஒரு வினை அல்லது செயலை மட்டும் குறிக்கும். எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாது வரும்.

  எ.கா: ஈதல், நடத்தல்
- **பகுதி, விகுதி** என்ற உறுப்புகளைப் தொழிற்பெயர்கள் பெறும்.

  எ.கா: நடத்தல் = நட + தல்

  வாழ்க்கை = வாழ் + கை – **விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்** எனவும்.
- கூத்து, தொண்டு, நகை – விகுதி பெறாத தொழிற்பெயர்கள்.
- கடவாமை, கொல்லாமை, கல்லாமை இவ்வாறு எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் எனப்படும்.
- தொழிற்பெயரில் விகுதியைப் பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராய் வருமானால் அது முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

  எ.கா: தட்டு, உரை, அடி – இச்சொற்களில் முறையே தட்டுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும்போது முதனிலைத் தொழிற்பெயராய் நிற்கும்.

- விகுதி பெறாமல் தொழிற்பெயரின் முதல் நிலைத் திரிந்து வருவது முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.
- ஒரு வினைமுற்று வினையை உணர்த்தாமல், வினைக்குரிய கர்த்தாவை உணர்த்தி, எழுவாயாக நின்று வேற்றுமை உருபுகளை ஏற்றும், ஏற்காமலும் வருமாயின் வினையாலணையும் பெயர் எனப்படும். தன்மை, முன்னிலை, படர்க்கை மூவிடத்தும் மூன்று காலங்களிலும் வரும்.
- தொழிற்யெருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| 1. தொழிலை (வினையை மட்டும்) உணர்த்தி வரும் | தொழிலைச் செய்த கருத்தாவைக் குறிக்கும் |
| 2. காலம் காட்டாது | மூன்று (நிகழ், இறந்த, எதிர்காலம்) காலங்களையும் உணர்த்தி நிற்கும். |
| 3. படர்க்கைக்கே உரியது | தன்மை, முன்னிலை படர்க்கை மூவிடத்திற்கும் உரியது |
| எ.கா: பாடுதல், படித்தல் | பாடியவர், படித்தவர் |

- **வினைமுற்று - தொழிற்பெயர்**

| வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|
| அறிந்தது | அறிதல் |
| அறியாதது | அறியாமை |
| புரிந்தது | புரிதல் |
| புரியாதது | புரியாமை |
| தெரிந்தது | தெரிதல் |
| தெரியாதது | தெரியாமை |
| பிறந்தது | பிறத்தல் |
| பிறவாதது | பிறவாமை |

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. 'கேட்டவர் மகிழப்பாடிய பாடல் இது' தொடலில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே .........................

   **அ) பாடிய; கேட்டவர்** ஆ) பாடல்; பாடிய

   இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

2. முதல் எழுத்து என்பது .....................

   **அ) உயிர் 12, மெய் 18** ஆ) குறில் 5, நெடில் 7

   இ) வல்லினம், மெல்லினம், இடையினம் ஈ) உயிர்மெய் எழுத்துகள்

3. சார்பெழுத்தின் வகைகள்

   அ) 18 **ஆ) 10** இ) 12 ஈ) 216

4. அளபெடுத்தல் என்பது .....................

**அ) நீண்டு ஒலித்தல்** ஆ) குறுகியொலித்தல்

இ) ஒலியாது விடல் ஈ) இவையாதுமல்ல

5. உயிரௌபடையின் வகைகள் ...................

**அ) செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை**

ஆ) செய்யுளிசை அளபெடை, ஒற்றளபெடை, இனினிசையளபெடை

இ) செய்யுளிசை அளபெடை, சொல்லிசையளபெடை, ஒற்றளபெடை

ஈ) ஒற்றளபெடை, இன்னிசையளபெடை, சொல்லிசையளபெடை

6. செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் வினையெச்சமாக அளபெடுத்தால் அது .....................

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசையளபெடை

இ) ஒற்றளபெடை **ஈ) சொல்லிசையளபெடை**

7. ஆயுத எழுத்து அளபெடுப்பது ........................

அ) உயிரளபெடை **ஆ) ஒற்றளபெடை**

இ) சொல்லிசையளபெடை ஈ) இன்னிசையளபெடை

8. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது **மொழி** எனப்படும்

9. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது **மொழி** ஆகும்.

10. ஈதல், நடத்தல் என்பது **தொழிற்** பெயருக்கு எடுத்துக்காட்டாகும்.

**2. தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர் மொழிகளாக்குக.**

| **தனிமொழி** | - | **தொடர்மொழி** |
|---|---|---|
| தேன் | - | தேன்மொழி, தேன்தமிழ் |
| நூல் | - | நூல்சேலை, நூல் எழுதுக |
| பை | - | பை தா, பைந்தமிழ் |
| மலர் | - | மலர்விழி, மலர்கூடம் |
| வா | - | வா வெளியே, வா போகலாம் |

3. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக

காண் – காட்சி, காணுதல், காணல், காணாமை

சிரி – சிரிப்பு, சிரித்தல், சிரியாமை

படி – படிப்பு, படித்தல், படியாமை

தடு – தடுப்பு, தடித்தல், தடியாமை

**4. வினைமுற்றுகளை தொழிற்பெயர்களாக மாற்றுக**

| **வினைமுற்று** | | **தொழிற்பெயர்** |
|---|---|---|
| அழைக்கும் | - | அழை, அழைத்தல் |
| ஏறுவேன் | - | ஏறு, ஏறுதல் |
| அமர்வேன் | - | அமர், அமர்தல் |
| பார்ப்பேன் | - | பார், பார்த்தல் |
| எய்தும் | - | எய்து, எய்தல் |

5. கட்டு , சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் – இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக

கட்டு – முதனிலைத் தொழிற்பெயர்

சொட்டு – விகுதி பெறாத தொழிற்பெயர்

வழிபாடு – பெயர்ச்சொல்

கேடு – கெடு என்பதன் முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

கோறல் – விகுதி பெற்ற தொழிற்பெயர்

**6. தமிழாக்கம்**

1. If you talk to a man in a language he understands that goes to his head. if you talk him in his own language that goes to his heart.
   நீங்கள் ஒருவரிடம் ஒரு மொழியில் பேசினால் அவர் புரிந்து கொள்வார். அது அவர் தலையில் புரிகிறது (ஆனால்) அவருடைய மொழியில் அவரிடம் பேசினால் அது இதயத்தில் செல்கிறது.
2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going – Rita Mae Brown
   மொழி என்பது ஒரு கலாசாரம் செல்லும் சாலையின் வரைபடம். அதில் மக்கள் எங்கிருந்து வருகிறார்கள், எங்கு செல்கிறார்கள் என்பதை உங்களுக்குச் சொல்கிறது. – ரீட்டா மே ப்ரவுன்

**7. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக**

*தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை*
*தேரும் சிலப்பதி காறமதை*
*ஊளிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்*
*ஒதி யுனர்ந்தின் புருவோமே.*

**- கவிமணி தேசிக விநாயகனார்**

**விடை:**

*தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் – சுவை*
*தேரும் சிலப்பதி கா**ர** மதை*
*ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் – நிதம்*
*ஒதி உ**ண**ர்ந்தின் பு**று**வோமே.*

**- கவிமணி தேசிக விநாயகனார்**

**8. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டறிந்து எழுதுக**

| சொல் | | கூட்டப்பெயர் |
|---|---|---|
| கல் | - | கல்குவியல் |
| பழம் | - | பழக்குலை |
| புல் | - | புல்கட்டு |
| ஆடு | - | ஆட்டு மந்தை |

**9. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றிக் தொடர்களை இணைத்து எழுதுக**

1. கலையரங்கத்தில எனக்காக காத்திருக்கிறார்; அவரை அழைத்து வாருங்கள்
   **விடை:** கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்
2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
   **விடை:** ஊட்டமிகு உணவு உண்டதால் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்

**விடை:** நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்

4. பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

**விடை:** பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்து போட்டித் தேர்வில் வென்றார்.

**5. தொடர்களில் உள்ள அடிக்கோடிட்டச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக**

1. உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப் போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.

**விடை:** உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் உண்பதைப் போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.

2. வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.

**விடை:** வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த கவிஞருக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.

3. நளனும் அவனது துணைவியும் நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை முகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர்.

**விடை:** நளனும் அவனது மனைவியும் நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமேகம் கண்ட மயில் போல மகிழ்ச்சி கொண்டனர்.

4. சோலையிற் பூத்த மணமலர்களில் கரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.

**விடை:** தோட்டத்தில் பூத்த மணமலர்களில் வண்டுகள் மொய்த்துப் பண்பாடி தேன் உண்டன.

5. பசுப்போல சாந்தமும் புலிபோல் தீரமும் யானைபோல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**விடை:** ஆ போல அமைதியும் புலிபோல் வீரமும் யானைபோல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**6. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக**

**தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ**

பூமணி, தேன் மழை, பூவிலங்கு, வான்மழை, பொன் விலங்கு, விண் விளக்கு, மணி விளக்கு, பொன் மேகலை, மணிமேகலை.

**7. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க**

**குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்**

அ) குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

ஆ) தென்னை இளநீரில் சுவைக்காத இளநீர் ஏது?

இ) ஐம்பெரும் காப்பிய சுவை தமிழின் பெருமைக்கு எடுத்துக்காட்டாகுமா?

ஈ) மனிதகுல மேன்மைக்கு எது சிறந்தது?

உ) ஞாயிறு விடுமுறை நாளா?

**8. எண்ணுப் பெயர்களை கண்டு தமிழ் எண்களில் எழுதுக**

| செய்யுள் அடி | எண்ணுப் பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| 1. நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |

| | | |
|---|---|---|
| 2. எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| 3. ஐந்து சால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| 4. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச, உ |
| 5. ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

**9. பொருள் கூறுக**

அடிவி – காடு, நந்தவனம்

செறு – கோபம், வயல், குளம்

அவல் – நெற்பொரி, பள்ளி, குளம்

பழனம் – சோலை

சுவல் – தோள்கட்டு, முதுகு, குதிரை, விளைநிலம், கழுத்து முடி, மேடு

## இயல் – 2

## இயற்கை

### 1. கேட்கிறதா என் குரல்!

**முக்கிய குறிப்புகள்**

- கி.பி (பொ.ஆ) முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸ் என்னும் பெயர் கொண்ட கிரேக்க மாலுமி, பருவக் காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார். அது முதல் யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்திற்கு வந்து சென்றன. அந்தப் **பருவக் காற்றுக்கு** யவனர் அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய **ஹிப்பாலஸ்** என்பதையே சூட்டினார்கள். ஹிப்பாலஸ் பருவக் காற்றின் யவனக் கடல் வணிகம் பெருகிறது.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. செய்தி 1. ஒவ்வோர் ஆண்டும் ஜீன் 15ஐ உலக காற்று நாளாகக் கொண்டடி வருகிறோம்.
   செய்தி 2. காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
   செய்தி 3. காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்

   அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி

   இ) செய்தி 3 மட்டும் சரி **ஈ) செய்தி 1,3 ஆகியன சரி**

2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க

   | | | |
   |---|---|---|
   | அ) கொண்டல் | - | 1. மேற்கு |
   | ஆ) கோடை | - | 2. தெற்கு |
   | இ) வாடை | - | 3. கிழக்கு |
   | ஈ) தென்றல் | - | 4. வடக்கு |

   அ) 1, 2, 3, 4 **ஆ) 3, 1, 4, 2**

   இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

3. “மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீடிக்கும்” என்று கூறியவர் ……………..

   அ) ஔவையார் **ஆ) திருமூலர்**

இ) இளங்கோவடிகள் ஈ) சொக்கநாதப் புலவர்

4. “வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்” என்னும் வரிகள் இடம் பெற்ற நூல் ...................

**அ) சிலப்பதிகாரம்** ஆ) திருமந்திரம்

இ) ஔவைகுறள் ஈ) புறநானூறு

4. நூலோடு பாடல் வரிகளை பொருத்துக

அ) ஔவைகுறள் - 1. நந்தமிழ் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே

ஆ) பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது – 2. நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே

இ) புறாநனூறு – 3. வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம்

ஈ) திரை இசைப்பாடல் - 4. நனியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளி தொழில் ஆண்ட உரவோன் மருக! களி இயல் யானைக் கரிகால் வளவ!

**அ) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ - 2** ஆ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ - 4

இ) அ – 4, ஆ – 1, இ – 3, ஈ - 2 ஈ) அ – 3, ஆ – 2, இ – 1, ஈ – 4

5. “கடல் காற்று மணலைக் கொண்டு சேர்க்கிறது” எனக் கூறியவர் ................. இடம் பெற்ற நூல் .........

அ) ஔவையார், ஔவைகுறள் **ஆ) மதுரை இளநாகனார், புறம்**

இ) மதுரை இளநாகனார், அகம் ஈ) திருமூலர், புறம்

## 2. காற்றே வா!

**- பாரதியார்**

**முக்கியக் குறிப்புகள்**

- மகாகவி சுப்பிரமணிய பாரதியார், ‘நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா,’ ‘சிந்துக்குத் தந்தை’ என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்.
- சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்தையும் தன் பாடல்களில் எதிர்த்து எழுதியவர்.
- குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களையும் கண்ணன் பாட்டையும் பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி என குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர்.
- இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்பட்டவர் பாரதியார்.

**1. சொல்லும் பொருளும்:**

| | | |
|---|---|---|
| மயலுறுத்து | – | மயங்கச் செய் |
| ப்ராண ரஸம் | - | உயிர்வளி |
| லயத்துடன் | - | சீராக |
| மகரந்தம் | - | மலர்தாது |

**2. எதிர்சொல் அறிக**

| | | |
|---|---|---|
| மிகுந்த | x | குறைந்த |
| மெதுவாக | x | விரைவாக |
| புகழ் | X | இகழ் |

3. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" பாரதியின் இவ்வடிகளில் பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை **ஆ) மோனை, எதுகை**
இ) முரண், இயைபு ஈ) உவகை, எதுகை

2. காற்றே வா
எமது உயிர் – நெருப்பை நீடித்து நின்று நல்லொளி தருமாறு
நன்றாக வீசு – எனப் பாடியவர் ......................
அ) பாரதிதாசன் **ஆ) சுப்பிரமணிய பாரதியார்**
இ) தேவநேயப் பாவாணர் ஈ) பாவலேறு பெருஞ்சித்திரனார்

3. "காற்றே வா" என்ற கவிதைப் பேழை கீழேயுள்ள எக்கவிதை வடிவில் அடங்கியது ................
அ) மரபுக்கவிதை ஆ) ஹைக்கூ கவிதை
**இ) புதுக்கவிதை** ஈ) சந்தக்கவிதை

4. "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா" எனப் போற்றப்பட்டவர் ..........................
**அ) பாரதியார்** ஆ) சுத்ததானந்த பாரதியார்
இ) சோமசுந்தர பாரதியார் ஈ) ராஜபாரதி

## 3. முல்லைப்பாட்டு

**- நப்பூதனார்**

### முக்கிய குறிப்புகள்

- முல்லை நிலத்திற்குரிய முப்பொருளைக் கூறுக
  முதற்பொருள் : நிலமும் பொழுதும்
  நிலம் : காடும் காடு சாந்த இடமும்
  பொழுது : பெரும்பொழுது : கார்காலம்
  சிறுபொழுது : மாலைநேரம்
  கருப்பொருள் : தெய்வம், உயர்ந்தோர், பறவை, விலங்கு, ஊர், நீர், மரம், பூ, உணவு, பறை, யாழ், பண், தொழில்
  உரிப்பொருள் : இருந்தலும் இருத்தல் நிமித்தமும்.
- முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இது 103 அடிகளைக் கொண்டது. இப்பாடலின் 1 – 17 அடிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன. முல்லைப்பாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.
- முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.
- பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் இது.
- இதைப் படைத்தவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.
- பாடப்பகுதியின் பாடலில் இடம் பெற்றுள்ள முல்லைத்திணைகுரிய முதல், கரு, உரிப்பொள்கள்
  முதற்பொருள்: இடம் : முல்லை – காடும் காடு சார்ந்த நிலம்
  காலம்: பெரும்பொழுது – கார்காலம்
  சிறுபொழுது – மாலை
  கருப்பொருள் : நீர் – காட்டாறு, மழை, மேகம்

மரம் – கொன்றை, தெய்வம் – திருமால்

பூ – முல்லை, பிடவம்

உரிப்பொருள்: இருத்தலும், இருத்தல் நிமித்தமும்.

**1. இலக்கணக்குறிப்பு**

| | | | |
|---|---|---|---|
| மூதூர் | – | பண்புத்தொகை | உறுதுயர் – வினைத்தொகை |
| கைதொழுது - | | மூன்றாம் வேற்றுமைத்தொகை | தடக்கை – உரிசொல் தொடர் |

**மாஅல்** – பெயரடை – திருமாலைக் குறிக்கும் சொல் பொருள்

ஒரு பெயரைக் குறித்து மேலும் விரிவு தருமாறு அமையும் சொல் பெயரை சிறப்பிக்கும் அடையாக வருவது. இதனை **குறிப்புப் பெயரெச்சம்** என்று கூறுவர்.

**2. பகுபத இலக்கணம்:**

பொறித்த – பொறி + த் + த் + அ

பொறி – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

**3. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. பாடு இமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

**அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்** ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

2. 'சிறுபுன் மாலை' எனச் சுட்டப் பெறுவது.

**அ) முல்லை நிலச் சிறுபொழுதாகிய மாலைநேரம்** ஆ) முல்லை பூமாலை

இ) சிறிய பூமாலை ஈ) அழகிய பூமாலை

3. சொற்களைப் பொருளோடு பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) நனைந்தலை உலகம் | - | 1. சுழற்சி |
| ஆ) ஆய்மகள் | - | 2. மலை |
| இ) நன்மொழி | - | 3. இடையர் குலப்பெண் |
| ஈ) கோடு | - | 4. அகன்ற உலகம் |
| உ) அலமரல் | - | 5. விரிச்சி |

அ) 1, 2, 3, 4, 5 ஆ) 5, 4, 3, 2, 1 **இ) 4, 3, 5, 2, 1** ஈ) 3, 2, 1, 5, 4

## 4. புயலிலே ஒரு தோணி

**- ப. சிங்காரம்**

**முக்கிய குறிப்புகள்**

- புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம், புயலிலே ஒரு தோணி. இந்நூலாசிரியர் ப.சிங்காரம் (1920 – 1997).
- இந்தோனேசியாவில் இருந்தபோது, தென்கிழக்காசியப் போர் மூண்டது. அச்சூழலில், மலேசியா, இந்தோனேசியா பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பு இப்புதினம். அதில் **கடற்கூத்து** என்னும் அத்தியாயத்தின் சுருக்கப்பட்ட பகுதி இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.
- ப.சிங்காரம் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியைச் சேர்ந்தவர்.

- வேலைக்காக இந்தோனேசியா சென்றார். மீண்டும் இந்தியா வந்து தினத்தந்தி நாளிதழில் பணியாற்றினார்.
- இவர் அன்றைய சூழலில் அவருடைய சேமிப்பான ஏழரை இலட்சம் ரூபாயை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கினார்.
- புயலுக்கு முன்பு பேரழிவு பற்றிய விழிப்புணர்வு, தயாரிப்பு, பேரிடர் மேலாண்மை, பாதிப்புக் குறைப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்வதற்குப் புயலின் பெயர்கள் உதவும்.
- வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை 2000 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- புதுதில்லியில் உள்ள உலக வானிலை அமைப்பின் மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம் 2004 செப்டம்பரில் இருந்து புயல்களுக்குப் பெயர் வைக்க 64 பெயர்களைப் பட்டியலிட்டுள்ளது.
- சார்க் அமைப்பில் இருக்கும் வங்கதேசம், இந்தியா, மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் இந்தப் பெயர்களை வழங்கியுள்ளன.
- இதில் இந்தியா கொடுத்து ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பெயர்கள் அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல் (நான்கு பூதங்கள் கடைசியாக லெஹர் (அலை) இன்னும் வரவிருப்பவை மேக், சாஹர், வாயு என்பவை. கஜா புயலின் பெயர் இலங்கை தந்தது. அடுத்து வந்த 'பெய்ட்டி' புயல் பெயர் தாய்லாந்து தந்தது.
- **இடம்புரிப் புயலும் வலம்புரிப் புயலும்:** மேட்டிலிருந்து தாழ்வுக்குப் பாயும் தண்ணீர்போல, காற்றழுத்தம் அதிகமான இடத்திலிருந்து, குறைவான இடத்துக்குக் காற்று வீசும். இப்படி வீசும் காற்றின் போக்கை, புவி தனது அச்சில் மேற்கிலிருந்து கிழக்காகச் சுழல்கையில் மாற்றும். நிலநடுக்கோட்டின் வடக்குப் பகுதியில் வீசும். காற்றை வலப்புறமாகத் திருப்பும். தெற்குப் பகுதியில் வீசும் காற்றை இடப்புறமாகத் திருப்பும். காற்றின் வேகம் கூடினால் இந்த விலக்கமும் கூடும்.
- வங்கக் கடலில் வீசும் புயலும், அமெரிக்காவை, ஜப்பானை, சீனாவைத் தாக்கும் புயல்களும் **இடம்புரிப் புயல்கள்!**
- ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரை, ஹவாய் தீவுகளைத் தாக்கும் புயல்கள் **வலம்புரிப் புயல்கள்!**
- பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கணித வல்லுநர் **காஸ்பார்ட் குஸ்டாவ் கொரியாலிஸ்** இந்த விளைவை 1835இல் கண்டுபிடித்தார். புயலின் இந்த இருவகைச் சுழற்சிக்குக் **கொரியாலிஸ் விளைவு** என்று பெயர்.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. "கப்பித்தான்" என்ற சொல் குறிக்கும் பொருள் .......................

அ) தலைப்பொறியாளர் ஆ) தலைமைச் செயலாளர்

**இ) தலைமை மாலுமி** ஈ) தலைமை விமானி

2. வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயலுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை தொடங்கிய ஆண்டு ............

அ) 2001 **ஆ) 2000**

இ) 1996 ஈ) 1900

3. 2018 நவம்பரில் வீதிய புயலுக்கு 'கஜா' எனப் பெயரிட்ட நாடு .................

**அ) இலங்கை** ஆ) இந்தியா

இ) வங்கதேசம் ஈ) தாய்லாந்து

4. வானுடன் கடல் கலந்துவிட்டது. மழை தெரியவில்லை வளியுடன் இணைந்து விட்டது. தொங்கான் அப்படியும் இப்படியுமாய்த் தாவிக்குதித்து விழுந்து தத்தளித்தது" – இத்தொடரில் தொங்கான் எனக் குறிப்பது ..................

அ) கடலை ஆ) கடல்மீனை

**இ) கப்பலை** ஈ) காற்றை

5. 2018 டிசம்பரில் வீசிய 'பெய்ட்டி' புயலுக்கு பெயர் சூட்டியநாடு ...................

அ) பாகிஸ்தான் ஆ) மாலத்தீவு

இ) மியான்மர் **ஈ) தாய்லாந்து**

## 5. தொகைநிலைத் தொடர்கள்

**1. தொடர் என்றால் என்ன?**

ஒரு சொல் மற்றொரு சொல்லோடு பொருள் அமையத் தொடர்வது **தொடர்** எனப்படும்.

**2. தொகை நிலைத் தொடர் என்பது யாது?**

பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும், பெயர்ச் சொல்லோடு பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கு (மறைந்து) நிற்குமானால் **'தொகை நிலைத் தொடர்'** எனப்படும்.

**எ.கா:** கரும்பு தின்றான்

**3. தொகை நிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொகை நிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பனவாகும்.

**4. வேற்றுமைத்தொகை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?**

இரண்டு முதலாய் ஏழு வரையுள்ள வேற்றுமையுருபுகள் மறைந்து நிற்க இரு சொற்கள் தொடர்வது வேற்றுமைத்தொகை எனப்படும். அது ஆறு வகைப்படும்.

**5. வேற்றுத்தொகையின் உருபுகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக**

தண்ணீர் குடித்தான் – (ஐ) தண்ணீரைக் குடித்தான் – இரண்டாம் வேற்றுமைத்தொகை உருபு)

தலை வணங்கு (ஆல்) மூன்றாம் வேற்றுமைத்தொகை (தலையால் வணங்கு)

மதுரை சென்றேன் (கு) நான்காம் வேற்றுமைத்தொகை உருபு (மதுரைக்குச் சென்றேன்)

ஊர் நீங்கினான் (ஆன்) ஐந்தாம் வேற்றுமைத்தொகை உருபு (ஊரின் நீங்கினான்)

கம்பர் பாடல் (அது) ஆறாம் வேற்றமைத்தொகை (கம்பரது பாடல்)

கடல் வாழ் உயிரினங்கள் (கண்) ஏழாம் வேற்றுமைத்தொகை (கடலின் கண் வாழ் உயிரினங்கள்)

**6. 'உருபும், பயனும் உடன் தொக்க தொகை' என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக**

ஒரு தொடரில் வேற்றுமை உருபும், அதன் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வருவது "உருபும் பயனும் உடன் தொக்க தொகை" எனப்படும்.

**எ.கா:** தேர்ப்பாகன்

இத்தொடர் தேரை ஒட்டும் பாகன் என விரிந்து பொருளை உணர்த்துகிறது. தேர்பாகன் என்னும் இரு சொற்களுக்கு இடையே 'ஐ' என்னும் வேற்றுமை உருபும் ஒட்டும் என்னும் பொருள் விளக்கும் பயனும்

மறைந்து வந்துள்ளன. இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபும், அதன் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வருவது "உருபும் பயனும் உடன் தொக்க தொகை" எனப்படும்.

**7. வினைத்தொகை என்றால் என்ன?**

காலம் காட்டும் இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப்பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து, ஒரு சொல்லைப் போல நடப்பது வினைத்தொகை எனப்படும். இது காலம் கரந்த பெயரெச்சமே வினைத்தொகையாகும்.

**8. வினைத்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

வீசு தென்றல், கொல் களிறு

வீசு, கொல் என்பவை வினைப் பகுதிகளாகும். இவை முறையே தென்றல், களிறு என்னும் பெயர்களோடு சேர்ந்து காலத்தை வெளிப்படுத்தாத பெயரெச்சங்களாயின. மேலும் இவை வீசிய தென்றல் வீசுகின்ற தென்றல் வீசும் தென்றல் எனவும் கொன்ற களிறு கொல்லுகின்ற களிறு கொல்லும் களிறு எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும் படி வந்து பொருள் தரும். இவற்றில் காலம் காட்டும் இடைநிலைகள் இவற்றில் தொக்கி இருக்கின்றன.

**9. பண்புத்தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக**

நிறம் வடிவம், சுவை முதலான பண்பை உணர்த்தும் பண்புப்பெயருக்கும், அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் 'மை' என்னும் பண்பு விகுதியும், ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருமாயின் அதுவே **பண்புத்தொகை** எனப்படும்.

**எ.கா:** செங்காந்தன் – செம்மையாகிய காந்தள்

வட்டத்தொட்டி – வட்டமான தொட்டி

மேலேயுள்ள எடுத்துக்காட்டில் ஆகிய ஆன என்னும் பண்பு உருபுகள் மறைந்துள்ளதை அறியலாம்.

**10. இரு பெயரொட்டுப் பண்புத்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

சிறப்புப்பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னுமாய் அமைந்த இரு சொற்களுக்கிடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு **இரு பெயரொட்டு பண்புத்தொகை** எனப்படும்.

**எ.கா:** மார்கழித் திங்கள், சாரைப்பாம்பு

திங்கள், பாம்பு என்னும் பொதுப் பெயர்களுக்கு முன் மார்கழி, சாரை என்னும் சிறப்புப் பெயர்கள் வந்து மார்கழி ஆகிய திங்கள், சாரை ஆகிய பாம்பு என்னும் புண்புருபுக்கு இடையில் மறைந்து நின்று உள்ளன. இவ்வாறு வருவதே **இரு பெயரொட்டு பண்புத்தொகையாகும்**.

**11. உவமைத்தொகையை சான்றுகளுடன் விளக்குக**

உவமைக்கும், உவமிக்கப்படும் பொருளுக்கும் இடையில் போல, போன்ற, நிகர, அன்ன என்றும் உவம உருபுகளுள் ஒன்று தொக்கி நிற்க வரும் தொடர் **உவமைத்தொகை** எனப்படும்.

**எ.கா:** மலர்க் கை, மலர் போன்ற கை

மலர் – உவமை, கை – உவமேயம் (பொருள்) இடையே போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

**12. உம்மைத்தொகை என்றால் என்ன? அது எவற்றைத் தொடர்ந்து வரும். எடுத்துக்காட்டு தருக**

இரு சொற்களுக்கு இடையிலும், ஈற்றிலும் 'உம்' என்னும் எண்ணிடைச் சொல் மறைந்து வருவதே **உம்மைத்தொகை** எனப்படும்.

உம்மைத்தொகை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்.

**எ.கா:** அண்ணன் தம்பி, தாய் சேய்

இவை அண்ணனும் தம்பியும், தாயும் சேயும் என விரியும். இரு சொற்களுக்குமிடையில் 'உம்' மறைந்துள்ளதால் **உம்மைத்தொகையாகும்.**

**13. அன்மொழித்தொகையைச் சான்றுடன் விளக்குக**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, ஆகிய தொகை நிலைத் தொடர்கள் அடுத்து அவையல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருவது **அன்மொழித்தொகை** எனப்படும்.

**எ.கா:** சிவப்புச் சட்டை பேசினார், முறுக்கு மீசை வந்தார்

இவற்றில் சிவப்புச் சட்டை அணிந்தவர் பேசினார். முறுக்கு மீசை உடையவர் வந்தார் எனத் தொகை நிலைத் தொடர் அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருகின்றன. இவ்வாறு வருவது **அன்மொழித்தொகை** எனப்படும்.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. பெரிய மீசை சிரித்தார் – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?

**அ) பண்புத்தொகை** ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

2. வீசுதென்றல், கொல்களிறு, வளர்பிறை என்பன ...................

அ) பண்புத்தொகை **ஆ) வினைத்தொகை**
இ) வேற்றுமைத்தொகை ஈ) உவமைத்தொகை

3. இன்மொழி, செந்தமிழ், வட்டத்தொட்டி என்பன ...................

அ) வினைத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை
இ) உவமைத்தொகை **ஈ) பண்புத்தொகை**

4. மலர்க்கை, கயல்விழி என்பது ..................

**அ) உவமைத்தொகை** ஆ) பண்புத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) வினைத்தொகை

5. முறுக்கு மீசை வந்தார், சிவப்புச் சட்டை பேசினார் என்பது .....................

**அ) அன்மொழித்தொகை** ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) பண்புத்தொகை

6. பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) அன்மொழித்தொகை | - | 1. மதுரை சென்றார் |
| ஆ) உவமைத்தொகை | - | 2. அண்ணன் தம்பி |
| இ) வேற்றுமைத்தொகை | - | 3. செங்காந்தாள் |
| ஈ) உம்மைத்தொகை | - | 4. முறுக்கு மீசை வந்தார் |
| உ) பண்புத்தொகை | - | 5. மலர்க்கை |

**அ) 4, 5, 1, 2, 3** ஆ) 1, 2, 3, 4, 5
இ) 5, 4, 3, 2, 1 ஈ) 3, 2, 1, 5, 4

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது **சொற்றொடர்**
2. வேற்றமை உருபுகள் **ஐ, ஆல், கு, இன், கண், அது** என்பனவாகும்.
3. உம்மைத்தொகையில் இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் **உம்** என்னும் இடைச்சொல் மறைந்துவரும்.
4. சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கிவந்தால் **இருபெயரொட்டுப் பண்புத்தொகை** எனப்படும்.
5. தொகைநிலைத் தொடர் **ஆறு** வகைப்படும்
6. செம்மொழி, கருங்குவளை, செந்தாமரை என்பவை **பண்புத்தொகைக்கு** எடுத்துக்காட்டாகும்.

**3. கோடிட்ட தொகைச் சொற்களை வகைப்படுத்துக**

1. அன்புச் செல்வன் திறன் பேசியின் **தொடு திரையில்** படித்துக் கொண்டிருந்தான்
2. அனைவருக்கும் **மோர்ப்பானையைத்** திறந்து மோர் கொடுக்கவும்
3. வெண்டக்காய் பொரியல் **மோர்குழம்புக்குப்** பொருத்தமாக இருக்கும்.
4. தங்கமீன்கள் **தண்ணீர் தொட்டியில்** விளையாடுகின்றன.

1. தொடு திரை - வினைத்தொகை
2. மோர்ப்பானை - வேற்றுமைத்தொகை
3. மோர்க்குழம்பு - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
4. தண்ணீர் தொட்டி - உருபும் பயனும் உடன் தொக்க தொகை

**4. தமிழில் மொழி பெயர்த்துத் தலைப்பிடுக**

The golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flower's fragrance fills the breeze gently blows everywhere and makes everything pleasant.

**தலைப்பு: காலை உதயமும் – அமைதியும்**

காலையில் தங்க நிறமாக சூரியன் உதிக்கத் தொடங்கியதும், அதன் ஒலியின் காரணமாக இரவில் பளிச்சென்று வெளிச்சமாக இருந்த நட்சத்திரங்களுள் ஒலியும், இரவும் மறையத் தொடங்கியது. வெண்ணிறமான மேகங்களும் விலகின. வண்ணமயமான பறவைகள் காலை நேரத்தில் தங்கள் மென்மையான குரலில் பாடின. அழகான வண்ணத்துப்பூச்சிகள் சிறகை அடித்து பூக்களைச் சுற்றி நடனமாடின. பூக்கள் மென்மையாக மலர்ந்தன. பூக்கள் மலர்ந்தும் எங்கும் அமைதி நிறைந்தன.

**5. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க**

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தான், மலை, வாழ்வார், முத்துப்பல்

**இன்சொல்** – பண்புத்தொகை

இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு

**எழுகதிர்** – வினைத்தொகை

கார்காலத்தில் கிழக்கில் ஏழுகதிர் தோன்றுவது கண்ணையும் கருத்தையும் மயங்கச் செய்யும்.

**கீரிபாம்பு** – உம்மைத்தொகை

கீரியும் பாம்பும் என்றும் பகையே

**பூங்குழல் வந்தாள்** – அன்மொழித்தொகை

அவளின் கூந்தலைக் கண்டு வந்தோர்கள் பூங்குழல் வந்தாள் எனப் பேசினர்.

**மலைவாழ்வார்** – வேற்றுமைத்தொகை

மலைவாழ்வார் குறிஞ்சி நில மக்கள் எனப்படுவர்.

**முத்துபல்** – பண்புத்தொகை

காவியா முத்துப்பல் வரிசை உடையவள்

**6. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க**

1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும். – **நறுமணம்**
2. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும் – **புதுமை**
3. இருக்கும் போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை – **காற்று**
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும் – **விண்மீன்**
5. ஒரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம் - **காடு**

**7. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எழுத்தெழுதுக**

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது; வானம் இருண்டது; வாடைக் காற்று வீசியது.

   **விடை:** காற்றின் பாடல்
2. புவி சிலிர்த்து மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.

   **விடை:** மொட்டின் வருகை
3. சோலைக்குள் சந்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.

   **விடை:** மிதக்கும் வாசம்
4. இரவில் இருளமைதியில் இரைச்சலாய் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம் மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினங்கள்.

   **விடை:** உயிர்ப்பின் ஏக்கம்
5. நின்று விட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும், மரங்களிலிருந்தும் விழும் மழைநீர் பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.

   **விடை:** நீரின் சிலிர்ப்பு
6. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்.

   **விடை:** வானத்தின் நடனம்

**8. பொருள் கூறுக**

அகன்சுடர் – கதிரவன், உள்ளே பரந்து விரிந்த சுடர்

ஆர்கலி – கடல்

கட்புள் – பறவை

கொடுவாய் – வளைந்தவாய், குறளை, புலிவகை, மீன்வகை

திருவில் – வானவில், சிறப்புடைய வில்

## இயல் – 3 : பண்பாடு

## 1. விருந்து போற்றுதும்!

**முக்கிய குறிப்புகள்**

- பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது, அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தினர். மேலும், வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கிற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர் – **பொருநராற்றுப்படை, (166)**
- அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் **'வாழையிலை விருந்து விழா'** வை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. பின்வருவனவற்றுள் முறையான தொடர்
   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
   ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
   **இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு**
   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு
2. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை –
   அ) நிலத்திற்கேற்ற விருந்து **ஆ) இன்மையிலும் விருந்து**
   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
3. திருவள்ளுவர் விருந்தோம்பலை அமைத்த இயல்
   அ) அமைச்சியல் ஆ) படைப்பியல்
   இ) துறவறவியல் **ஈ) இல்லறவியல்**
4. உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
   அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
   தமியர் உண்டலும் இலரே...
   என விருந்தினர் போற்றுதலைக் கூறும் நூல்.
   அ) அகநானூறு **ஆ) புறநானூறு**
   இ) குறுந்தொகை ஈ) நெடுந்தொகை
5. விருந்தினர் வழியனுப்பும்பொழுது, ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர் என்பதைத் தெரிவிக்கும் நூல்
   அ) திருமுருகாற்றுப்படை ஆ) பெரும்பாணாற்றுப்படை
   **இ) பொருநராற்றுப்படை** ஈ) சிறுபாணாற்றுப்படை
6. இளையான்குடி மாறனார் விருந்தினரை உபசரித்த நிலையை விவரிக்கும் நூல்
   **அ) பெரியபுராணம்** ஆ) அரிச்சந்திர புராணம்
   இ) கந்தபுராணம் ஈ) திருவிளையாடல் புராணம்
7. விருந்து பற்றி கூறும் பாடலை வரிகளை நூலுடன் பொருத்துக

அ) தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழிந்த என்னை -1. குறுந்தொகை
ஆ) அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும் - 2. புறநானூறு
இ) குரல் உணங்கு விதைத்திணை உரல்வாய்ப் பெய்து சிறிது புறப்பட்டன்றோ இலள் - 3. நற்றிணை
ஈ) பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ - 4. சிலப்பதிகாரம்

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 2, 1, 4
இ) 1, 3, 2, 4 **ஈ) 4, 3, 2, 1**

8. "விருந்தினரும் வரியவரும் நெருங்கியுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" எனக் கூறும் நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) திருக்குறள்
**இ) கலிங்கத்துப்பரணி** ஈ) புறநானூறு

9. அன்றை காலத்தில் விருந்தினர் என்போர்
அ) நண்பர்கள் ஆ) உறவினர்கள்
இ) தெரிந்தவர்கள் **ஈ) முன்பின் அறியாத புதியவர்**

10. மோப்பக்குழையும் அனிச்சம் என்னும் திருக்குறளை நிறைவு செய்யும் அடுத்த தொடர் ..................
அ) முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல் ஆ) விருந்தின் துணைத்துணை வேள்விப்பயன்
**இ) முகம்திரிந்து நோக்கக் குழையும் விருந்து** ஈ) விருந்தோம்பு வேளாண்மை செய்தல் பொருட்டு

## 2. காசிக்காண்டம்

**- அதிவீரராம பாண்டியர்**

**முக்கிய குறிப்புகள்**

- காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம்.
- இந்நூல் துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது.
- **'இல்லொழுக்கங் கூறிய'** பகுதியிலுள்ள பதினேழாவது பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.
- முத்துக்குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீரராம பாண்டியர். தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்த இவர் இயற்றிய நூலே காசிக்காண்டம்.
- இவரின் மற்றொரு நூலான **வெற்றி வேற்கை** என்றழைக்கப்படும் நறுந்தொகை சிறந்த அறக்கருத்துகளை எடுத்துரைக்கிறது.
- **சீவலமாறன்** என்ற பட்டப்பெயரும் இவருக்கு உண்டு.
- நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் ஆகியனவும் இவர் இயற்றிய நூல்கள்

### 1. இலக்கணக் குறிப்பு

ஒழுக்கமும், வழிபாடும் - உம்மைத்தொகை
நன்மொழி - பண்புத்தொகை
வியத்தல், நோக்கல், எழுத்தல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கள் - தொழிற்பெயர்கள்
வருக - வியங்கோள் வினைமுற்று

### 2. பகுபத உறுப்பிலக்கணம்

**உரைத்த – உரை + த் + த் + அ**

உரை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி,

வருக – வா(வரு) + க, வா – பகுதி – வா எனக் குறுகியலுது விகாரம், க – விளங்கோள் வினைமுற்று விகுதி

சொல்லும் பொருளும்: அருகுற – அருகில்

முகமன் – ஒருவரை நலம் விசாரித்து விருந்தோம்பும் சொல்

நன்மொழி – நல்ல சொற்கள்

**3. பிரித்து எழுதுக**

எதிரின் = எதிர் + இன்

நன்மொழி = நல்ல + மொழி

**4. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. காசிக்காண்டம் என்பது ..........................

அ) காசி நகரத்தின் வரலாற்றைப்பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

**இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்** ஈ) காசி நகரத்திற்கு வழிபடுத்தும் நூல்

2. காசிக் காண்டம் நூலை இயற்றியவர் ..................

**அ) அதிவீரராம பாண்டியர்** ஆ) வீரராம பாண்டியர்

இ) சுந்தர பாண்டியன் ஈ) வரகுண ராமபாண்டியன்

3. அதிவீரராம பாண்டியர் எழுதிய புராண நூல்கள் ......................

அ) கந்தபுராணம், திருக்காளத்தி புராணம் **ஆ) லிங்கபுராணம், கூர்ம புராணம்**

இ) கோயிற்புராணம், திருவிளையாடர் புராணம் ஈ) மகாபுராணம், கூர்மபுராணம்

4. வெற்றிவேற்கை நூலின் வேறு பெயர் ..........................

அ) குறுந்தொகை ஆ) எட்டுத்தொகை

**இ) நறுந்தொகை** ஈ) கலித்தொகை

## 3. மலைப்படுகடாம்

**- பெருங்கௌசிகனார்**

**முக்கிய குறிப்புகள்**

- சங்ககாலத்து தொகுப்பு நூலான பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மலைபடுகடாம். இத்தொகுப்பிலுள்ள பத்து நூல்களுள் 583 அடிகளால் ஆகிய இரண்டாவது பெரிய நூல்.
- இந்நூலைக் **கூத்தராற்றுப்படை** என்றும் கூறுவர்.
- மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் மலைபடுகடாம் எனக் கற்பனை நயம் வாய்ந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது
- இந்நூல் நன்னன் என்னும் மலையின் தலைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு **இராணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்** பாடப்பெற்றது. மலை மக்களின் வாழ்க்கை முறை, தலைவனின் கொடைத் திறத்தைப் புகழ்ந்து பாடும் நூல்.
- ஆற்றுப்படுத்தும் கூத்தன் வள்ளலை நாடி எதிர் வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் **ஆற்றுப்படை.**

- திருமுருகாற்றுப்படை, முல்லைப்பாட்டு, பொருநராற்றுப்படை, மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை, நெடுநல்வாடை, பெரும்பாணாற்றுப் படை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், பட்டினப்பாலை ஆகியவை **பத்துப்பாட்டு தொகுப்பில் உள்ள நூல்கள்**
- பத்துப்பாட்டில் மலைபடுகடாம் கூத்தராற்றுப்படையுடன் சேர்த்து **ஆற்றுப்படை நூல்கள் ஐந்து** ஆகும்.
- ஆற்றுப்படை நூல்களில் பயின்றுவரும் திணை **பாடாண் திணையாகும்**.
- பாடு + ஆண் + திணை: பாடாண்திணை – பாடப்படும் ஆண்மகனின் பெருமை, வீரம், கொடை போன்றவற்றை சிறப்பித்துப் பேசும் நூல்
- "இறடிப் பொம்மல் பெறுகுவீர்" – "தினைச் சோற்றினை உணவாகப் பெறுவீர்" என்று பொருள்.

**1. சொற்பொருள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அசைஇ | - | இளைப்பாறி | பாக்கம் | - | பக்கத்தில் உள்ள ஊர் |
| அல்கி | - | தங்கி | வயிரியம் | - | கூத்தர் |
| கன்று எரி | - | கனன்றுஎரி | வேவை | - | வெந்தது |
| கடும்பு | - | சுற்றம் | இறடி | - | தினை |
| சேந்த | - | சிவந்த | பொம்மல் | - | சோறு |
| நரலும் | - | ஒலிக்கும் | கெழீஇ | - | கெழுவிய, தழுவி |
| ஆரி | - | அருமை | கிழவிர் | - | உரிமை, உடையர் |
| படுகர் | - | பள்ளம் | குரூஉ | - | நியம் |

**2. இலக்கணக்குறிப்பு**

அசைஇ, கெழீஇ – சொல்லிசை அளபெடை

பரூஉக், கரூஉக்கண் – செய்யுளிசை அளபெடை

**3. பகுபத உறுப்பிலக்கணம்**

மலைந்து – மலை + த்(ந்) + த் + உ

மலை – பகுதி; த் – சந்தி(ந்) ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

பொழிந்த – பொழி + த்(ந்) + த் + அ

பொழி – பகுதி; த் – சந்தி(ந்) ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

**4. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது ................

அ) புத்தூர் ஆ) மூதூர்

இ) பேரூர் **ஈ) சிற்றூர்**

2. இறடிப் பொம்மல் என்பது .......................

**அ) தினை சோறு** ஆ) அரிசி சோறு

இ) நொய் சோறு ஈ) இவை ஏதுமில்லை

3. மலைபடு கடாயில் இடம் பெறும் குறுநிலமன்னன் ...........................

அ) நல்லான் **ஆ) நன்னன்**

இ) பழையன் ஈ) பெருவழுதி

4. சொல்லுடன் பொருளைப் பொருத்துக

அ) கடும்பு - 1. தினை
ஆ) வயிரியம்- 2. பள்ளம்
இ) படுகர் - 3. கூத்தர்
ஈ) பொம்மல் - 4. சுற்றம்
உ) இறடி - 5. சோறு

அ) 1, 2, 5, 4, 3 ஆ) 4, 3, 2, 5, 1
இ) 5, 4, 3, 2, 1 ஈ) 3, 5, 1, 2, 4

5. மலைபடுகடாம் ...................... எனவும் அழைக்கப்படுகிறது.

**அ) கூத்தராற்றுப்படை** ஆ) திருமுருகாற்றுப்படை
இ) பொருணராற்றுப்படை ஈ) சிறுபாணாற்றுப்படை

## 4. கோபல்லபுரத்து மக்கள்

**- கி.ராஜநாராயணன்**

### முக்கிய குறிப்புகள்

- கோபல்ல கிராமம் என்னும் புதினத்தைத் தொடர்ந்து எழுதப்பட்ட கதையே கோபல்லபுரத்து மக்கள்.
- ஆசிரியர் தன் சொந்த ஊரான இடைசெவல் மக்களின் வாழ்வியல் காட்சிகளுடன் கற்கனையையும் புகுத்து இந்நூலினைப் படைத்துள்ளார்.
- இந்திய விடுதலைப் போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது இந்நூல்.
- இது 1991ஆம் ஆண்டிற்கான **சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்றது**.
- கோபல்லபுரத்து மக்கள் கதையின் ஆசிரியர் **கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணன்**.
- இவரின் கதைகள் ஒரு கதைசொல்லியின் கதைப்போக்கில் அமைந்திருக்கும். இவரின் கதைகள் அனைத்தும் **கி.ராஜநாராயணன்** கதைகள் என்னும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.
- இவர் **கரிசல் வட்டாரச் சொல்லகராதி** ஒன்றை உருவாக்கியுள்ளார். இவர் தொடங்கிய வட்டாரமரபு வாய்மொழிப் புனைகதைகள் **'கரிசல் இலக்கியம்'** என்று அழைக்கப்படுகின்றன. எழுத்துலகில் இவர் **கி.ரா** என்று குறிப்பிடப்படுகிறார்.
- புகழ்பெற்ற சிவகதை எழுத்தாளர் கு.அழகிரிசாமி இவரது கிராமத்தைச் சேர்ந்தவர்.

### 1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. கரிசல் இலக்கியம் தோன்றிய வட்டாரப் பகுதி ......................

அ) காரியப்பட்டி **ஆ) கோவில்பட்டி**
இ) காங்கேயன்பட்டி ஈ) கருப்பட்டிப்பட்டி

2. சிரட்டை என்பது குறிக்கும் பொருள் ......................

**அ) கொட்டாங்கச்சி** ஆ) கிண்ணம்
இ) மண்கலயம் ஈ) பானை

3. வெட்டவெட்டத் தலைமுளைக்கும் அரக்கன் போல எனக் கூறப்படுவது ....................

**அ) அருகு** ஆ) சிறகு
இ) வரகு ஈ) பயிறு

4. வட்டாரச் சொல்லை கண்டு பொருத்துக

அ) அலுக்கம் - 1. வாய்வைத்துக்குடித்தல்
ஆ) பதனம் - 2. தொலைவில்
இ) மகுளி - 3. கவனமாக
ஈ) தொலவட்டையில் - 4. அழுத்தம்
உ) கடிச்சு குடித்தல் - 5. சோற்றுக்கஞ்சி

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4, உ – 5
ஆ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 5, உ – 1
**இ) அ – 4, ஆ – 3, இ – 5, ஈ – 2, உ – 1**
ஈ) அ – 5, ஆ – 4, இ – 3, ஈ – 2, உ – 1

**5. வட்டார வழக்குச் சொற்கள்**

| | | |
|---|---|---|
| பாச்சல் | - | பாத்தி |
| பதனம் | - | கவனமாக |
| நீத்துப்பாகம் | - | மேல்கஞ்சி |
| கடிச்சுப்பாகம் | - | வாய்வைத்துக்குடித்தல் |
| மகுளி | - | சோற்றுக் கஞ்சி |
| வரத்துக்காரன் | - | புதியவன் |
| சடைத்து புளித்து | - | சலிப்பு |
| அலுக்கம் | - | அழுத்தம் (அணுக்கம்) |
| தொலவட்டையில் | - | தொலைவில் |

## 5. தொகாநிலைத் தொடர்கள்

**1. தொகாநிலைத் தொடர் என்பது யாது?**

சொற்கள் தொடரும் போது இடையில் சொல்லோ உருபோ அமையாமல் அப்படியே பொருளை உணர்த்துமானால் அதுவே தொகநிலைத் தொடர் எனப்படும்.

எ.கா: காற்று வீசியது குறில் கூவியது

மேலேயுள்ளத் தொடர்களில் காற்று, குறில் என்றும் எழுவாயை அடுத்து பயனிலைத் தொடர் நின்று வீசியது, கூவியது என்னும் பொருளைத் தந்தது.

**2. தொகாநிலைத்தொடர் எத்தனை வகைப்படும் அவை யாவை?**

தொகாநிலைத்தொடர் ஒன்பது வகைப்படும். அவை எழுவாய்த்தொடர், வினைத்தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், வேற்றுமைத் தொகா நிலைத் தொடர், இடைச்சொல்தொடர், உரிச்சொல்தொடர், அடுக்குத்தொடர்.

**3. எழுவாய்த்தொடர், விளித்தொடரை சான்றுடன் விளக்குக**

எழுவாய்த்தொடர்: எழுவாயுடன், பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது எழுவாய்த்தொடர்.

இனியன் கவிஞர் – பெயர்

காவிரி பாய்ந்தது – வினை

பேருந்து வருமா? – வினா

மேற்கண்ட இனியன், காவிரி, பேருந்து ஆகிய மூன்று எழுவாய்களைத் தொடர்ந்து கவிஞர் பாய்ந்தது வருமா என்னும் பெயர், வினை பயனிலைகள் வந்துள்ளன.

விளித்தொடர்: விளியுடன் வினைத் தொடர்வதே விளித்தொடர் எனப்படும்.

நண்பா – இதில் 'நண்பா' என்பது விளிப்பெயர் 'எழுது' என்னும் வினைப் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

**4. வினைமுற்றுத் தொடரைச் சான்றுடன் விளக்குக**

வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினைமுற்றுத்தொடர் எனப்படும்.

எ.கா: பாடினாள் கண்ணகி

பாடினாள் என்னும் வினைமுற்று முதலில் நின்று ஒரு பெயரைக் (கண்ணகி) கொண்டு முடிந்துள்ளது.

**5. பெயரெச்சத்தொடர் – சான்றுடன் கூறுக**

முற்றுப்பெறாத வினை, பெயர்ச் சொல்லைத் தொடர்வது பெயரெச்சத்தொடர் எனப்படும்.

எ.கா: கேட்ட பாடல் – இதில் கேட்ட என்பது எச்சவினை. முற்றுப்பெறாத வினை. அதனைத் தொடர்ந்து பாடல் என்னும் பெயர் வந்து தொடர் முடிந்துள்ளது.

**6. வினையெச்சத் தொடரையும், வேற்றுமைத் தொடரையும் விவரி**

முற்றுப்பெறாதா வினை, வினைச் சொல்லைத் தொடர்வது வினையெச்சத் தொடர் எனப்படும்.

எ.கா: பாடி மகிழ்ந்தனர். இதில் 'பாடி' என்பது முற்றுப் பெறாத வினை, எச்ச வினையாகும். இதனைத் தொடர்ந்து மகிழ்ந்தனர் என்னும் வினையைக் கொண்டு முடிந்துள்ளது.

வேற்றுமைத்தொடர்: வேற்றுமை உருபுகள் வெளிப்படத் தோன்றி அமையும் தொடர்கள் வேற்றுமைத்தொடர் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் எனப்படும்.

i) கட்டுரையைப் (ஐ) படித்தான்

ii) அன்பால் (ஆல்) கட்டினார்

iii) அறிஞருக்குப் (கு) பொன்னாடை

மேலேயுள்ள தொடர்களில் ஐ, ஆல், கு என்னும் வேற்றுமை உருபுகள் வெளிப்படையாகத் தோன்றின.

**7. இடைச்சொல் தொடரை – விவரி**

இடைச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது இடைச்சொல் தொடர் எனப்படும்.

எ.கா: மற்றொன்று – மற்று + ஒன்று

மற்று என்னும் இடைச்சொல்லை அடுத்து 'ஒன்று' என்னும் சொல் நின்று பொருளைத் தருகிறது.

**8. உரிச்சொற்தொடர் விளக்குக**

உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது உரிச்சொற்தொடர் எனப்படும்.

எ.கா: சாலச்சிறந்து, சால என்பது உரிச்சொல் அதனைத் தொடர்ந்து சிறந்தது என்ற சொல் நின்று பொருளைத் தருகிறது.

**9. அடுக்குத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக**

ஒருசொல் இரண்டு மூன்று முறை என அடுக்கித் தொடர்வது அடுக்குத்தொடர் எனப்படும். அது விரைவு, வெகுளி, மகிழ்ச்சி, அச்சம், துன்பம் காரணமாக பலமுறை அடுக்கி வரும். பிரிந்தால் பொருளைத் தரும்.

எ.கா: வருக! வருக! வருக! - மகிழ்ச்சி

பாம்பு பாம்பு - அச்சம்

ஓடு, ஓடு, ஓடு - விரைவு

மேலே வருக பாம்பு, ஓடு என்ற சொல் மகிழ்ச்சி அச்சம், விரைவு என்ற காரணமாக அடுக்கி வந்து பொருளைத் தருகிறது.

**10. கூட்டுநிலைப் பெயரெச்சங்கள்**

ஒன்றிற்கு மேற்பட்ட வினையெச்சங்கள் சேர்ந்து வினையெச்சங்கள் சேர்ந்து பெயரைக்கொண்டு முடியும் கூட்டுநிலைப் பெயரெச்சங்களை இக்காலத்தில் பெருமளவில் பயன்படுத்துகிறோம். வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை, செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் உருவாகின்றன.

எ.கா: கேட்க வேண்டிய பாடல், சொல்லத் தக்க செய்தி

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்தொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ...........

**அ) வேற்றுமை உருபு** ஆ) எழுவாய்

இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

2. முருகன் வந்தான் என்பது எழுவாய்த்தொடர்

இதுபோல பிறதொகாநிலைத் தொடர்களை கோடிட்ட இடத்தில் நிரப்புக

அ) பெயரெச்சத்தொடர் – **வந்த** முருகன்

ஆ) வேற்றுமைத்தொகை – **வீட்டைக் (ஐ)** கட்டினான்

இ) வினைமுற்றுத்தொடர் – **முருகன்** வந்தான்

3. தம்பியோ என்பது ......................... தொடர் ஆகும்

அ) எழுவாய்த் **ஆ) விளித்**

இ) வினையெச்சத் ஈ) இடைச்சொல்

4. பாம்பு! பாம்பு என்பது ....................... ஆகும்

அ) வினையெச்சத்தொடர் ஆ) இடைச்சொல்தொடர்

இ) விளித்தொடர் **ஈ) அடுக்குத்தொடர்**

5. சாலப்பேசினான் என்பது .....................

**அ) உரிச்சொற்தொடர்** ஆ) எழுவாய்த்தொடர்

இ) பெயரெச்சத் தொடர் ஈ) விளித்தொடர்

6. படித்த நூல் என்பது .....................

அ) விளித்தொடர் ஆ) எழுவாய்த்தொடர்

**இ) பெயரெச்சத்தொடர்** ஈ) இடைத்தொடர்

**7. பொருத்துக – தொடருடன் எடுத்துக்காட்டை பொருத்துக**

| | | |
|---|---|---|
| அ) எழுவாய்த்தொடர் | - | 1.வாய்வைத்துக்குடித்தல் |
| ஆ) விளித்தொடர் | - | 2. தொலைவில் |
| இ) வினைமுற்றுத்தொடர் | - | 3. கவனமாக |
| ஈ) பெயரெச்சத்தொடர் | - | 4. அழுத்தம் |
| உ) வினையெச்சத்தொடர் | - | 5. சோற்றுக்கஞ்சி |

அ) 1, 2, 3, 4, 5 ஆ) 5, 4, 3, 2, 1
இ) 3, 2, 1, 5, 4 **ஈ) 3, 4, 5, 2, 1**

**8. தொகா நிலைத்தொடர்களை தொகுத்து வருக**

புயல் வீசியது – **எழுவாய்த்தொடர்**

ஓடிய திருடன் துரத்திய காவலர் – **பெயரெச்சத்தொடர்**

கேட்டு மகிழ்ந்தனர் பேசி அமர்ந்தார் – **வினையெச்சத்தொடர்**

திருடன் திருடன் மாடு மாடு விடு,விடு – **அடுக்குத்தொடர்**

பிரதமர் பேச்**<u>சைக்</u>** கேட்டனர் (ஐ)

ஓடிய**<u>தால்</u>** பிடிபட்டான் (ஆல்) – **வேற்றுமைத்தொகை**

மாநகரில் கூட்டம் .... (மா – பெரிய)

சாலச் சிறந்ததாக இருந்தது – சால – மிகுதி – **உரிச்சொற்தொடர்**

**9. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர்வகைகளை எடுத்து எழுதுக**

மாடியிலிருந்து இறங்கினார் முகமது. அவர் பாடகர். பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு அவரது அறையில் கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்காக வைத்திருப்பார்.

அ) இறங்கினார் முகமது – வினைமுற்றுத்தொடர்
ஆ) அவர் பாடகர் – எழுவாய்த்தொடர்
இ) பாடுவதும் கேட்பதும் – உம்மைத்தொகை
ஈ) கேட்டபாடல் - உரிச்சொல்தொடர்
உ) அடுக்கடுக்காக - அடுக்குத்தொடர்

**10. கோடிட்டச் சொற்களின் தொடர் வகைகளை எழுதுக**

அ) **<u>பழகப் பழகப்</u>** பாலும் புலிக்கும் – அடுக்குத்தொடர்

ஆ) **<u>வடித்த கஞ்சியில்</u>** சீலையை அலசினேன் – வினையெச்சத்தொடர்

இ) மேடையில் **<u>நன்றாகப் பேசினான்</u>** – உரிச்சொல்தொடர்

ஈ) **<u>வந்தார்</u>** அண்ணன் – வினைமுற்றுத்தொடர்

உ) அரிய **<u>கவிதைகளின்</u>** தொகுப்பு – உரிச்சொல்தொடர்

**11. தமிழில் மொழி பெயர்த்துத் தலைப்பிடுக**

Respected Ladies and Gentleman, I am ilangovan studying 10th standard. I have come here to say a few words about our Tamil Culture Sangam literature shows that tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammer for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of tamil throughout india. Srilanka Malaysia. Singapore. England and worldwide. Though our culture is very old. it has been updated consistently. We should feel proud about our culture.
Thankyou one and all

மரியாதைக்குரிய ஆண்களே! பெண்களே! என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம்வகுப்பு படிக்கிறேன். நான் தமிழின் பண்பாடு பற்றி சில கருத்துகளைக் கூற வந்துள்ளேன். சங்க இலக்கியங்கள் தமிழ் நாகரிகத்தையும் தமிழர் பண்பாட்டையும் சிறப்பாகக் காட்டுகின்றன. அவை 2000 ஆண்டுகள்

பழமையானவை. தமிழ் மொழியின் இலக்கணமே அதன் சிறந்த பண்பாட்டிற்கு ஆணிவேராக உள்ளது. தமிழர் நாகரிகம் தமிழ்மொழியின் சிறப்புகள் இந்தியா முழுமையும் இன்றி நாகரிகம் பழமையானது மட்டுமல்ல தன்னை அவ்வப்போது கட்டமைத்துக் கொள்கிறது. நாங்கள் தமிழர் நாகரிகத்திற்கு பெருமை கொள்கிறோம்.

அனைவருக்கும் நன்றி! வணக்கம்.

**12. பழமொதுகளை நிறைவு செய்க**

1. உப்பில்லாப் **பண்டம் குப்பையிலே**
2. ஒரு பானை **சோற்றுக்கு ஒரு சோறு பதம்**
3. உப்பிட்டவரை **உள்ளலவும் நினை**
4. விருந்தும் **மருந்தும் மூன்று வேளை**
5. அளவுக்கு **மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு**

**13. விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒலிந்துள்ள நூலின் பெயரைக் கண்டுபிடி.**

அ) பறவையின் உறுப்பு பெயர் – இறகு

ஆ) சிவப்பு நிறத்தில் இருக்கும் – குருதி

இ) மன்னரிடம் இருப்பது – வாள்

ஈ) தங்கைக்கு மூத்தவள் – அக்கா

உ) அறிவின் மறுபெயர் – மதி

ஊ) நீரில் செல்வது – படகு

14. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக

தொடு – தோடு

உன் காதைத் **தொடு தோடு** உள்ளதா பார்க்க.

மடு – மாடு

ஆற்றின் **மடு** வில் உழவு **மாடு** வீழ்ந்து விட்டது.

வளி – வாளி

கிணற்று நீறை கயிறு கொண்டு **வாளி** கட்டி **வளி**ப்பாய்.

விடு – வீடு

மாலை பள்ளி விட்டதும் **விடு** விடு என நடந்து **வீடு** வந்தேன்.

**15. பொருள் கூறுக**

அ) ஊண் – உணவு
ஊன் – தசை, உடல்

ஆ) திணை – இடம், நிலம், வீடு, ஒழுக்கம்
தினை – சிறுதானியவகை

இ) அண்ணம் – மேல்வாய்
அன்னம் – சோறு, பறவை, கவரிமா

ஈ) வெல்லம் – கருப்பஞ்சாற்றுக்கட்டி

வெள்ளம் – நீர்பெருக்கு, கடல், அலை, மிகுதி

**16. கலைச்சொல் அறிவோம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செவ்விலக்கியம் | - | classical literature | வட்டார இலக்கியம் | - | Regional literature |
| காப்பிய இலக்கியம் | - | Epic literature | நாட்டுப்புற இலக்கியம் | - | Folk literature |
| பக்தி இலக்கியம் | - | Devotional literature | நவீன இலக்கியம் | - | Modern literature |
| பண்டைய இலக்கியம் | - | Ancient literature | | | |

## 6. திருக்குறள்

## ஒழுக்கமுடைமை

### 1. ஒழுக்கமே உயிரினும் சிறந்தது

**1. இலக்கணக்குறிப்பு**

ஒழுக்கம் – தொழிற்பெயர்

விழுப்பம் – உரிச்சொல்

மேன்மை எய்துவர் – எதிர்கால பலர்பால் வினைமுற்று

எய்தாப்பழி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

ஒழுக்கம் இழுக்கம் – தொழிற்பெயர்.

உலகத்தோடு – இடவாகு பெயர்

கல்லார், அறிவிலாதார் – எதிர்மறை வினையாலணையும் பெயர்

இலார் – இல்லாதவர் என்பதன் தொகுத்தல் விகாரம்.

### மெய்யுணர்தல்

**மனப்பாடப்பகுதி**

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு*

**1. இலக்கணக்குறிப்பு**

கெட – கெட்டால் என்பது திரிந்தது எச்சத்திரிபு

### பெரியாரைத் துணைகோடல்

**மனப்பாடப்பகுதி**

*பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே*
*நல்லார் தொடர்கை விடல்*

**1. இலக்கணக்குறிப்பு**

பேணி – வினையெச்சம்

கொளல் – தொழிற்பெயர்

அரிய – பலவின்பால் குறிப்பு, வினையாலணையும் பெயர் தமரா (தமராக) தொகுத்தல் விகாரம்.

இல்லாத – எதிர்மறைப்பெயரெச்சம்

ஏமரா – (ஏமாராத) (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்)

கொளல்-விடல் – தொழிற்பெயர்கள்

தொடர்(தொடர்பு) – முதனிலைத் தொழிற்பெயர்

**கொடுங்கோன்மை (56) கொடுங்கோன்மையின் குற்றம் கூறல்**

**1. இலக்கணக்குறிப்பு**

வேலோடு, கோலொடு – ஒடு உருபு

உவம உருபுகள் – 36

**கண்ணோட்டம் (58) கண் என்பது அன்பும் இரக்கமும் கொண்டது என்பதைக் கூறுவதாகும். கண்ணோட்டம் இல்லாத கண்ணால் என்ன பயன்**

**மனப்பாடப்பகுதி**

*பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்*
*கண்ணோட்டம் இல்லாத கண்*

**1. இலக்கணக்குறிப்பு**

பாடற்கு – உருபுமயக்கம் (நான்காம் வேற்றுமை உருபு மூன்றாம் உருபுக்கு பின் பொருளில் வந்துள்ளது)

இன்று – எதிர்மறை ஒன்றன்பாற் குறிப்புமுற்று

**ஆள்வினை உடைமை (62) இடைவிடாத முயற்சி உடையவன் ஆதல் முயற்சியே பெருமை தரும்**

**மனப்பாடப்பகுதி**

*அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்*
*பெரும் முயற்சி தரும்*

*முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை*
*இன்மை புகுத்தி விடும்*

**1. இலக்கணக்குறிப்பு**

வேண்டும் – வியங்கோல் வினைமுற்று

முயற்சி – தொழிற்பெயர்

வேளாண்மை – பிறருக்கு உதவுதல், உபகாரம்

தாளாண்மை, வேளாண்மை – தொழிற் பெயர்கள்

செருக்கு – காரியவாகுபெயர்

இன்மை புகுத்தி – இரண்டாம் வேற்றுமைத்தொகை

விடும் – செயும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

அறிந்து – வினையெச்சம்

யார்க்கும் – முற்றும்மை

அன்று – குறிப்புவினைமுற்று

ஊழையும் – உயர்வு சிறப்பும்மை

உஞற்றுபவர் – வினையாலணையும் பெயர்

**நன்றி இல் செல்வம் (101) பண்பில்லார் பெற்ற செல்வம்**

**1. இலக்கணக்குறிப்பு**

கோடி – எண்ணலளவையாகு பெயர்

கொடுப்பதூஉம், துய்ப்பதூம் – இன்னிசை அளபெடை

இல்லார் – எதிர்மறைவினையாலணையும் பெயர்

இல் – இல்லை என்பதன் கடைக்குறை

**1. கீழ்க்காணும் அணியை எடுத்து எழுதுக**

அ) *வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்*
*கோலொடு நின்றான் இரவு*

**பொருள்:** ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரிவிதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.

**அணி:** உவமையணி

**உவமை:** வேலொடு நின்றான் இடு என்றது

**உவமேயம் :** கோலொடு நின்றான்

**உவம உருபு:** போலும்

**அணி விளக்கம்:** ஒரு செய்யுளில் உவமை, உவமேயம் உவமஉருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக அமைந்து வருவது உவமையணி ஆகும்.

**விளக்கம்:** வேலோடு வழியே நின்று திருடன் வழிப்போக்கர்களிடம் உன்னிடம் உள்ள பொருளைக் கொடு என கேட்பது கோல் ஏந்திய மன்னன் குடிகளிடம் அளவுக்கு மீற வரிவிதித்து பொருளைத் தா எனக் கேட்பது பேலாகும்.

ஆ) *பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்*
*கண்ணோட்டம் இல்லாத கண்*

**அணி:** எடுத்துக்காட்டு உவமையணி

**பொருள்:** பாடலோடு பொருந்தவில்லையெனில் இசையால் என்ன பயன்? அது போலவே இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன்?

இ) *நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்*
*நச்சு மரம்பழுத் தற்று*

**அணி:** உவமையணி

**பொருள்:** பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் வெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சுமரம் பழத்தது போன்றதாகும்.

**1. நச்சப்படாதவன் செல்வம் – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்கு பொருள் தருக**

நச்சப்படாதவன் – விரும்பப்படாதவன்

**2. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**

கோடி உண்டாயினும் இல் – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் என வந்திருப்பது இன்னிசை அளபெடையாகும். செய்யுளில் ஓசை குறையாத போதிலும், செவிக்கு இனிய ஓசையைத் தரும் பொருட்டு உயிர்க்குறில் நெடிலாகி மேலும் அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும்.

**3. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக**

| | | |
|---|---|---|
| அ) உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | - | 1. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |
| ஆ) ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | - | 2. உயிரினும் ஓம்பப்படும் |
| இ) ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | - | 3. நடுஊருள் நச்சுமரம் பழுத்தற்று |

**விடை:** அ – 2, ஆ – 3, இ – 1

**4. எய்துவர் எய்தாப்பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?**

**அ) கூவிளம் தேமா மலர்** ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

**5. "பலகற்றும் கல்லார் அறிவிலாதார்" – விளக்குக**

உலகத்தோடு ஒத்துவாழக் கல்லாதவர்கள், பல நூல்களைக் கற்றவராயினும் அறிவு இல்லாதவர்களே எனக் கருதப்படுவார்.

**6. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**

ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பைத் தருவதால் அவ்வொழுக்கம் உயிரினும் மேலாகக் கருதப்பட்டு பேணி காக்கப்படுகிறது.

**7. மெய்ப்பொருள் காண்பது அறிவு – விளக்குக**

எப்பொருள் எத்தன்மையதாகத் தோன்றினாலும் (அத்தோற்றம் கண்டு மயங்காமல்) அப்பொருளின் உண்மையான இயல்பைக் காண்பதே மெய்யறிவு.

**8. அறியவற்றுள் ளெல்லாம் அரியது எது?**

பேரறிவு கொண்டவரைத் தம்மைச் சார்ந்தவராய் ஆக்கிக் கொள்ளுதல் அறிய பேறுகளுள் எல்லாவற்றிற்கும் அரியது ஆகும்.

**9. கெடுப்பார் இலானும் கெடுபவர் யார்?**

கடிந்து அறிவுரை கூறும் பெரியோரைத் தமக்குத் துணையாகக் கொள்ளாதவர் பகைவர் இன்றியும் கெடுவர்.

**10. நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மையது?**

ஒருவன் நல்லார் தொடர்பினைக் கைவிடுதல், தான் தனியனாய்ப் பலர் பகைமையைத் தேடிக் கொள்வதைக் காட்டிலும் பத்து மடங்கு அவனுக்குத் தீமை விளைவிக்கும்.

**11. வேலொடு நின்றான் – கோலொடு நின்றான் – பொருத்துக**

ஆட்சிக்கோலை ஏந்தி நிற்கும் அரசன் குடிகளைப் பொருள் கேட்டல் என்பது வேலோடு நின்ற கள்வர் தனிவழியே செல்வோரிடம் பொருள் கொடு என்று கேட்பதைப் போன்றதாகும்.

**12. மன்னன் நாட்டை எவ்வாறு இழப்பான்?**

தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னவன் நாள்தோறும் தன் நாட்டை இழக்க நேரிடும்.

**13. "எவருக்கு உலகம் உரிமை உடையதாக இருக்கும்" – கூறுக**

தம்முடைய கடமையாக தொழில் கெடாமல் கண்ணோட்டம் உடையவராக இருக்க வல்லார்க்கு இவ்வுலகம் உரிமை உடையதாக இருக்கும்.

**14. நஞ்சுண்டார் யார்? அவர் செயலைக் கூறுக**

எவராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்ணோட்டம் விரும்புகின்றவர்கள், பழகியவர்கள் தமக்கு நஞ்சு இடக்கண்டும் அதை உண்டு மகிழ்வார்கள்.

**15. ஆள்வினை உடைமை என்றால் என்ன?**

இடைவிடாத முயற்சி உடையவனாதல் என்று பொருள்

**16. தாளாண்மை, வேளாண்மை பொருள் தருக**

தாளாண்மை – விடாமுயற்சி வேளாண்மை – உபகாரம்

**17. முயற்சி, முயற்சின்மை இரண்டன் செயல்களை விளக்குக**

முயற்சி செல்வத்தைப் பெருகச் செய்யும் முயற்சி செய்கிறவர்கள் ஊழ்வினைகள் முதுகுகாட்டி ஓடச் செய்வர்.

**18. பொறி இன்மை என்பதன் பொருள் யாது?**

பொறி இன்மை என்றால் அறிவின்மை எனப்பொருள்.

**19. 'நச்சப்படாதவன் செல்வம்' – உவமையுடன் பொருத்துக**

கொடைக்குணம் இல்லாததால் எவராலும் விரும்பப்படாதவன் செல்வம் நிறைந்தவனாக இருப்பதனால் எந்தப் பயனுமில்லை. அவனுடைய செல்வமும் எவருக்கும் பயன்படாது. அது எப்படியென்றால் நடு ஊரில் விஷமரம் பழம் நிறைந்ததாக இருப்பதைப் போன்றது.

**20. உவமையணி – விளக்குக**

**உவமையணி:** புலவர்கள் தாம் கூறக்கருதியப் பொருளை நன்கு தெரிந்த ஒன்றைக் காட்டி விளக்குவது ஆகும். ஒரு பொருளை மற்றொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகுபடுத்திக் கூறுவது. தெரியாத பொருளைக் காட்ட தெரிந்த பொருளைச் சொல்லி விளக்குவது.

உவமை அணியில் உவமானம், உவமேயம் உவமை ஆகிய உருபுகள் வெளிப்படையாகவே வரும். பொதுத்தன்மையுடையதாக இருக்கும்.

**21. திருக்குறளில் விடுப்பட்ட சொற்களை எழுதி, திருக்குறளை நிறைவு செய்க**

அ) எப்பொருள் **எத்தன்மைத்** தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் **காண்பது** அறிவு

ஆ) பல்லார் பகைகொளலின் **பத்தடுத்த** தீமைத்தே
**நல்லார்** தொடர்கை **விடல்**

இ) **பண்** பாடற்கியை பின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் **இல்லாத** கண்

## இயல் – 4 : அறிவியல் தொழில் நுட்பம்

## 1. செயற்கை நுண்ணறிவு

**முக்கிய குறிப்புகள்**

- 1980ஆம் ஆண்டுகளில் தனிநபர் கணினிகளின் வளர்ச்சியும், இணையப்பயன்பாட்டின் பிறப்பும், இன்றைய மின்னணுப் புரட்சிக்குத் காரணமாயின.
- இந்தியாவின் மிகப்பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி 'இலா' (ELA - Electronic Live Asst) என்னும் உரையாடு மென்பொருள் மூலம் ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடுகிறது.
- ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர். இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ. வீட்டுக்கு , வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன. இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்படுகின்றன. பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

- 2016இல் ஐ.பி.எம் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன், சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
- சீன நாட்டில் **'காண்டன்'** நகருக்கு 500கல் வடக்கே சூவன்செள என்னும் துறைமுக நகர் உள்ளது. பண்டைய காலத்திலும் இது சிறந்த துறைமுகமாக விளங்கிற்று. அந்த காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர். அதன் காரணமாக **சீனாவில் சிவன் கோவில்** ஒன்று கட்டப்பட்டது. அது சீனப் பேரரசரான **குப்லாய்கானின்** ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் கல்வெட்டு இன்றும் இக்கோயிலில் உள்ளது.

1. தலைப்புக்கும் குறிப்புக்குமான விடையைத் தேர்ந்தெடுக்க

தலைப்பு: செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள்: கண்காணிப்புக்கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன் பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்துக்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

**அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன**

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது

2. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா

இ) குலா **ஈ) இலா**

3. கீழ்க்காணும் தொடரில் எத்தொடர் முழுமையும் உண்மையானது?

**அ) செயற்கை நுண்ணறிவு கொண்ட இயந்திரம் மனிதர்களுடன் சதுரங்கம் விளையாடும். கண் அறுவை சிகிச்சை செய்கிறது.**

ஆ) செயற்கை நுண்ணறிவு கொண்ட இயந்திரம் எதையும் செய்யாது

இ) சமையல் செய்யாது; வீட்டுவேலையையும் செய்யாது.

ஈ) எல்லாத் தொடரும் உண்மையல்ல.

4. கீழ்க்காணும் குறிப்பைப் படித்து சரியான விடையைத் எழுதுக

**குறிப்பு**:

1. செயற்கை நுண்ணறிவு பொதித்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவை இல்லை

2) செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்து கொள்ள முடியும்

3) மனிதனால் முடியாத செயல்களையும் அவன் கடினம் எனக் கருதும் செயல்களை அதுவும் செய்யாது.

**அ) 1, 2ஆவது குறிப்புகள் சரி. 3 குறிப்பு தவறு**

ஆ) 1, 2, 3 மூன்று குறிப்புகளும் சரியே.

இ) 1, 2, 3 மூன்று குறிப்புகளும் தவறு

ஈ) 1, 2ஆவது குறிப்புகள் தவறு. 3 குறிப்பு சரி

4. 'இலா' என்னும் மென்பொருளை உருவாக்கியது .....................

அ) இந்தியா ரிசர்வ் வங்கி ஆ) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

**இ) பாரத ஸ்டேட் வங்கி** ஈ) இந்தியன் வங்கி

5. ‘பெப்பர்’ என்பது .................

அ) சீனாவின் இயந்திர மனிதன் **ஆ) ஜப்பானின் இயந்திரமனிதன் என்னும் ரோபோ**

இ) ஐரோப்பாவின் இயந்திர மனிதன் ஈ) இங்கிலாந்திலுள்ள இயந்திரமனிதன்

## 2. பெருமாள் திருமொழி

**- குலசேகராழ்வார்**

**மணப்பாடப்பகுதி**

*வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்*
*மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்*
*மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ*
*ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.*

- பாசுர எண் 691

**முக்கியக் குறிப்புகள்:**

- நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் 691ஆவது பாசுரம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. பெருமாள் **திருமொழி** நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் **ஐந்தாம் திருமொழியாக** உள்ளது. இதில் 105 பாடல்கள் உள்ளன. இதனைப் **பாடியவர் குலசேகராழ்வார்**. இவரின் **காலம் எட்டாம் நூற்றாண்டு**.
- குலசேகர ஆழ்வார் திருமாலின் அடியார் **பன்னிருவரில் ஒருவர்**. சேரமன்னர் மரபில் தோன்றியவன் சேரநாட்டில் உள்ள **திருவஞ்சைக்களத்தில்** பிறந்தவர். இவரை திருமாலின் மார்பில் அணியைப் பெற்ற **கௌஸ்துப மணியின் அமிசம்** என்று கூறுவர்.
- இராமன் மீது கொண்ட பக்தியின் காரணமாக இவர் **‘குலசேகரப் பெருமாள்’** எனவும் போற்றப்படுகிறார். இவர் அருளிய திருவாய் மொழியே **பெருமாள் திருமொழி** எனப்படுகிறது.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. “உனதருளே பார்ப்பன் அடியேனே” – யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் **ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்**

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. ‘வித்துவக் கோட்டம்மா’ என விளிக்கப்படுபவர் ....................

**அ) திருமால்** ஆ) லட்சுமி

இ) நோயாளி ஈ) மருத்துவர்

3. குலசேகர ஆழ்வார் இயற்றிய நூல் ...................

அ) பெரிய திருமொழி ஆ) நாச்சியார் திருமொழி

**இ) பெருமாள் திருமொழி** ஈ) பெரிய திருவந்தாதி

4. வாளால் அறுத்துச் சுடினும் – மாளாக் காதல் நோயாளன் – யார் யார் மீது காதல் கொள்கிறான்?

**அ) நோயாளி – மருத்துவர்பால்** ஆ) மருத்துவர் – நோயாளிபால்

இ) ஆண் – பெண்பால் ஈ) நோயாளி – சுற்றத்தார்பால்

5. பெருமாள் திருமொழி இடம் பெற்றுள்ள நூல் .................

அ) இராமானுச நூற்றந்தாதி ஆ) திருவிருத்தம்

இ) பெரிய திருமொழி **ஈ) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**

## 3. பரிபாடல்

**– கீரந்தையார்**

**முக்கிய குறிப்புகள்**

- சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றே பரிபாடல் ஆகும்.
- பரிபாடலில் 8 பாடல்கள் திருமாலுக்கும் செல்வேள் முருகனுக்கு 31 பாடல்கள், காடுகளுக்கு 1 பாடலும், வைகையாற்றிற்கு 26 பாடல்கள், பெருநகராகிய மதுரைக்கு நான்கு பாடல் என **எழுபது பாடல்கள்** இருந்தன. ஆனால் இவை இன்று முழுமையாகக் கிடைக்கவில்லை. இன்று 22 பாடல்களே கிடைத்துள்ளன.
- **பாடநூலில் உள்ள பரிபாடல்** பாடலை எழுதியவர் **கீரந்தையார்.** இந்நூல் **'ஓங்கு பரிபாடல்'** என்னும் புகழையுடையது.

**தெரிந்து கொள்வோம்:**

- அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924இல் பால்வீதி போன்று பல பால்வீதி போன்று பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.
- 1300 ஆண்டுகளுக்குமுன் மாணிக்கவாசகர் திருஅண்டப் பகுதியில் இவ்வாறு எழுதுகிறார்.
  "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
  ……………………………………………………………………………………
  சிறிய ஆகப் பெரியோன் தெரியன்" (திருவாசகம் 3 – 1 – 6)
- நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிர்கின்றன. அவற்றுள் நம் ஞாயிறும் ஒன்று. ஒரு விண்மீனின் ஆயுள் கால முடிவில் உள்நோக்கிய ஈர்ப்பு விசை கூடுகிறது. அதனால் விண்மீன் சுருங்கத் தொடங்குகிறது. விண்மீன் சுருங்கத் தொடங்கிறது. விண்மீன் சுருங்கச் சுருங்க அதன் ஈர்ப்பாற்றல் உயர்ந்துகொண்டே சென்று அளவற்றதாகிறது.
- "சில நேரங்களில் உண்மை புனைவை விடவும் வியப்பூட்டுவதாக அமைந்துவிடுகிறது. அப்படி ஓர் உண்மைதான் கருந்துளைகள் பற்றியதும். புனைவு இலக்கியம் படைப்பவர்களது கற்பனைகளையெல்லாம் மிஞ்சுவதாகவே கருந்துளைகள் பற்றிய உண்மைகள் உள்ளன. அதனை அறிவியல் உலகம் மிக மெதுவாகவே புரிந்துகொள்ள முயல்கிறது" என்று கூறுகிறார், ஸ்டீஃபன் ஹாக்கிங் அமெரிக்க அறிவியலாளர் ஜான் வீலர் என்பவர்தாம் கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர். சுருங்கிய விண்மீனின் ஈர்ப்பெல்லைக்குள் செல்கிற எதுவும், ஏன் ஒளியும்கூடத் தப்பமுடியாது. உள்ளே ஈர்க்கப்படும். இவ்வாறு உள்சென்ற யாவையும் வெளிவரமுடியாததால் இதனைக் கருந்துளை எனலாம் என்று ஜான் வீலர் கருதினார்.
- ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய நூல்களுள் **'காலத்தின் சுருக்கமான வரலாறு'** என்ற நூல் **நாற்பது மொழிகளில்** மொழிபெயர்க்கப்பட்டது.
- 1988ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் பெருவெடிப்பு, கருந்துளை ஆகியவை பற்றிய அரிய உண்மைகளைப் பொதுமக்களிடையே பரப்பி, ஒரு கோடிப் படிகளுக்கு மேல் விற்பனையானது.

**1. சொல்லும் பொருளும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விசும்பு | – | வானம் | ஊழி | – | யுகம் |
| ஊழ் | - | முறை | தன்பெயல் | - | குளிர்ந்தமழை |
| ஆர்தருபு | - | வெற்றத்தில் மூழ்கிக்கிடந்த | பீடு | - | சிறப்பு |
| ஈண்டி | - | செறிந்து திரண்டு | | | |

**2. இலக்கணக்குறிப்பு**

ஊழ் ஊழ் - அடுக்குத்தொடர்

வளர் வானம் - வினைத்தொகை

செந் தீ - பண்புத்தொகை

வாரா (ஒன்றன்) - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

உரு அறிவாரா - பெயரெச்சம்

**3. பகுபத உறுப்பிலக்கணம்**

கிளிர்ந்த - கிளிர் + த்(ந்) த் + அ

கிளர் – பகுதி; த் – சந்தி; த்(ந்) – (ந்) ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

**4. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. பரிபாடல் அடியில் விசும்பும் இசையும் என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் **ஈ) வானத்தையும் பேரொலியையும்**

2. "ஊழ்ஊழ் செல்லக்கருவளர்" என்பதில் ஊழ்ஊழ் என்பதன் இலக்கணக்குறிப்பு

**அ) அடுக்குத்தொடர்** ஆ) வினைத்தொடர்

இ) இரட்டைக்கிளவி ஈ) அன்மொழித்தொகை

3. பரிபாடல் சங்க நூல்களான .................... நூல்களுள் ஒன்று.

அ) பதினெண் கீழ்க்கணக்கு ஆ) பத்துப்பாட்டு

**இ) எட்டுத்தொகை** ஈ) ஐம்பெருங்காப்பியம்

## 4. விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

**முக்கியக் குறிப்புகள்**

- கோட்டூர்புரம் கோளரங்கத்தில் இந்தியாவிலேயே முதன்முதலாக 360 பாகை அரைவட்ட வானத்திரை உள்ளது.
- சுருங்கிய விண்மீனின் ஈர்ப்பெல்லைக்குள் செல்லுகிற எதுவும், ஏன் ஒளியும் கூடத் தப்ப முடியாது. உள்ளே ஈர்க்கப்படும். இவ்வாறு உள்சென்ற யாவையும் வெளிவரமுடியாததால் இதனைக் கருந்துளை என்று ஜான்வீலர் கூறியுள்ளார்.
- ஹாக்கிங் கலீலியோவின் நினைவுநாளில் பிறந்தார். ஐன்ஸ்டையின் பிறந்த நாளில் இறந்தார். இது அறிவியலைப் பொறுத்தவரை ஒரு தற்செயல் நிகழ்வாக இருக்கலாம். ஆனால் அதிலும் ஒர் ஒற்றுமை இருக்கிறது. இம்மூவரும் அவரவர் காலத்தில் இந்தப் பேரண்டம் பற்றி இருந்தப் புரிதலைப் பலமடங்கு வளர்த்தவர்கள். பேரண்டம் பற்றிய மனித நம்பிக்கைகளைப் புரட்டிப் போட்டவர்கள்.

1. சென்னை கோட்டூர்புரத்தில் பெரியார் அறிவியல் தொழில் நுட்பக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு ......................

**அ) 1988** ஆ) 1999 இ) 1978 ஈ) 1989

2. “மாற்றத்திற்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளும் திறனே புத்தி கூர்மை”

“அறியாமை அறிவாற்றலின் மிகப்பெரிய எதிரியல்ல. அது அறிவின் மாயையே” என்று கூறியவர்

அ) ஐன்ஸ்டைன் ஆ) கலீலியோ

**இ) ஸ்டீபன் ஹாக்கிங்** ஈ) எடிசன்

3. “காலத்தின் சுருக்கமான வரலாறு” என்னும் நூலை எழுதியவர் .............

அ) ஐன்ஸ்டைன் ஆ) நியூட்டன்

இ) எடிசன் **ஈ) ஸ்டீபன் ஹாக்கிங்**

4. கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் கூறியவர் .......................

அ) ஸ்டீபன் ஹாக்கிங் **ஆ) ஜான்வீலர்**

இ) ஐன்ஸ்டைன் ஈ) நியூட்டன்

## 5. இலக்கணம் – பொது

**1. திணை என்றால் என்ன? அஃது எத்தகை வகைப்படும்**

திணை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்பது பொருள். திணை இரண்டு வகைப்படும். அவையாவன: உயர்திணை, அஃறிணை என்பனவாகும்.

**2. உயர்திணை, அஃறிணை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

**உயர்திணை:** உயர்ந்த ஒழுக்கமுடைய, ஆறறிவுடைய மக்களைக் குறிப்பது உயர்திணை எனப்படும். தேவர், நரகர், மக்கள் உயர்திணையில் அடங்குவர். இவர்கள் மற்ற உயிர்களின் மற்ற உயிர்களைவிட நன்மை, தீமைகளைப் பிரித்து அறிவர்.

எ.கா: அறிஞர், சிவன், திருமால், மக்கள்

**அஃறிணை:** அல் + திணை = அஃறிணை. உயர்வு அல்லாத ஒழுக்கம் உடையவை எனப் பொருள். மேலே உயர்திணையில் கூறப்பட்ட தேவர், நரகர், மக்கள் அல்லாத மற்றைய உயிருள்ளவை, உயிரில்லாத பொருள்கள் அனைத்தும் அஃறிணை எனப்படும்.

எ.கா: காகம், ஆடு, யானை, எறும்பு, நாற்காலி, மேஜை, நிலம், நீர், வானம்

**3. பால் என்றால் என்ன? எத்தகை வகைப்படும்? விவரி**

பால் என்பது திணையின் உட்பிரிவு அல்லது பகுப்பு, பிரிவு எனப்படும். இஃது ஐந்து வகைப்படும்.

**உயர்திணை:** ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்றாகவும்

**அஃறிணை:** ஒன்றன்பால், பலவின்பால் என இரண்டாகவும் என ஐந்து வகைப்படும்

**உயர்திணைக்குரியப்பால் பகுப்புகள்:**

**ஆண்பால்** – வீரன், அண்ணன், மருதன்

**பெண்பால்** – மகள், தலைவி, அரசி

**பலர்பால்** – மக்கள், பெண்கள், ஆடவர்

**அஃறிணைப் பாலுக்குரியப் பால் பகுப்புகள்:**

**ஒன்றன்பால்** – ஒன்றினைக் குறிப்பது ஒன்றன்பாலாகும்.

யானை, புறா, குரங்கு, மலை

**பலவின்பால்** – பலவற்றை – ஒன்றினுக்கு மேற்பட்டப் பொருள்களைக் குறிப்பதாகும்.

யாணைகள், புறாக்கள், குரங்குகள், மலைகள்

**4. இடம் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?**

பேசும்போது ஒருவன் தன்னையோ, தன்முன் நின்று கேட்பவனையோ, அவ்விடத்தில் இல்லாத மற்றவனையோ குறித்துக் கூறுவது இடம் எனப்படும். சொற்கள் வழங்குவதற்கு உரியதே இடமாகும்.

இடம் மூன்று வகைப்படும். அவை. தன்மை, முன்னிலை, படர்க்கை என்பதாகும்.

**5. தன்மை இடம் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?**

பேசுகின்றவன் தன்னையும், தன்னைச் சார்ந்தவரையும் குறிப்பது தன்மை இடம் எனப்படும் இது தன்மை ஒருமை, தன்மைப் பன்மை என இருவகைப்படும்.

தன்னைமட்டும் குறிப்பது – தன்மை ஒருமை – நான்

தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும் குறிப்பது – தன்மைப்பண்மை

**6. முன்னிலை இடம் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?**

பேசுவான் தன் முன்னே நின்று கேட்பவர்களைத் குறிப்பது முன்னிலை இடம் எனப்படும்.

**முன்னிலை இடம்:** முன்னிலை ஒருமை, முன்னிலைப்பன்மை என இருவகைப்படும்

**முன்னிலை ஒருமை:** முன்நின்று கேட்பவன்
ஒருவனை மட்டுமே குறிப்பது – நீ

**முன்னிலைப்பன்மை:** முன் நின்று கேட்போர்
பலரையும் குறிப்பது – நீங்கள்

**7. படர்கையிடம் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?**

பேசுபவன் தன்மையும் குறிக்காமல், முன்நின்று கேட்பவரையும் குறிக்காமல் அயலாரைக் குறிக்கும் சொல் படர்க்கை எனப்படும். இது தன்மை, முன்னிலை இல்லாத எல்லாவற்றையும் குறிக்கும்.

அஃது ஆண்பால், பெண்பால் பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும்.

**8. தன்மை, முன்னிலை, படர்க்கை வினைகளைப் பட்டியலிடுக**

| இடம் | பெயர்/வினை | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| தன்மை | தன்மைப் பெயர்கள் | நான், யான், நாம், யாம் |
| | தன்மை வினைகள் | வந்தேன், வந்தோம் |
| முன்னிலை | முன்னிலைப் பெயர்கள் | நீ, நீவீர், நீர, நீங்கள் |
| | முன்னிலை வினைகள் | நடந்தாய், வந்தீர், சென்றீர்கள் |
| படர்க்கை | படர்க்கைப் பெயர்கள் | அவன், அவள், அவர், அது, அவை |
| | படர்க்கை வினைகள் | வந்தான், வந்தாள், வந்தார், பறந்தது, பறந்தன |

**9. வழு என்றால் என்ன? எத்தனை வகைப்படும்**

இலக்கண முறையின்றிப் பேசுவதும், எழுதுவதும் வழு எனப்படும். வழு ஏழுவகைப்படும். அவை திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, வினாவழு, விடைவழு, மரபுவழு என்பனவாகும்.

**10. வழுவின் வகைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக**

**திணைவழு**: செழியன் வந்தது. இதில் செழியன் என்பது உயர்திணையாகும். செழியன் வந்தான் என வரவேண்டும். வந்தது அஃறிணைக்குறியது. அஃறிணை கொண்டு வினை முடிந்தால் திணைவழுவாயிற்று.

**பால்வழு:** கண்ணகி வந்தான். இதில் கண்ணகி என்பது பெண்பால் பெயர். வந்தான் என்பது ஆண்பால் வினை கொண்டு முடிந்து, பால் வழுவாய் நின்றது.

**இடவழு:** நீ வந்தேன். நீ என்னும் முன்னிலை இடப்பெயர் வந்து வந்தாய் என முடிவாக வினை இருப்பதற்கு வந்தேன் என்று வினை கொண்டு முடிந்து இடவழுவாய் நின்றது.

**காலவழு:** நேற்று வருவான் நேற்று என்னும் இறந்தகால பெயருடன் வருவான் என்னும் எதிர்கால வினை வந்து காலவழுவாய் நின்றது.

**வினாவழு:** ஒரு விரலைக்காட்டி சிறியதோ? பெரியதோ எனக் கேட்டல். இரண்டு விரலைக் காட்டினால்தான் அதனை விட இவ்விரல் பெரியதா, சிறியதா எனக் கூறமுடியும். ஆனால் ஒரு விரலைக் காட்டி கேட்பது வின வழுவாகும்.

**விடைவழு:** கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்கு கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளிப்பது. கண்ணணை கேட்டால் அவன் பற்றி விடை கூட வேண்டுமே தவிர அதனுடன் தொடர்பில்லாத விடையைக் கூறுவதே விடைவழுவாகும்.

**மரபுவழு:** தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் எனக் கூறுதல், தென்னை மரங்கள் உள்ள பகுதிக்குத் தோப்பு எனக் கூறுதலே மரபு ஆகும். அவ்வாறு (தென்னந்தோப்பு) கூறாமல் தென்னந்தோட்டம் எனக் கூறுதல் மரபுவழு ஆகும்.

**11. வழுவமைதி என்றால் என்ன?**

இலக்கணமுறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவதே வழுவமைதி எனப்படும்.

எ.கா: 'என் அம்மை வந்தாள்' – இத்தொடரில் வந்தாள் என்பது உயர்திணைப் பெண்பாலுக்குரியது. இத்தொடர் பசுவோ அஃறிணைப் பொருளுக்கு உயர்திணை வினைகுறித்து இருப்பது வழுவாகும். எனினும் உவப்பின் காரணமாக திணை வழுவமைதியாயிற்று.

**12. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத்தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது. தந்தை என்னிடம், "இலட்சுமி கூட்பிடுகிறாள். போய்ப்பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன் என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து என்னடா விளையாடவேண்டுமா? என்று கேட்டு அவனை அவிழ்த்து விட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம் நீயும் இவனும் விளையாடுங்கள் என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். – இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக**

- குட்டியுடன் நின்றிந்த மாடு - மரபு வழுவமைதி
    - கன்றுடன் நின்றிருந்த மாடு - வழா நிலை
- இலட்சுமி கூப்பிடுகிறாள் - திணை வழுவமைதி
    - மாடு கத்துகிறது - வழா நிலை
- இதோ சென்றுவிட்டேன் - கால வழுவமைதி

இதோ செல்கிறேன் - வழா நிலை

- துள்ளிய குட்டியைத் தடவி - மரபு வழுவமைதி
  துள்ளிய கன்றைத் தடவி - வழா நிலை
- என்னடா விளையாடவேண்டுமா - திணை வழுவமைதி
  என்ன விளையாடவேண்டுமா - வழா நிலை
- நீயும் இவனும் விளையாடுங்கள் - திணை வழுவமைதி
  நீயும் கன்றும் விளையாடுங்கள் - வழா நிலை
- நீரைக் குடித்தாள் - திணை வழுவமைதி
  நீரைக் குடித்தது - வழா நிலை

**13. திணை, பால், இட, கால, மரபு வழுவமைதியை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

**திணை வழுவமைதி:**

நம் மகிழ்ச்சி, உயர்வு, கோபம், சிறப்பு முதலிய காரணங்களால் உயர்திணையை அஃறிணையாகவும், அஃறிணையை உயர்திணையாகவும் கூறுவோம். 'திணை வழுஅமைதி'க்காக ஏற்றுக்கொள்ளலாம்.

"அம்மை வந்தாள்" என்று மாட்டினைப் பார்த்துக் கூறுவது திணைவழுவமைதியாகும். இத்தொடரில் வந்தாள் என்ற உயர்திணைக்குரிய வினையானது பசு என்ற அஃறிணையுடன் நமக்கு ஏற்பட்ட மகிழ்வு காரணமாக கூறப்பட்டது இது திணைவழுவமைதியாகும்.

**பால் வழுவமைதி:**

உவப்பு, உயர்வு, சிறப்பு, கோபம் என்ற காரத்தினால் ஒரு பாலை (ஆணை – பெண்ணாய்) மற்றொரு பாலுக்காகக் கூறுவது பால்வழுவாகும்.

வாடா ராஜா, வாடா கண்ணா! என்று தன் மகளைப் பார்த்து தாய் அழைப்பது பால்வழுவமைதியாகும். தன் மகள் என்ற மகிழ்வின் காரணமாக பெண்பாலை ஆண்பாலாக மாற்றி அழைப்பது. பால்வழுவமைதி எனப்படுகிறது.

**இட வழுவமைதி:**

மாறன் என்பதன் தன்னைப் பற்றிப் பிறரிடம் கூறும்போது "இந்த மாறன் ஒரு நாளும் பொய் கூற மாட்டான்" என தன்மை இடத்தை படர்க்கையில் கூறுவது இடவழுவமைதியாகும்.

**கால வழுவமைதி:**

குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார். இத்தொடர் குடியரசுத் தலைவர் நாளை வருவார் என எதிர்காலத்தில் அமைய வேண்டும். அவ்வாறு அமையாமல் இருப்பினும் நாம் பிழையாகக் கருதவில்லை. ஏனெனில் அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கி கால வழுவமைதியாக ஏற்றுக் கொள்கிறோம்.

**மரபு வழுவமைதி:**

மரபில் வழுவாயினும் சொன்னவர் தன்மை கொண்டு (உயர்வு, சிறப்பு) ஏற்றுக் கொள்வது.

*"கத்துங்குயிலோசை – சற்றேவந்து*
*காதிற் படவேணும்"* **– பாரதியார்**

குயில் கூவும் என்பதே மரபு. குயில் கத்தும் என்பது மரபு வழு. இங்கு பாரதி கவிதையில் கூறியதால் அது மரபு வழுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே ...................

அ) மரவு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

**இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி** ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

2. திணை என்னும் சொல்லின் பொருள் ....................

**அ) ஒழுக்கம்** ஆ) ஒழுக்கமின்மை

இ) நிலம் ஈ) அமருமிடம்

3. உயர்திணை என்பது .....................

**அ) மக்கள், தேவர், நரகர்** ஆ) மக்கள், தேவர், மரங்கள்

இ) தேவர், நாகம், யானை ஈ) இவை மூன்றுமில்லை

4. இலக்கண முறைப்படி பேசுவரும் எழுதுவதும்

அ) வழுவமைதி **ஆ) வழாநிலை**

இ) வழுநிலை ஈ) பெயர்ச்சொல்

5. குயில் கூவும், குயில் கத்தும் என்பது .................

அ) திணைவழு, மரபுவழு ஆ) மரபுவழு, பால்வழு

**இ) வலாநிலை, மரபுவழு** ஈ) வழுவமைதி, திணைவழு

6. ஒரு பசுவை 'எம் அம்மை வந்தாள்' எனக் கூறுவது ...................

அ) பால்வழுவமைதி **ஆ) திணைவழுவமைதி**

இ) இடவழுவமைதி ஈ) மரபுவழுவமைதி

7. செல்வன் வந்தாள் என்பது ........................

அ) திணைவழு ஆ) இடவழு

**இ) பால்வழு** ஈ) காலவழு

8. கத்தும் குயிலோசை சற்றே வந்து காதில் விழுவேண்டும் என்பதில் உள்ளது.

அ) பால்வழுவமைதி **ஆ) மரபுவழுவமைதி**

இ) இடவழுவமைதி ஈ) காலவழுவமைதி

9. ஒரு விரலைக்காட்டி இது சிறிதோ பெரிதோ என வினவுவது ....................

அ) விடைவழு **ஆ) வினாவழு**

இ) காலவழு ஈ) மரபுவழு

10. கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்கு கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல்

அ) திணைவழு ஆ) காலவழு

இ) வினாவழு **ஈ) விடைவழு**

**2. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஆண்பால், பெண்பால், பலர்பாலை எடுத்து எழுதுக**

இராமன் தஞ்சை சென்றான். அவனுடன் அவனுடைய மனைவி ரேவதியும், தாய் ரோகினியும் சென்றார்கள். அவர்கள் அனைவரும் மாமன் சந்திரமௌலி வீட்டிற்கு மாலை சென்றனர்.

**விடை:** ஆண்பால் – இராமன், அவன், சந்திரமௌலி

பெண்பால் – ரேவதி, ரோகினி

பலர்பால் – அவர்கள்

**3. பின்வரும் உரைப்பகுதியைத் திருத்தி எழுதுக**

தோட்டத்தில் பூக்கள் பூத்து இருந்தது. பறிப்பதற்குத் திருமகள் வந்தான். உடன் இராமனும், சீதையும் வந்தாள். அப்போது தோட்டத்தில் பாம்பு ஓடின. திருமகள் கத்தினாள்.

| | | |
|---|---|---|
| பிழை | : | தோட்டத்தில் பூக்கள் பூத்து இருந்தது. |
| திருத்தம் | : | தோட்டத்தில் பூக்கள் பூத்து இருந்தன. |
| பிழை | : | திருமகள் வந்தான் |
| திருத்தம் | : | திருமகள் வந்தாள் |
| பிழை | : | இராமனும் சீதையும் உடன் வந்தாள் |
| திருத்தம் | : | இராமனும் சீதையும் உடன் வந்தார்கள் |
| பிழை | : | தோட்டத்தில் பாம்பு ஓடின |
| திருத்தம் | : | தோட்டத்தில் பாம்பு ஓடியது |

**4. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனம் கண்டு எழுதுக**

அ) அமைச்சர் நாளை விழாவுக்கு வருகிறார். - **காலவழுவமைதி**

ஆ) அவனும் நீயும் அலுவலரைப் பார்க்க ஆயத்தமாகுங்கள் - **இடவழுவமைதி**

இ) 'இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்' என்று கூறினான். - **இடவழுவமைதி**

ஈ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல்கட்டி விளையாடுவோம் - **மரபுவழுவமைதி**

உ) செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்திருக்கிறார். - **திணைவழுவமைதி**

**5. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக**

**அ) தந்தை "மகனே நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்துவ என்று சொன்னார்" – ஆண்பாற் பெயர்களை பெண்பாலாக மாற்றித் தொடரை எழுதுக**

**விடை:** தந்தை மகளே உன்னுடைய தோழி
அழகியை அழைத்து வா என்று சொன்னார்.

**ஆ) அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது (வழுவவை வழாநிலையாக மாற்றுக)**

**விடை:** அக்கா நேற்று வீட்டுக்கு வந்தாள். அக்கா
புறப்படும் போது அம்மா வழியனுப்பினாள்.

**இ) "இதோ முடித்து விடுவேன்" என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார் (வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக)**

**விடை:** இதோ முடித்தேன் என்று செயலை
முடிக்கும் முன்பே கூறினார்

**ஈ) அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை (படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)**

**விடை:** என்னிடமோ உன்னிடமோ அவன் செய்தியை இன்னும் கூறவில்லை
உன்னிடமோ என்னிடமோ அவன் செய்தியை இன்னும் கூறவில்லை.
அவன் என்னிடமோ உன்னிடமோ செய்தியை இன்னும் கூறவில்லை.

**6. மொழி பெயர்க்க**

Malar: Devi. Switch off the lights when you leave the room.
Devi: Yeah, we have save electricity
Malar: Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
Devi: Who knows? In future our country may launch artificial moons to light our night time sky.
Malar: I have read some other countries are going to lanch these types of illumination satellites near future.
Devi: Superb news! If we lanch artificial moon they can assist in disaster relief by beaming light on areas that lost power.

மலர்: தேவி அறையை விட்டு போகும்போது விளக்கை அணைத்துவிட்டுத் செல்.
தேவி: ஆமாம். நாமும் மின்சாரத்தை சேமிப்போம்.
மலர்: நம்நாடு செரு விளக்குகள் எரியவிட்டு நிறைய மின்சாரத்தை செலவு செய்கின்றது.
தேவி: இதனை யார் தெரிந்து கொள்கின்றனர். நம் நாட்டில் எதிர்காலத்தில் செயற்கையாக இரவு நேரத்தில் நிலவை படைக்க வேண்டும் ஒலி வீச.
மலர்: நான் கூட படித்திருக்கிறேன் சில நாடுகள் அதற்காகக் கூட புதிய விண்கலங்களை எதிர்காலத்தில் உருவாக்குகின்றனவாம்.
தேவி: ஆச்சரியமூட்டும் செய்தி இது. நாமும் செயற்கை நிலவை தயாரித்தால் அதன் வெளிச்சம் மின்சாரம் நின்றபோது உதவும்.

**7. வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக**

காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா? எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளது போல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக்கேட்கும். பறவைகளுக்கு பார்த்தல் கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும், நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம். யுரேகா! யுரேகா – அறிவியல் வெளியீடு

எல்லா**ப்** பறவைகளுக்கும் காது உண்டு. செவி**த்** துளைகள் இறகுகளால் மூடி இருக்கும் மற்றபடி பாலூட்டிகளில் உள்ளது போல் புற**ச்**செவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுகேட்கும். பறவைகளுக்கு**ப்** பார்த்தல் கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும் சுவைத்தல் உணர்வு குறைவாகவும், நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம்.

**8. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க**

அ) இயற்கை – செயற்கை – பாதை தெரியாத இயற்கைக் காடுகளில் பயனிக்க செயற்கைக் கருவிகள் பயன்படுகின்றன.

ஆ) கொடு – கோடு: கொடுப்பதும் கொள்வதும் ஓர் எல்லைக் கோடு போன்றதே.

இ) கொள் – கோள்: உறவினர்கள் அனுசரித்துக் கொள்; கோள் சொல்வதை தவிர்க்க.

ஈ) சிறு – சீறு: சிறுபாம்பானாலும் சீறும் தன்மையுடையதே

உ) தான் – தாம்: தான் என எண்ணுவதை விட்டு தாம் என நினைப்போம்

ஊ) விதி – வீதி: என் தலைவிதியோ வீதிகளில் கூவி விற்பது என வியாபாரி சலித்தார்.

**9. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக**

(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)

1. நூலின் பயன் படித்தல் எனில் கல்வியின் பயன் **கற்றல்**
2. விதைக்குத் தேவை எரு எனில் கதைக்குத் தேவை **கறு**
3. கல் சிலை ஆகுமெனில் நெல் **சோறு** ஆகும்
4. குரலில் இருந்து பேச்சு எனில் விரலில் இருந்து **எழுத்து**
5. மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது **பூவில்**

**10. எதிர்மறையான சொற்களை எழுதுக**

| | |
|---|---|
| மீளாத் துயர் | மீண்ட இன்பம் |
| கொடுத்துச் சிவந்த | கொடாமல் கருத்த |
| மறைத்துக் காட்டு | திறந்து மூடு |
| அருகில் அமர்க | தூரத்தில் நிற்க |
| பெரியவரின் அமைதி | சிறியவரின் ஆர்ப்பாட்டம் |
| புயலுக்குப் பின் | தென்றலுக்கு முன் |

**11. பொருள் கூறுக**

அவிர்தல் – பிரகாசித்தல்; அழல் – தீ, நெருப்பு

உவா – முழு நிலவு கங்குல் – இரவு

கனலி – சூரியன், வெல்லோன்

## இயல் – 5 : கல்வி

## 1. மொழியெர்ப்புக் கல்வி

**முக்கிய குறிப்புகள்**

- மொழி பெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழி பெயர்ப்பது.
- ஒருவர் பேசும்போதே மொழி பெயர்ப்பது விளக்குவது **(Interpreting)** என்றே சொல்லப்படுகிறது.
- ஐ.நா அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஐ.நா அவையில் ஒருவர் பேசுவதை மொழி பெயர்க்கும் மொழி பெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்கு தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிக்கேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வார்.
- பிரான்சு **தேசிய நூற்கூடத்தில் (Biblothque Nationale)** ஏறக்குறைய ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும், கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன." இவற்றுள் சில இந்தியாவிலேயே கிடைக்காத படிகளும்

ஏடுகளுமாம். பண்டைக் காலத்தில் முதன்முதலாக ஐரோப்பியர் யாத்த இலக்கணங்களும், கையெழுத்துப் பிரதிகளும் இந்நூற்கூடத்தில் இருக்கின்றன. அங்கிருக்கும் தமிழ் நூல்களின் பட்டியலைப் படித்த போது இன்னும் அச்சுப் பெறாத நூல்கள் சிலவற்றின் தலைப்பைக் கண்டேன். மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ், சரளிப்புத்தகம், புதுச்சேரி அம்மன் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களும் அங்கு உள்ளன என **தனிநாயகம் அடிகள்** கூறியுள்ளார்.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. "மபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி ...............

**அ) சங்ககாலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது**

ஆ) காப்பிய காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது.

2. செய்தி 1: மொழி பெயர்ப்பு இல்லாவிடில் படைப்பாளிகள் கூட உருவாகியிருக்க முடியாது.

செய்தி 2: மொழி பெயர்பைக் கல்வியாக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் எளிதாகப் பெறமுடியும்.

அ) செய்தி 1,2 இரண்டும் தவறானவை ஆ) செய்தி 1 மட்டும் சரி

**இ) செய்தி 1, 2 இரண்டும் உண்மையே** ஈ) செய்தி 2 மட்டும் சரி

3. வால்காவிலிருந்து கங்கை வரை என்னும் நூலை இந்தியில் எழுதியவர் .................

அ) கணமுத்தைப்பா ஆ) ராஜேந்திரயாதவ்

**இ) ராகுல் சாங்கிருத்தியன்** ஈ) Dr.N. ஸ்ரீதர்

4. Hundred railsleepers were washed away என்பதன் சரியான மொழி பெயர்ப்பு ...................

அ) நூறுபேர் வெள்ளத்தில் அடித்துச் சொல்லப்பட்டனர்

**ஆ) (தொடர்வண்டி பயணிக்கும்) தண்டவாளத்தின் இடையே உள்ள கட்டைகள் 100 அடித்துச் செல்லப்பட்டது)**

இ) உறங்கிக் கொண்டிருந்த 100பேர் அடித்துச் செல்லப்பட்டனர்

ஈ) இவை எவையுமில்லை

5. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என முழுங்கியவர் ..........................

**அ) பாரதியார்** ஆ) பாரதிதாசன்

இ) பாவாணர் ஈ) சோமசுந்தரபாரதியார்

## 2. நீதி வெண்பா

**- கா.ப.செய்குதம்பிப் பாவலர்**

**மனப்பாடப்பகுதி**

*அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி*
*மருளை அகற்றி மதிக்கும் தெருளை*
*அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்*

*பொருத்துவதும் கல்வியென்றே போற்று*

**முக்கிய குறிப்புகள்**

- சதம் என்றால் நூறு என்பது பொருளாகும். ஒருவரது புலமையையும், நினைவாற்றலையும் நுண்ணறிவினையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு சோதிக்கும்போது விடையளித்தலே **சதாவதானம்** எனப்படும்
- செய்குதம்பி பாவலர்: கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர் பதினைந்து வயதிலேயே செய்யும் இயற்றும் திறன் பெற்றவர். உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர்.
- 1907ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் நாளில் சென்னை, விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி சதாவதானி எனப்பாராட்டப் பெற்றார்.
- இவர் நினைவைப் போற்றும் வகையில் இடலாக்குடியில் மணிமண்டபமும், பள்ளியும் உள்ளன. இவரியற்றிய நூல்கள் நாட்டுடமை ஆக்கப் பெற்றுள்ளன.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல்

**இ) கல்வி** ஈ) இலக்கியம்

2. 'சதாவதானம்' என்பது ஒருவரது புலமையை, நினைவாற்றலை, நுண் அறிவைச் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் .................... செயல்களை நினைவில் கொண்டு விடையளித்தல்.

அ) நூற்றெட்டு ஆ) நூற்றொன்று

இ) தொன்னூறு **ஈ) நூறு**

3. பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) அருளைப் | - | 1. அருந்துணையாய் |
| ஆ) மருளை | - | 2. அருத்துவதும் |
| இ) அறிவைத் | - | 3. பெருக்கி |
| ஈ) ஆவிக்கு | - | 4. அகற்றி |
| உ) தெருளை | - | 5. திருத்தி |

**அ) 3, 4, 5, 1, 2** ஆ) 5, 4, 3, 2, 1 இ) 1, 2, 3, 4, 5 ஈ) 1, 2, 5, 4, 3

## 3. திருவிளையாடற் புராணம்

**- பரஞ்சோதி முனிவர்**

**மனப்பாடப்பகுதி**

*புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்*
*பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்*
*நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்*

*தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா*

**முக்கிய குறிப்புகள்**

**நூல் குறிப்பு:**

- சிவபெருமானின் திருவிளையாடல்களைக் கூறும் நூல். சிவபெருமான் தன்னுடைய அடியார் மீதும், சிற்றுயிர்கள் மேலும் கொண்ட அன்பின் காரணமாக பூமிக்கு வந்து செய்த விளையாடல்களைக் கூறும் நூல். மதுரையில் இறைவன் நடத்திய திருவிளையாடல்களைக் கூறுகிறது. வடமொழியிலிருந்து இந்நூலை தமிழில் மொழி பெயர்த்தார் **பரஞ்சோதியார்**.
- 3363 பாடல்களை கொண்ட நூல். இது மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என மூன்று பிரிவுகளில் கொண்டது. 18+30+16=64 படலங்கள் உள்ளன. நமக்குப் பாடப்பகுதியில் உள்ளது **திருவாலவாய் காண்டத்தில் எட்டாவது படலமாகும்**.

**ஆசிரியர் குறிப்பு:**

- திருவிளையாடல் புராணத்தை தமிழ் மொழியில் இயற்றியவர் **பரஞ்சோதி முனிவர்**.
- திருமறைக்காடு என்னும் வேதாரணியத்தில் பிறந்தார்.
- இவருடைய தந்தை மீனாட்சி சுந்தரதேசிகர். மதுரை மீனாட்சி அம்மை பரஞ்சோதியார் கனவில் தோன்றி சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பாடும்படிக் கூறப்பாடினார்.
- காலம் 17ஆம் நூற்றாண்டு.
- இவரின் பிற நூல்கள் வேதாரணிய புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி ஆகியவையாகும்.

**இலக்கணக்குறிப்பு:**

| | | | |
|---|---|---|---|
| பொழிந்த | - பெயரெச்சம் | கேள்வியினான் | - வினையாலணையும் பெயர் |
| அரசன், தேன் | - பெயர்ச்சொல் | தொடுத்து | - வினையெச்சம் |
| வீழ்ந்து, எழுந்து | – வினையெச்சம் | அறியும் | – வினைமுற்று |
| இறந்த | – பெயரெச்சம் | துளக்கான் | – வினையெச்சம் |
| பாவை | - பெயர்ச்சொல் | பிரியா இமையப்பாவை | - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம் |
| இகழ்தல் | - தொழிற்பெயர் | தனியாத | - எதிர்மறைப்பெயரெச்சம் |
| வானவர் | - பெயர்ச்சொல் | போன | - பெயரெச்சம் |
| யான் | - தன்மை ஒருமை | அறியேன் | - எதிர்மறை வினைமுற்று |
| இல்லறனும் துறவனும் | – எண்ணும்மை | எந்தாய் | - எம் தந்தையாய் என்பதன் மரூஉ |
| ஓங்கு | - ஏவல் வினைமுற்று | நீயும் | - உம் (சாரியை) |
| அவன் | - படர்க்கை ஒருமை, ஆண்கால் | யாம் | - தன்மை பன்மை |
| எண்ணிய | - பெயரெச்சம் | புனைந்த மன்றம் | - பெயரெச்சம் |
| கோபத் தீ | - உருவகம் | நுவன்ற சொல், பண்ணிய குற்றம் | – பெயரெச்சம் |

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. இடைக்காடனார் பாடலை இகழ்ந்தவர் ............................

   இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .................

   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

winmeen.com

இ) இறைவன், மன்னன் **ஈ) மன்னன், இறைவன்**

2. 'தமிழ் அறியும் பெருமானே' என விளிக்கப்பட்டவர் ..........................

அ) மன்னன் **ஆ) இறைவன்**

இ) அமைச்சர் ஈ) இடைக்காடன்

3. பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரமயோகி விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு ...............

இத்தொடரில் பரமயோகி, மீனவன் என்போர் ...................

**அ) இறைவன், மன்னன்** ஆ) இடைக்காடன், மீனவர்

இ) மன்னன், அமைச்சன் ஈ) இடைக்காடன், மன்னன்

4. விண்ணிடை மொழிந்த என்பது விண்ணில் தோன்றிய ......................

அ) ஒளி ஆ) மின்னல்

இ) இடியோசை **ஈ) குரல் என்னும் அசரீரி**

5. திருவளையாடல் புராணம் ...................... காண்டங்களும் ...................... படலங்களும் கொண்டது.

அ) மூன்று, அறுபத்து முன்று ஆ) மூன்று, அறுபத்தெட்டு

**இ) மூன்று, அறுபத்து நான்கு** ஈ) மூன்று, முப்பத்தாறு

## 4. புதிய நம்பிக்கை

**- கமலாலயன்**

**முக்கிய குறிப்புகள்**

- உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களின் ஒரு குரலாக இருந்தவர் அமெரிக்க கருப்பினப் பெண்மணி மேரி மெக்லியோட் பெத்யூன்
- இம் மாபெரும் கல்வியாளரின் வாழ்க்கையை "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற தலைப்பில் நூலாகப் படைத்துள்ளார் கமலாலயன். இவரின் இயற்பெயர் வே. குணசேகரன். வயது வந்தோர் கல்வித்திட்டத்தில் ஒருங்ணைப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.

## 5. வினா, விடை வகைகள், பொருள்கோள்

**1. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வினா ஆறுவகைப்படும். அவை அறிவினா, அறியா வினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா ஆகும்.

**2. அறிவினா என்றால் என்ன? அதன் நோக்கத்தைக் கூறுக**

தான் விடை அறிந்திருந்தும் அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பததை அறியும் பொருட்டு வினவுவது அறிவினா ஆகும். ஆசிரியர் மாணவனிடம் இந்தக் கவிதையின் பொருள் யாது? என்று கேட்பது.

**3. அறியா வினாவிற்குச் சான்று காட்டி விளக்குக.**

தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது. ஆசிரியரிடம் இந்தக் கவிதையின் பொரும் யாது? என வினவுதல்.

**4. ஐயவினா என்றால் என்ன?**

ஐயம் நீக்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது ஐயவினா ஆகும். இச்செயல் செய்தது மங்கையா மணிமேகலையா எனவினவுவது.

**5. தொலைவில் தோன்றுவது எருதோ? பசுவோ? – இஃது எவ்வகை வினா?**

தொலைவில் தோன்றுவது எருதோ? பசுவோ? – என்பதில் தொலைவில் தோன்றுவது இதுவா அதுவா என்னும் ஐயத்தைப் போக்கிக் கொள்ள வினவுதல் ஐயவினா எனப்படும்.

**6. கொளல் வினா – கொடை வினா – விளக்குக**

கொளல் வினா: தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது கொளல் வினா ஆகும். ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா? என நூலகரிடம் வினவுதல்.

கொடை வினா: பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது கொடை வினா ஆகும். என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டுபடிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இருக்கிறதா? என்று கொடுப்பதற்காக வினவுதல்.

**7. ஏவல் வினாவை எடுத்துக்காட்டுகளுடன் விவரி**

ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது ஏவல் வினா ஆகும். வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல்.

**8. விடை எத்தனை வகைப்படும். அவை யாவை?**

விடை எட்டுவகைப்படும். அவை சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை, ஏவல்விடை, வினாவெதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்பனவாகும்.

**9. சுட்டுவிடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

கடைத்தெரு எங்குள்ளது? என்ற வினாவிற்கு வலப்பக்கத்தில் உள்ளது எனக் கூறுவது சுட்டிக்கூறும் விடை சுட்டுவிடை எனப்படும்.

**10. மறைவிடை விளக்குக**

கடைக்குப் போவாயா? என்ற வினாவிற்கு போகமாட்டேன் என மறுத்துக்கூறுவது மறைவிடை.

**11. நேர்விடையைக் கூறுக**

உடன்பட்டுக் கூறும் விடையே நேர்விடை ஆகும். கடைக்குப் போவாயா? என்ற வினாவிற்கு போவேன் என்று உடன்பாடுக் கூறுவது.

**12. ஏவல்விடையை விளக்குக**

மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாக் கூறும்விடை ஏவல் விடை ஆகும். இதை செய்வாயா? என்ற வினாவிற்கு "நீயே செய் என்று ஏவிக்கூறுவது"

**13. இனமொழி விடை என்றால் என்ன?**

பொதுத்தன்மையால் ஒன்றினோடு தொடர்புடைய மற்றொன்றிளை விடையாகக் கூறுவது இனமொழி விடையாகும். எ.கா: உனக்கு கதை எழுதத் தெரியுமா? என்ற வினாவிற்கு கட்டுரை எழுதத் தெரியும் என்று கூறுவது.

**14. வினாவிற்கு நேரடி விடையாய் அமையும் விடைவகைகள் யாவை?**

வினாவிற்கு நேரடி விடைகளாய் அமைபவை சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை ஆகியனவாகும்.

**15. வினாவிற்கு குறிப்பால் உணர்த்தும் விடைகளாய் அமையும் விடைகள் யாவை?**

வினாவிற்கு குறிப்பால் உணர்த்தும் விடைகளாய் அமையும் விடைகள் ஏவல்விடை, வினாவெதிர் வினாதல் விடை, உற்றதுரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்னும் ஐந்து விடைகளாகும்.

**16. உற்றது உரைத்தல் விடை விளக்குக**

வினாவிற்கு விடையாக ஏற்கனவே நேர்ந்ததைக் கூறுவது. நீ விளையாடவில்லையா? என்ற வினாவிற்கு கால் வலிக்கிறது எனக் கூறுவது.

**17. பொருள்கோள் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

செய்யுளில் உள்ள சொற்களை முறைப்படுத்தி பொருள் கொள்ளும் முறை பொருள்கோள் எனப்படும். பொருள்கோள் எட்டு வகைப்படும். அவை 1) ஆற்றுநீர்ப் பொருள்கோள் 2) மொழி மாற்றுப் பொருள்கோள் 3) நிரல், நிறைப் பொருள் கோள் 4) பூட்டுவிற் பொருள்கோள் 5) தாப்பிசைப் பொருள்கோள் 6) அளைமறியாப்புப் பொருள்கோள் 7) கொண்டு கூட்டுப் பொருள்கோள் 8) அடிமறி மாற்றுப் பொருள்கோள்.

**18. நிரல் நிறைப் பொருள்கோளைச் சான்றுடன் எழுதுக**

ஒரு செய்யுளின் சொற்கள் முறை பிறழாமல் நிரல் நிறையாக (வரிசையாய்) அமைந்து வருவது நிரல் நிறைப் பொருள்கோள் எனப்படும்.

நிரல் நிறைப் பொருள்கோள் இரண்டு வகைப்படும். அவை அ) முறை நிரல் நிறைப் பொருள்கோள், ஆ) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்.

**அ) முறை நிரல் நிறைப் பொருள்கோள்:**

செய்யுளில் பெயர்ச்சொல்லையும், வினைச்சொற்களையும் வரிசையாய் நிறுத்தி அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளும் முறை 'முறை நிரல் நிறைப் பொருள்கோள்' எனப்படும்.

**எ.கா:** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது

இக்குறட்பாவில் இல்வாழ்வின் பண்பு அன்பு என்றும் அதன் பயன், அறம் எனக் கொள்ள வேண்டும். அப்படியே பொருள் காண வேண்டும். அன்புக்குப் பண்பும், அறத்திற்குப் பயனும் பயனிலையாக நிரல் நிறையாக நிறுத்திப் பொருள் காண வேண்டும். இவ்வாறு காண்பதே முறை நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

**ஆ) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்:**

செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் எனப்படும்.

**எ.கா:** விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனையவர்.

இக்குறட்பாவில் முதலடியில் விலங்கு, மக்கள் என்னும் எழுவாய்களை வரிசைப்படுத்திவிட்டு, அடுத்த அடியில் பயனிலைகளாக கற்றார், ஏனையவர் என வரிசைப்படுத்தி உள்ளார். அவற்றிற்கு பொருள் காணும்போது கற்றார், மக்கள் எனவும், ஏனையவர், விலங்கு எனவும் எதிர் எதிர் கொண்டு பொருள் கொள்ள வேண்டும். இதுவே எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் எனப்படுகிறது.

**19. கொண்டு கூட்டுப் பொருள்கோளை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒந்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோளாகும்.

எ.கா: ஆலத்து மேல குவளை குறத்துன

வாலின் நெடிய குரங்கு – (மயிலைநாதர் உரை)

மேற்கண்ட பாடலின் ஆலத்து மேல் குவளை என்றும், குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கண்டால் பொருத்தாத பொருளாகிவிடும். எனவே இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை என்று கருத்தைக் கொண்டு, அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைத்திருப்பதால் இது கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

**20. முயற்சி திருவினை ஆக்கும் முயன்றின்மை**

இன்மை புகுத்தி விடும். – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோள் ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஆகும்.

விளக்கம்: முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருக்கச் செய்யும். முயற்சி இல்லாது இருப்பது அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

பொருள்கோள் விளக்கம்: பாடலின் தொடக்கம் முதல் முடிவுரை ஆற்றுநீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்தால் ஆற்றுநீர்ப் பொருள்கோள் எனப்படும். மேலே காட்டிய திருக்குறளின் பொருளும் அவ்வாறே காண முடிவதால் ஆற்றுநீர்ப் பொருள்கோள் எனப்படும். மேலே காட்டிய திருக்குறளின் பொருளும் அவ்வாறே காண முடிவதால் ஆற்றுநீர்ப் பொருள் கோளில் வருகிறது.

1. அருந்துணை என்பதைப் பிரித்தால் ........................

**அ) அருமை + துணை** ஆ) அரு + துணை

இ) அருமை + இணை ஈ) அரு + இணை

2. இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்பது ...................... வினா

அதோ, அங்கே நிற்கும் என்று மற்றொருவர் கூறியது ........................... விடை

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை

**இ) அறியா வினா, சுட்டுவிடை** ஈ) கொளல்வினா, இனமொழிவினா

3. பாடலின் சொற்களை முறை மாற்றாமல் வரிசையாக அமைத்துப் பொருள் கொள்வது ......................

அ) நிரல் நிறைப் பொருள்கோள் **ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்**

இ) தாப்பிசைப் பொருள்கோள் ஈ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

4. வினா ................... வகைப்படும்; விடை ...................... வகைப்படும்; பொருள்கோள் ............................ வகைப்படும்

**அ) ஆறு, எட்டு, எட்டு** ஆ) எட்டு, ஆறு, எட்டு

இ) எட்டு, எட்டு, ஆறு ஈ) ஆறு, ஏழு, எட்டு

5. பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) அறிவினா | - | 1. வருவாயா? எனில் வாரேன் என்பது |
| ஆ) ஏவல்வினா | - | 2. உண்டாயா? எனில் வயிறு வலிக்கும் என்பது |
| இ) மறைவிடை | - | 3. இதனைச் செய்வாயா? எனில் நீயே செய் என்பது |
| ஈ) உறுவது கூறல் | - | 4. இதன் பொருள் யாது? என மாணவரிடம் ஆசிரியர் கேட்பது |

**அ) அ – 4, ஆ – 3, இ – 1, ஈ – 2** ஆ) அ – 2, ஆ – 1, இ – 3, ஈ – 4

இ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4 ஈ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

**6. பொருத்துக**

அ) மறைவிடை - 1. கால்வலிக்கும் என்பது
ஆ) நேர்விடை - 2. கடைக்கு சென்று வருவாயா
இ) ஏவல்விடை - 3. செல்வேன்
ஈ) உறுவது கூறல்விடை - 4. நீயே செல்

அ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1 ஆ) அ – 2, ஆ – 1, இ – 3, ஈ - 4
இ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 1 ஈ) அ – 4, ஆ – 2, இ – 1, ஈ – 3

1. வினா வகையையும், விடை வகையையும் சுட்டுக

அ) காமராஜர் நகர் எங்கே இருக்கிறது?
இந்த வழியாகச் செல்லுங்கள் என்று விடையளிப்பது
**விடை:** சுட்டுவிடை

ஆ) எனக்கு எழுதித்தருவாயா? என்ற வினாவுக்கு
எனக்கு யார் எழுதித்தருவார் என்று விடையளிப்பது
**விடை:** வினா எதிர்வினாதல் விடை

**2. உரையாடலில் இடம் பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக**

பாமகள்: வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே (அறியாவினா)
ஆதிரை: ஆமாம் கவியரங்கத்திற்கு கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன் **உற்றது உரைத்தல் விடை**
பாமகள்: அப்படியா என்ன தலைப்பு? **அறியாவினா**
ஆதிரை: கல்வியில் சிறக்கும் தமிழர் நேர்விடை **நேர்விடை**
நீங்கள் கவியரங்கத்திற்கு எல்லாம் வருவீர்களோ? மாட்டீர்களோ? **ஐய வினா**
பாமகள்: ஏன் வராமல்? **வினா எதிர்வினாதல் விடை**

**3. ஆங்கிலச் சொல்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை எழுதுக**

| | | | |
|---|---|---|---|
| Lute music | யாழிசை | Grand-daughter | பேத்தி |
| Chamber | ஏதென்று | to look up | எட்டிப்பார்த்தேன் |
| Rote | நெட்டுரு | didactic compilation | நீதிநூல் திரட்டு |

**4. புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க**

தார்போன்ற நிறமுண்டு கரியுமில்லை
பார் முழுதும் பறந்து திரிவேன் வேகமில்லை
சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை
வீட்டுக்கு வருமுன்னே, வருவதைக் கூறுவேன். நான் யார்?
விடை: காகம்

**2. தொழிற் பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க**

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் **புதையல்** யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் **புதைத்தல்** நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல், புதைத்தல்)

2. காட்டு விலங்குகளைச் **சுடுதல்** தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் **சுட்டல்** திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)

3. காற்றின் மெல்லிய **தொடுதல்** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான **தொடுத்தல்** பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல், தொடுதல்)

4. பசுமையான **காட்சி**யைக் **காணுதல்** கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)

5. பொது வாழ்வில் **நடிப்பு** கூடாது. **நடித்தலில்** அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

**3. பொருள் கூறுக**

| | | |
|---|---|---|
| மன்றல் | - | வாசனை, கலியாணம், பாலைப்பண்வகை |
| அடிச்சுவடு | - | காலடி அடையாளம் |
| அகராதி | - | அகர வரிசையாகத் தொடுத்த சொற்பொருள் கூறும் நூல் |
| தூவல் | - | தூவுகை, தூவலை, மழை, இறகு |
| மருள் | - | மயக்கம், வியப்பு, திரிபு உணர்ச்சி |

## இயல் – 6: கலை, அழகியல், புதுமைகள்

### 1. நிகழ்கலை

**முக்கிய குறிப்புகள்**

- கா – என்பதற்கு பாரம் தாங்கும் கோல் என்பது பொருள். கோலின் இருமுனைகளிலும் சம எடையுள்ள பொருள்கைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம்.
- காவடிகள் அமைப்புக்கு ஏற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக் காவடி என்று அழைக்கின்றனர்.
- தேவராட்டம் என்பது வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டமாகும். ‘உறுமி’ என்று பொதுவாக அழைக்கப்படும்.
- ‘தேவதுந்துபி’ தேவராட்டத்திற்குரிய இசைக்கருவியாகும். இவ்வாட்டத்தில் பெரும் பன்மையாக எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது. தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகிறது.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. கரகாட்டத்தைக் ‘கும்பாட்டம்’ என்றும் ‘குடக்கூத்து’ என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?

அ) கரகாட்டம் என்றால் என்ன?

ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?

**ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**

2. ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றியாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக் கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளை அடிக்காட்டும் ஆட்டம் ....................

| | |
|---|---|
| அ) கரகாட்டம் | ஆ) ஒயிலாட்டம் |
| **இ) மயிலாட்டம்** | ஈ) ஒயிலாட்டம் |

3. தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி ..................

**அ) உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் தேவதுந்துபி**

ஆ) தோலால் கட்டப்படும் குடம், தவில், சிங்கி, டோலாக்

இ) நையாண்டி மேளமும், நாகஸ்வரமும்

ஈ) வட்டவடிமான அகன்ற தோற்கருவி

4. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது ......................

அ) தேவராட்டம் ஆ) காவடியாட்டம்

**இ) புலியாட்டம்** ஈ) கரகாட்டம்

5. அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் .................. ........................ என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

அ) தப்பாட்டம், தப்பட்டையாட்டம் **ஆ) புரவி ஆட்டம், புரவி நாட்டியம்**

இ) தேவராட்டம், சேவையாட்டம் ஈ) கரகம், கும்பாட்டம்

6. ஒரு கதையை இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்கினால் ......................

அ) தேவராட்டம் ஆ) தோற்பாவைக்கூத்து

**இ) தெருக்கூத்து** ஈ) சேவையாட்டம்

7. "மாதவி ஆடிய பதினொருவகை ஆடல்களில் 'குடக்கூத்து' என்ற ஆடல் குறிப்பிடத்தக்கது" என்னும் செய்தி இடம் பெற்ற நூல் ........................

அ) மணிமேகலை **ஆ) சிலப்பதிகாரம்**

இ) பரதநூல் ஈ) சீவகசிந்தாமணி

## 2. பூத்தொடுத்தல்

**- உமா மகேஸ்வரி**

**முக்கிய குறிப்புகள்**

- இக்கவிதையில் இடம் பெற்றுள்ள வரிகள் பூக்களை மட்டும் குறிக்கவில்லை. பூவினைப் போன்ற மென்மையுடைய பூவையர் என்று அழைக்கும் பெண்ணினம் பற்றியும் கூறுவது போல் அமைந்துள்ளது.

**1. பகுபத உறுப்பிலக்கனம்**

**தொடுப்பது - தொடு + ப் + ப் + அது**

தொடு – பகுதி; ப் – சந்தி; ப் – எதிர்கால இடைநிலை; அது – ஒன்றன்பால் வினைமுற்றுவிகுதி

1. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால் **ஆ) தளரப் பிணைத்தால்**

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

## 3. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

**- குமரகுருபரர்**

**மனப்பாடப்பகுதி**

*செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்*
*திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்*
*பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடக்*
*கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்*

*கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட*
*வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை*
*ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை*

**- செங்கீரைப் பருவம், பா.எண்.8**

**முக்கிய குறிப்புகள்**

**பிள்ளைத்தமிழ்:** இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ, பாட்டுடைத் தலைவராய்க் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர். பாட்டுடைத் தலைவரின் செயற்கரியச் செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத்தமிழ் ஆகும்.

**பெயர்க்காரணம்:** புள்ளிருக்கு வேளூர் எனப் புகழ்பெற்ற வைத்தீஸ்வரன் கோவிலில் எழுந்தருளியுள்ள முத்துக்குமாரசுவாமி என்னும் முருகப் பெருமானை குழந்தையாக பாவித்துப் பாடப்பெற்ற நூலாதலின் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் என வழங்கப்படுகிறது.

**பிள்ளைத்தமிழ் இலக்கணம்:** தமிழ் மொழியில் வழங்கும் 96 சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ் ஆகும். உலகில் கடவுளையோ, மக்களுள் சிறந்தவர்களையோ சிறு குழந்தைகளாய்ப் பாவித்துக் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் எல்லாம் அமையப் பாடுவது பிள்ளைத்தமிழ் குழந்தைப்பருவ நிகழ்வுகளைப் பத்துப் பருவங்களாக அமைத்து, பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் பாடப்பெறும். இது ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

**இரு பருவங்களுக்கும் பொதுவான பருவங்கள்:** காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி

**ஆண்பாற் பிள்ளைத்தமிழ் கடைசி மூன்று பருவங்கள்:** சிற்றில், சிறுபறை, சிறுதேர்

**பெண்பாற் பிள்ளைத்தமிழ் கடைசி மூன்று பருவங்கள்:** கழங்கு, அம்மானை, ஊசல்

**ஆசிரியர் குறிப்பு:** ஆசிரியர் குமரகுருபரர். திருநெல்வேலியை அடுத்த ஸ்ரீவைகுண்டத்தில் சண்முகசிகாமணிக் கவிராயருக்கும், சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினர். ஐந்து வயது வரை ஊமையாய் இருந்து, திருச்செந்தூர் முருகன் அருளினால் பேசும் திறம் பெற்று கந்தர் கலிவெண்பா என்ற நூலைப் பாடினார். காலம் 17ஆம் நூற்றாண்டு, தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் வல்லமை பெற்றவர்.

**இயற்றிய நூல்கள்:** கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலா வல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை, சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட்கோவை, பண்டார மும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம், தில்லை சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ஆகியவை ஆகும்.

**செங்கீரைப் பருவம்:** குழந்தை பிறந்து ஐந்தாம் மாதத்தில் நடைபெறும் இப்பருவத்தில் குழந்தை ஒரு காலை மடக்கி, ஒருகாலை நீட்டி, இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலை நிமிர்த்தி முகம் (தலை) அசைந்தாடும் பருவம்.

**1. பொருள் கூறுக**

| | |
|---|---|
| பண்டி – வயிறு; | கிண்கிணி – ஒருவகைக்காலணி |
| அசும்பிய – ஒளிவீசுகிற | முச்சி – தலையுச்சிக்கொண்டை |

அரைஞாண் – அரைஞான் கயிறு அரைமணி – இடுப்பில் அணியும் ஒருவகை அணி

அம்பவழம் – அழகிய பவளம் ஆதி – முதன்மை

**2. இலக்கணக் குறிப்பு**

குண்டலமும் குழைக்காதும் – உம்மைத்தொகைகள் (எண்ணும்மை)

ஆடுக – வியங்கோள் வினைமுற்று

பைம்பொன் – பண்புத்தொகை

**3. பகுபத உறுப்பிலக்கணம்**

பதிந்து – பதி + த்(ந்) + த் + உ

பதி – பகுதி; த் – சந்தி; ந் – ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி

**3. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. 'அதிவயித்தியநாதபுரிக் குகனாடுக' இதில் குகன் என அழைக்கப்படுபவர் ........................

**அ) முருகன்** ஆ) சிவன்

இ) வேடன் குகன் ஈ) திருமால்

2. பாடல் இடம் பெற்றுள்ள பருவம் .....................

அ) அம்புலிப்பருவம் ஆ) காப்புப்பருவம்

**இ) செங்கீரைப்பருவம்** ஈ) சப்பாணிப்பருவம்

3. அணிகலன்களை அணியும் உடலுறுப்புடன் பொருத்துக

| **அணிகலன்** | | **அணியும் உடலுறுப்பு** |
|---|---|---|
| அ) சிலம்பு, கிண்கிணி | - | 1. தலையில் அணிவது |
| ஆ) அரைஞாண் | - | 2. காதில் அணிவது |
| இ) சுட்டி | - | 3. காலில் அணிவது |
| ஈ) குண்டலம், குழை | - | 4. இடுப்பில் அணிவது |
| உ) சூழி | - | 5. நெற்றியில் அணிவது |

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4, உ – 5 ஆ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 5, உ – 1

**இ) அ – 3, ஆ – 4, இ – 5, ஈ – 2, உ – 1** ஈ) அ – 5, ஆ – 4, இ – 3, ஈ – 2, உ – 1

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக**

(கிண்கிணி, ஸ்ரீவைகுண்டம், தொண்ணூற்றாறு, வயிறு, குமரகுருபரர்)

1. சிற்றிலக்கியங்கள் **தொண்ணூற்றாறு** வகைப்படும்
2. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் நூலை இயற்றியவர் **குமரகுருபரர்**
3. குமரகுருபரர் பிறந்த ஊர் **ஸ்ரீவைகுண்டம்**
4. 'பண்டி' என்பதன் பொருள் **வயிறு**
5. செம்பொன்னடி சிறு **கிண்கிணி** யோடு சிலம்பு கலந்தாடின

## 4. கம்பராமாயணம்

**- கம்பர்**

**மனப்பாடப்பகுதி**

1. *தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க,*
*கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க,*
*தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்*
*வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ.*

2. *வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்*
*பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்;*
*மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ?*
*ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.*

**முக்கிய குறிப்புகள்**

- **நூல்:** கல்வியில் பெரியர் கம்பரால் இயற்றப்பட்டது, ஆதலின் கம்பராமாயணம் எனப் பெயர் பெற்றது. வடமொழியிலுள்ள வால்மீகி எழுதிய இராமாயணத்தை தழுவி எழுதப்பட்ட வழிநூலாகும். கம்பரால் இயற்றப்பட்ட வாழ்மீகி எழுதிய இராமாயணத்தை தழுவி எழுதப்பட்ட வழிநூலாகும். கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணம் என விரியும். இந்நூலுக்கு கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம் என்பதாகும். இந்நூல் பாலகாண்டம் என்ற ஆறு காண்டங்களைக் கொண்டது. இவற்றின் தொடர்ச்சியாக உத்தரகாண்டம் என்பது ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டுள்ளது.
- **நூலின் பெருமை:** சொற்சுவை, பொருட்சுவை, கற்பனைநயம், சந்தநடை, அணி இலக்கண வகைகள் எல்லாம் அமையப் பெற்று தமிழ் மொழிக்கு சிறப்பு சேர்க்கும் நூலாகும். தமிழில் உள்ள பெரும் காவியங்களுள் காம்பராமாயணமே பெரியது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டது.
- **ஆசிரியர் வரலாறு:** கல்வியில் பெரியவர் கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் கம்பர். சோழநாட்டில் தேரழுந்தூரைச் சேர்ந்தவர் – திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் இவரை ஆதரித்தார். ஒட்டக்கூத்தர், புகழேந்தி என்பவர் இவர் காலத்தில் வாழ்ந்த புலவர்கள்.
- **இயற்றிய வேறு நூல்கள்:** சடகோபர் அந்தாதி, ஏர் எழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதி அந்தாதி, "விருத்தம் என்னும் ஒண்பாவுக்கு உயர்கம்பன்" எனப் போற்றப் பட்டவர்.

**1. பொருள் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தாது | - | மகரந்தம் | போது | - | அரும்பு |
| மகரயாழ் | - | 19 நரம்பு கட்டிய வீணை | தண்டலை | - | சோலை |
| கொண்டல் | - | மேகம் | முழவு | - | மத்தள ஒசை |
| திரை | - | அலை | மருதம் | - | மருதநிலம் |
| வண்மை | - | கொடை | செறுநர் | - | போர் செப்பவர் |
| திண்மை | - | வலிமை | வெய்யோன் | - | சூரியன் |
| இளையான் | - | தம்பி, இலட்சுமணன் | திரை | - | அலை |
| வேழநெடும்படை | - | யானைகள் உடைய பெரும்படை | ஏழமை | - | அறிவில்லாத |
| கறங்கு | - | காற்றாடி | காலதூதர் | - | எமதூதர் |

மாயவாழ்வு - பொய்யான வாழ்வு

**2. இலக்கணக்குறிப்பு**

தண்டலை – தண் + தலை = பண்புத்தொகையாகப் பிறந்த அன்மொழித்தொகை

யாழ் – யாழிசைக்கு ஆகுபெயர்

மாதுஒ – ஈற்றசை

இடையாளொடும், இளையானோடும் – உம்மைத்தொகை

நெடும்படை, நெடுந்திரை – பண்புத்தொகைகள்

எலாம் – எல்லாம் என்பதன் இடைக்குறை

காலதூதர் – நான்காம் வேற்றுமைத்தொகை

எழுந்திராய் எழுந்திராய்; உறங்குவாய் உறங்குவாய் – அடுக்குத்தொடர்கள்

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

**ஈ) அங்கு வறுமை இல்லாததால்**

2. மருத அரசி வீற்றிருக்க மயில்கள் ஆடின மற்றவை தாமரை விளக்குகளாக, மேகம் மத்தளம் மீட்டுகின்றன என்பது .................

**அ) கோசலநாட்டின் வளம்** ஆ) கேயகநாட்டின் வளம்

இ) இலங்கையின் வளம் ஈ) மிதிலையின் வளம்

2. மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ? என வருணிக்கப்பட்டவர் ......................

அ) குகன் **ஆ) இராமன்**

இ) சீதை ஈ) இலக்குமணன்

3. 'ஏழைமை வேடன் இறந்திலன்' என்று கூறியவன் ......................

**அ) குகன்** ஆ) இராமன்

இ) தசரதன் ஈ) இலக்குமணன்

4. "ஆழநெடுத்திரை ஆறு கடந்து இவர் போவாரோ" இதில் ஆறு எனக் கூறப்பட்ட ஆறு ...................

அ) வைகை ஆ) காவிரி

**இ) கங்கை** ஈ) கண்டகி

5. "கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையில" என்பதில் கறங்கு, காலன் என்பதன் பொருள் ................

**அ) காற்றாடி, எமன்தூதர்** ஆ) எமன், காற்று

இ) காற்று, காவலாளி ஈ) காற்றாடி, அரசன்

6. கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்களின் எண்ணிக்கை ......................

**அ) ஆறு** ஆ) எட்டு

இ) ஏழு ஈ) ஐந்து

7. கம்பரை ஆதரித்த வள்ளல் .....................

அ) பாரிவள்ளல் ஆ) வள்ளல் சீதக்காதி

இ) வள்ளல் பாண்டித்துரை தேவர் **ஈ) சடையப்ப வள்ளல்**

## 5. பாய்ச்சல்

**- சா. கந்தசாமி**

- முக்கிய குறிப்புகள்
- **'தக்கையின் மீது நான்கு கண்கள்'** என்ற சிறுகதை தொகுப்பில் பாய்ச்சல் என்னும் கதை இடம்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் **சா.காந்தசாமி**. இவர் மயிலாடுதுறை நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்தவர்.
- இவர் எழுதிய சாயாவனம் புதினத்தால் எழுத்துலகில் புகழ்பெற்றார்.
- விசாரணைக் கமிஷன் என்னும் புதினத்திற்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார்.
- சுடுமண் சிலைகள் என்ற குறும்படத்திற்கு அனைத்துலக விருதையும் பெற்றுள்ளார்.
- நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பதினொன்றுக்கும் மேற்பட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். தொலைந்து போனவர்கள், சூர்யவம்சம், சாந்தகுமாரி முதலியவை இவர் எழுதிய புதினங்களுள் சில.

## 6. அகப்பொருள் இலக்கணம்

**1. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள் கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதிக**

முதற்பொருள்: நிலமும் பொழுதும் – முல்லை – காடு

பொழுது – பெரும் பொழுது – கார்காலம்

சிறு பொழுது – மாலை

கருப்பொருள்கள்: உணவு – வரகு

**2. "நேற்று நான் பார்த்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மித மகிழ்ந்தேன்" என்று சேகர் என்னிடம் கூறினான் – இக்கூற்றை அயற் கூற்றாக எழுதுக**

நேற்று அவன் பார்த்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து அவன் மகிழ்ந்தான் என்று சேகர் என்னிடம் கூறினான்

**3. கீழ்வரும் தொடரில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக**

உழவர்கள் மலையில் உழுதனர்

முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**விடை:** உழவர்கள் வைகறைப் பொழுதில் வயலில் உழுதனர் ..................... (மருதம்)

நெய்தல், தாழை பூவைப் பார்த்தவாறே பரதவர் .................... (நெய்தல்) கடலுக்கு சென்றனர்.

**4. பொருள் இலக்கணம் என்றால் என்ன?**

பொருள் என்பது ஒழுக்கமுறையாகும். மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் அடைவதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களின் இலக்கணத்தைக் கூறுவதே பொருள் இலக்கணமாகும்.

**5. பொருள் இலக்கணம் எத்தனை வகைப்படும்?**

வாழ்வியலை விளக்கும் பொருள் இலக்கணம் அகம், புறம் என இருவகைப்படும்.

**6. அகப்பொருள், புறப்பொருள் – விளக்குக**

**அகப்பொருள்:** அகப்பொருளாவது ஒத்த அன்புடைய தலைவனும், தலைவியும் தம்முள் அனுபவிக்கும் இன்பத்தைப் பற்றிக் கூறுவதாம். அது பிறருக்கு கூற இயலாததாய், அகத்திலேயே உணர்ந்து அனுபவிக்கக்கூடியது. எனவே அகம் எனப்பட்டது.

**புறப்பொருள்:** புறப்பொருளாவது புறத்தார்க்குக் கூறக்கூடியதாய் அமைந்த அறம், பொருள் ஆகியவற்றைக் கூறுவது.

**7. அகத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

அகத்திணைகள் ஏழுவகைப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கினை, பெருந்திணை என்பனவாகும்.

**8. அன்பின் ஐந்திணைகள் யாவை?**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன அன்பின் ஐந்திணைகள் ஆகும்.

**9. முதற்பொருள் என்பன யாவை?**

ஒவ்வொரு திணைக்கும் உரிய நிலமும், பொழுதும் முதற்பொருளாகும்.

**10. கருப்பொருள் யாவை?**

அந்தந்த நிலத்துக்குரிய உரிய அக ஒழுக்கம் உரிப்பொருள் எனப்படும்.

11. உரிப்பொருள் என்பது என்ன?

ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய அக ஒழுக்கம் உரிப்பொருள் எனப்படும்.

12. நிலமாகிய முதற்பொருள் எத்தனை வகைப்படும்?

நிலமாகிய முதற்பொருள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகைப்படும்.

குறிஞ்சி – மலையும், மலையைச் சார்ந்த இடம்

முல்லை – காடும், காடு சார்ந்த இடம்

மருதம் – வயலும், வயலைச் சார்ந்த இடம்

நெய்தல் – கடலும், கடலைச் சார்ந்த இடம்

பாலை – வறண்ட சுரமும், சுரம் சார்ந்த இடம்

**13. பொழுது எத்தனை வகைப்படும் – விவரி**

பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். பெரும்பொழுது ஆறு வகைப்படும். அவை இளவேனில், முதுவேனில், கார், குளிர், முன்பனி, பின்பனி என்பனவாகும்.

இளவேனில் - சித்திரை, வைகாசி

முதுவேனில் - ஆனி, ஆடி

கார்காலம் - ஆவணி, புரட்டாசி

குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை

முன்பனிக்காலம் - ஐப்பசி, கார்த்திகை

முன்பனிக்காலம் - மார்கழி, தை

பின்பனிக்காலம் - மாசி, பங்குனி

சிறுபொழுதும் ஆறு வகைப்படும். அவை காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம், வைகறை என்பனவாம்.

காலை – காலை 6 மணி முதல் 10 மணி வரை

நண்பகல் – காலை 10 மணி முதல் 2 மணி வரை

ஏற்பாடு – பகுல் 2 மணி முதல் 6 மணி வரை மாலை – மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை

யாமம் – இரவு 10 மணி முதல் 2 மணி வரை வைகறை – இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை

**14. ஐவகை நிலங்களுக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுதைக் கூறுக**

| நிலம் | சிறுபொழுது | பெரும்பொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | யாமம் | குளிர்காலம், முன்பனிக்காலம் |
| முல்லை | மாலை | கார்காலம் |
| மருதம் | வைகறை | ஆறு பெரும்பொழுதுகளும் |
| நெய்தல் | ஏற்பாடி | ஆறு பெறும்பொழுதுபளும் |
| பாலை | நண்பகல் | இளவேனில், முதுவேனில் |

15. சரியான விடையைத் தேர்வு செய்க

1. குறிர்காலத்தைப் பொழுதாதக் கொண்ட நிலங்கள் ..................

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

**இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்** ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

2. ஓயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?

அ) ஓயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்

ஆ) ஓயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது

**இ) ஓயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது**

ஈ) ஓயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்

3. முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதும், சிறபொழுதும் .........................

**அ) கார்காலம், மாலை** ஆ) குளிர்காலம், யாமம்

இ) இளவேனில், நண்பகல் ஈ) கார்காலம், யாமம்

4. ஆறு பெரும்பொழுதுகள் கொண்ட திணை (நிலம்) ........................

அ) குறிஞ்சி, பாலை ஆ) முல்லை, பாலை

**இ) மருதம், நெய்தல்** ஈ) மருதம், பாலை

5. சிறுபொழுதிணை உரிய நேரத்துடன் இணைத்து விடைகாண்க

அ) காலை - 1. மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை

ஆ) நண்பகல் - 2. இரவு 10மணி முதல் 2மணி வரை

இ) ஏற்பாடு - 3. இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை

ஈ) மாலை - 4. காலை 6 மணி முதல் 10 மணி வரை

உ) யாமம் - 5. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை

ஊ) வைகறை - 6. காலை 10 மணி முதல் 2 மணி வரை

அ) அ – 6, ஆ – 5, இ – 4, ஈ – 3, உ – 2, ஊ – 1 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1, உ – 5, ஊ – 6

இ) அ – 1, ஆ – 3, இ – 2, ஈ – 4, உ – 6, ஊ – 5 **ஈ) அ – 4, ஆ – 6, இ – 5, ஈ – 1, உ – 2, ஊ – 3**

6. குறிஞ்சிக்குரிய கருப்பொருள்கள் .........................

அ) வருணன், பரதன், முதலை, தாழை, புன்னை, பட்டினம்

**ஆ) முருகன், வெற்பன், கரடி, காந்தள், அகில், சிறுகுடி**

இ) திருமால், ஊரன், எருமை, தாமரை, காஞ்சி, பேரூர்

ஈ) கொற்றணு, எயினர், வலியிழந்த யானை, குரவம், இலுப்பை, குறும்பு

7. வயலும் வயலைச் சார்ந்த நிலம், கடலும் கடலைச் சார்ந்த இடம் .......................

அ) குறிஞ்சி, மருதம் **ஆ) மருதம், நெய்தல்**

இ) முல்லை, மருதம் ஈ) குறிஞ்சி, நெய்தல்

**16. மொழிபெயர்க்க...**

Koothu

Therukoothu is, as its name indicate, a popular from the theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists, on the spot. Fifteen to twenty actors with a small or chestra from koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**தெருக்கூத்து**

தெருக்கூத்தே இன்றைய நாடகங்களுக்கு அடிப்படையாய் தெருக்களில் நடிக்கப்பட்ட கலையாகும். தெருக்கூத்து கிராமத்தைச் சார்ந்த கலைஞர்களாலேயே நிகழ்த்தப்படுகிறது. அதன் கதைகள் இராமாயணம், மகாபாரதம் பழமையான புராணங்களில் இருந்து எழுத்தப்பட்டவையே, அதில் நிறைய பாடல்களும் வசனங்களும் அதில் நடிக்கும் கலைஞர்களாலேயே வளப்படுத்தப்பட்டு நடக்கும் இடத்திலேயே அமையும். பதினைந்து முதல் இருபது கலைஞர்களும், ஒரு சிறிய இசைக்குழுவுமே தெருக்கூத்தின் குழுக்களாக இருப்பர். இசைக்குழுவில் பாடுவோர் களும், நடிகரும் சொந்தக் குரலிலேயே பேசி, பாடி நடிப்பர். நடிக்கும் கலைஞர்களின் ஆடை அலங்காரம் பளிச்சென்ற ஒப்புனையும் அவர்களாலே அவர்களாலே செய்யப்படும். தெருக்கூத்து கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமானது.

**17. தொடர்களை அறிவோம், தொடர்களை அடைப்புக்குறிக்குள்ளவாறு மாற்றுக**

1. அழைப்புமணி ஒலித்தது. கயல்வழி கதவைச் திறந்தார். (தனிச்சொற்றொடரைக் கலவைச் சொற்றொடராய் மாற்றுக)

**விடை:** அழைப்புமணி ஒலித்ததால், கயல்வழி கதவைத் திறந்தார்.

2. இன்னாசிரியர் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்ககங்களில் அடுக்கி வைத்தார். புத்தங்களைக் கேட்பவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார் – தொடர் சொற்றொடராய் மாற்றுக

**விடை:** இன்னாசிரியர் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்ககங்களில் அடுக்கி, கேட்போருக்கு எடுத்துக் கொடுத்தார்.

3. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக் கொண்டு காலில்சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். – தனிச்சொற்றொடராய் மாற்றுக

**விடை:** ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக்கட்டிக் கொள்வர். காலில் சலங்கை அணிவர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

4. கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார், கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். கலவைச் சொற்றொடராய் மாற்றுக

**விடை:** கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

5. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது (தனிச்சொற்றொடர்களாய் மாற்றுக)

**விடை:** ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.

**6. பிறமொழிச் சொற்களைத் தமிழ் சொற்களாக மாற்றி எழுதுக**

புதிர்: உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடமுள்ள ஒரு தராசை இருமுறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கெட்டைக் கண்டுபிடிக்கவும்.

**விடை:** தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று கோல்டுபிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்குவலாக இருந்தால் கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஷ்கட்டுகளை மட்டும் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!

| பிறமொழிச் சொல் | | தமிழ்ச்சொல் | | | |
|---|---|---|---|---|---|
| கோல்டு பிஸ்கட் | - | தங்ககட்டி | ஈக்குவலாக | - | சமமாக |
| பிஸ்கட் | - | கட்டி | வெயிட் | - | எடை |
| எக்ஸ்பெரிமெண்ட் | - | சோதனை | ரிப்பிட் | - | மறுமுறை, மறுபடி |
| ஆன்சரை | - | விடையை, முடிவை | | | |
| ஆல் தி பெஸ்ட் | - | எல்லாம் நல்லபடி முடியட்டும். எல்லாம் சிறப்பாக இருக்கட்டும். | | | |

**7. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்கள் எண்ணங்களால் நிரப்புக**

1. வானம் கருக்கத் தொடங்கியது மழைவரும் போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் சிவந்தது
3. வெள்ளை மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்
4. கண்ணுக்கு குளுமையாக இருக்கும் பச்சைப் புல்வெளிகளில் கதிரவனின் மஞ்சள் வெளில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே உடல் கருத்துவிடும்

**8. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக**

தங்கும், மரம்வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு மரம்வீடு

வெட்டாதீர்கள் – மனிதனுக்கு அவைதரும் **மரவீடு**

2. காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்**

சோலைப் பூவினில் வண்டினம் **தங்கும்**

3. மலை முகட்டில் மேகம் **கவிழும்** அதைப்

பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்**

4. வாழ்க்கையில் **தோற்பவை** மீண்டும் வெல்லும் இதைத்

தத்துவமாய்த் **தோற்பாவை** கூத்து சொல்லும்.

5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே **விருது** அதில்

வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் **விருந்து**

**9. பொருள் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தால் | - | தாலாட்டு | உழுவை | - | புலி, ஒருவகை மீன் |
| அகவுதல் | - | ஒலித்தல், பாடுதல் | ஏந்தொழில் | - | மிக்க அழகு |
| அணிமை | - | சமீபம் | | | |

## 7. திருக்குறள்

**முக்கிய குறிப்புகள்**

- பொருளீட்டும் நெறி அறிந்து, தீய நெறியில் செல்லுதல் இன்றி அறநெறியில் ஈட்டிய பொருள் அறத்தையும் இன்பத்தினையும் கொடுக்கும்.
- ஒருவன் தன்னிடம் பொருள் உள்ள காலத்தே ஒரு செயலினைத் தொடங்க வேண்டும். அஃது அவன் மலைமேல் ஏறி நின்று கொண்டு **யானைகள் செய்யும் போரைக் கண்டது போன்றதாகும்**.
- ஒரு பொருட்டாய் மதித்தற்கு உரியர் அல்லாரை ஒரு பொருட்டாய் மதிக்கச் செய்யவல்ல பொருளைத்தவிர வேறு சிறந்த **பொருள்** ஏதுமில்லை.

**1. பொருள் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினை | - | தொழில்; | கருவி | - | சாதனம் |
| அருவினை | - | பெறுதற்கரிய வினை | வண்கண் | - | மனவலிமை |
| ஆள்வினை | - | விடாமுயற்சி | மதி | - | வடசொல் |
| கைத்து | - | கைப்பொருள் | கையத்து | - | பெயரெச்சம் (அழுதலாகிய கண்ணீர்) |
| இடும்பை | - | துன்பம் | நிரம்பு | - | வறுமை |
| இகழ்ந்து | - | அவமதித்து | எள்ளாது | - | இகழாது |
| ஈவாரை | - | கொடுப்போரை | மேவன | - | விரும்புவழி |
| தொழுகலான் | - | ஒழுகிவாழ்வார் | | | |

**2. இலக்கணக்குறிப்பு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குடி | - | ஆகுபெயர் | குடிகாத்தல் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| நுட்பம் | - | பண்புப்பெயர் | அதிநுட்பம் | - | இடைச்சொல் |
| செயற்கை | - | தொழிற்பெயர் | இல்லை | - | குறிப்பு வினைமுற்று |
| அறன் | - | (அறம்) இறுதிப்போலி | அறிந்து | - | வினையெச்சம் |

அறன் ஈனும், திறன் அறிந்து, இன்பமும் ஈனும் - இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்

| | | |
|---|---|---|
| புல்லார் | - | முற்றெச்சம் |
| புரள | - | வினையெச்சம் |
| வந்தபொருள் | - | பெயரெச்சத்தொடர் |
| அருளோடும், அன்போடும் | - | உம்மைத்தொகைகள் |
| வாரா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| விடல் | - | வியங்கோள் வினைமுற்று (விடு + அல்); அல் – வியங்கோள் விகுதி |

| | | |
|---|---|---|
| ஒன்று | - | எண்ணாகுபெயர் |
| அற்று | - | உவம உருபு, |
| ஆல் | - | ஆசை |
| கண்டற்று | - | கண்டகற்று – தொகுத்தல் விகாரங்கள் |
| செய்க | - | வியங்கோள் வினைமுற்று |
| செருநகர் செருக்கு | - | ஆறாம் வேற்றுமைத் தொகை (செருநரது செருக்கு) |
| எஃகு | - | கருவியாகு பெயர் |
| அதனின் கூரியது | - | (இன்) ஐந்தாம் வேற்றுமை உருபு. ஒப்புப் பொருளில் வந்துள்ளது |
| அமுத கண்ணீர் | - | பெயரெச்சம் (அழுதலாகிய கண்ணீர்) |
| அன்பிலன், துணையிலன் | - | அன்பு, துணை – அஃறிணை எழுவாய் |
| இன்மை | - | எதிர்மறை பண்புப்பெயர் |
| இன்மையின் | - | ஐந்தாம் வேற்றுமை உருபு |

**3. பகுபத உறுப்பிலக்கணம்**

**வாழ்வானை - வாழ் + வ் + ஆன் + ஐ**

வாழ் – பகுதி; வ் – இடைநிலை; ஆன் – விகுதி; ஐ – வேற்றுமைஉருபு

**இகழ்ந்து - இகழ் + த்(ந்) + த் + உ**

இகழ் – பகுதி, த் – சந்தி (ந்) விகாரம்; த் – இடைநிலை; உ – விகுதி

**ஒப்பாரரி - ஒப்பு + ப் + பு + ஆர் + இ**

ஒப்பு – பகுதி; ப் – சந்தி; பு – விகுதி; ஆர் – துணைப்பெயர்; இ – விகுதி

ஒப்பாரி – தொழிற்பெயர் – (நிகராக)

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. அமைச்சர் அறிந்து செயலாற்ற வேண்டியது ...................

**அ) கருவி, காலம், செயலின்தன்மை, செய்யும் முறை** ஆ) கருவி, கத்தி, செயல், தொழில்

இ) கருவி, கடமை, செயலின்தன்மை, செய்யும் முறை ஈ) கருவி, செயல், வரிவசூல், காலம்

2. கீழ்க்காணும் திருக்குறள் முதலடியுடன் சரியான இரண்டாமடியைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1) செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத் | - | அ) றண்டாகச் செய்வான் வினை |
| 2) பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் | - | ஆ) சுற்றமாச் சுற்றும் உலகு |
| 3) குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்னைத்தொன் | - | இ) தியற்கை அறிந்து செயல் |
| 4) குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் | - | ஈ) பொருளல்ல தில்லை பொருள் |

அ) 1 – அ, 2 – ஆ, 3 – இ, 4 – ஈ **ஆ) 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ**

இ) 1 – ஈ, 2 – இ, 3 – ஆ, 4 – அ ஈ) 1 – இ, 2 – அ, 3 – ஆ, 4 – ஈ

3. முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்த்த பொருள் ஒருவருக்கு ......................

**அ) அறத்தையும், இன்பத்தையும் தரும்** ஆ) அன்மையும், பண்பையும் தரும்

இ) புகழையும், பதவியையும் தரும் ஈ) பகையும், பதவியும் தரும்

## இயல் – 7: நாகரிகம், தொழில், வணிகம், நாடு, சமூகம், அரசு, நிருவாகம்

### 1. சிற்றகல் ஒளி (தன் வரலாறு)

**- ம.பொ.சிவஞானம்**

**முக்கிய குறிப்புகள்**

- 1906ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் நாள் சென்னை சால்வன் குப்பம் பகுதியில் வாழ்ந்த பொன்னுசாமி, சிவசாமி என்பவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ஞானப்பிரகாசம் எனப் பெயரிட்டனர். ஆனால் சரபையர் என்ற முதியவர் அவருடைய பெயரை **'சிவஞானி'** என்றே அழைத்தார். பின்னாளில் அவரிட்டு அழைத்த சிவஞானி என்ற பெயரே சிறிது திருத்தத்துடன் **சிவஞானம்** என்று நிலைபெற்றது.

**மார்ஷல் ஏ.நேசமணி**

- இளம் வயதில் சமூக நீதிக்காகப் போராடியவர்.
- வழக்கறிஞர், சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்
- குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர். இதனால் மார்ஷல் நேசமணி என்று அழைக்கப்பட்டவர்.
- 1956 நவம்பர் 1இல் கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழ்நாட்டுடன் இணைத்து தமிழகத்தின் எல்லையாக மாறக் காரணமானவர்.
- இவர் நினைவாக தமிழக அரசு இவருக்கு நாகர்கோவிலில் சிலையு, மணிமண்டபமும் அமைத்துள்ளது.

**மா.பொ.சி**

- **சிலம்புச்செல்வர்** எனப் போற்றப்பட்டவர்
- இவரின் இயற்பெயர் **ஞானப்பிரகாசம்**. பின் **சிவஞானம்** என மாறியது
- விடுதலைப் போராட்ட வீரர்
- 1952 – 1954 வரையில் சட்டமன்ற மேலவை உறுப்பினர்.
- 1972 – 1978 வரையில் சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்
- தமிழரசு கழகத்தைத் தொடங்கியவர்.
- இவர் எழுதிய வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்னும் நூலுக்கு 1966 ஆம் ஆண்டு சாகத்திய அகாதெமி விருது பெற்றார்.
- தமிழகத்தின் வடஎல்லைப் போராட்டம், தென்எல்லைப் போராட்டங்களைத் தீவிரமாக நடத்தி வெற்றி கண்டவர்
- இவருக்குத் தமிழக அரசு திருத்தணியிலும், சென்னைத் தியாகராய நகரிலும் சிலை அமைந்துள்ளது.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும். மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே.

   **அ) திருப்பதியும், திருத்தணியும்** ஆ) திருத்தணியும், திருப்பதியும்
   இ) திருப்பதியும், திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றம், பழனியும்

2. தமிழனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது .......................

   அ) திருக்குறள் ஆ) புறநானூறு
   இ) கம்பராமாயணம் **ஈ) சிலப்பதிகாரம்**

3. ம.பொ.சி அவர்களுக்குப் பெற்றோர் இட்ட பெயர் .....................

   அ) சிவஞானம் ஆ) சிவஞானி

**இ) ஞானப்பிரகாசம்** ஈ) சிவநேசன்

4. ம.பொ.சி அவர்களின் தாய் இவருக்குப் பயிற்றுவித்த பாக்கள் ....................

**அ) அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை** ஆ) ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன்

இ) அல்லி அர்ச்சுணன் கதை, பவளக்கொடி மாலை ஈ) பவளக்கொடி மாலை, சிலப்பதிகாரம்

5. ம.பொ. சிவஞானம் எழுதிய சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல் ..................

அ) வள்ளலார் வகுத்த வழி **ஆ) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு**

இ) வள்ளலாரும் பாரதியும் ஈ) வள்ளலாரும் காந்தியடிகளும்

## 2. ஏர் புதிதா?

**- கு.ப.ராஜகோபாலன்**

**முக்கிய குறிப்புகள்**

- வேளாண்மை செழிக்கவும், மானுடம் தழைக்கவும், சித்திரைத் திங்களில் நடத்தப்படும் பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடமாகும்.
- **'ஏர் புதிதா'** என்னும் படைப்பின் ஆசிரியர் **கு.ப. ராஜகோபாலன்** இக்கவிதை கு.ப.ரா. படைப்புகள் நூல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 1902இல் கும்பகோணத்தில் பிறந்தவர். மிகச் சிறந்த சிறுகதை ஆசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர் மறுமலர்ச்சி எழுத்தாளர் என்ற பண்முகம் கொண்டவர். தமிழ்நாடு, பாரதமணி, பாரததேவி, கிராம வாழியன் ஆகிய இதழ்களின் ஆசிரியராய்ப் பணியாற்றியவர். அகலிகை, ஆத்ம சிந்தனை ஆகியவை நூல்களின் தொகுப்புகள்.

**1. பொருள் கூறுக**

பதம் - பக்குவம் வெள்ளி – சுக்கிரன், வெண்மை

கொழு - கலப்பைக் கொழுவானி சிலிர்த்தல் - தளிர்த்தல்

கடுகி - விரைவாக

பொன்னேர் - பருவகாலத்தில் நல்ல நாளில் முதன்முறையாக உழும் கலப்பை

நுகத்தடி - எருதுகளின் கழுத்தில் பூட்டும் மரம்

**2. இலக்கணக்குறிப்பு எழுதுக**

தொழுது, விரைந்து, கடுகிச்செல், விரைந்து போ – வினையெச்சங்கள்

நண்பா – விளித்தொடர்

மாட்டைப் பூட்டி, காட்டைக்கீறு – இரண்டாம் வேற்றுமைகள் (ஐ)

3. சரியான அகரவரிசையைத் தேர்வு செய்க

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

**இ) உழவு, ஏர், மண், மாடு** ஈ) ஏர், உழவு, மாடு, மண்

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக**

(சுக்கிரன், உழவர், கு.ப. இராஜகோபால், பொன்ஏர்பூட்டல்)

அ) உலகினுக்கு அச்சாணி போன்றவர் **சுக்கிரன்**

ஆ) தமிழர் பாண்பாட்டின் மகுடம் **உழவர்**

இ) ஏர் புதிதா என்னும் கவிதையை இயற்றியவர் **கு.ப.ராசகோபாலன்**

ஈ) வெள்ளி முளைத்தது. வெள்ளி என்பது **பொன்னேர் பூட்டல்**

## 3. மெய்க்கீர்த்தி

**- இரண்டாம் இராசராச சோழன்**

**முக்கிய குறிப்புகள்**

- அரசர்கள் தங்களின் வரலாறும், பெருமையும் காலம் கடந்தும் நிலைத்து நிற்க அவைகளை கல்லில் செதுக்கினர். தொடக்கத்தில் பல்லவர் கல்வெட்டாயும், பாண்டியர் செப்பேடாயும் அமைத்துத் தொடங்கினர். சோழர் காலத்தில் அவை **மெய்க்கீர்த்தி** எனப் பெயர்பெற்றது. மெய்க்கீர்த்திகள் செப்பேடான வடிவமுடனும், கல் இலக்கியகளாகவும் அமைந்து மன்னர்களின் புகழ், செயல்பாடுகள், போர் ஆட்சி முறை போன்றவற்றைக் கூறுவனவாக அமைந்தது.
- முதலாம் இராசராசன் காலம் தொடங்கி மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டன. மெய்க்கீர்த்தியின் முதல் பகுதியில் மன்னரைப் புகழ்ந்து இலக்கியநயம்பட புலவர்களால் எழுதப்பட்டு, கல்தச்சர்கள் மூலம் கல்லில் பொறிக்கப்படும் இவ்வாறு மெய்க்கீர்த்திகள் உருவாகின்றன.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. தன்நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன் என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்.

அ) மேம்பட்ட நிருவாகத் திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் **ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்**

2. இராஜராஜன் நாட்டில் மாவே ..................... மாமலலே ...................

**அ) வடுப்படுவன, கடியவாயின** ஆ) கடியவாயின, வடுப்படுவன

இ) வடிப்படுவன, வரைவேயே ஈ) கடியவாயின, கொடியவாயின

**3. பொருத்துக**

| | | |
|---|---|---|
| அ) படிபானையே | - | 1. யரற்றுவன |
| ஆ) வடிமணிச்சிலம்பே | - | 2. கலக்குண்பன |
| இ) செல்லோடையே | - | 3. மருளுடையன |
| ஈ) வருபுனலே | - | 4. பிணிப்புண்பன |
| உ) இளமான்களே | - | 5. சிறைப்படுவன |

அ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 3, உ – 5 **ஆ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 5, உ – 3**

இ) அ – 5, ஆ – 4, இ – 3, ஈ – 4, உ – 5 ஆ) அ – 1, ஆ – 2, இ – 4, ஈ – 3, உ – 5

## 4. சிலப்பதிகாரம்

**- இளங்கோவடிகள்**

**மனப்பாடப்பகுதி**

*தூசும் துகிரும் ஆரமும் அகிலும்*
*மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்*
*அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா*
*வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;*
*பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு*

*கூலம் குவித்த கூல வீதியும்;*

**முக்கிய குறிப்புகள்**

- பெயர்க்காரணம்: சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். சிலம்பினால் அதிகரித்த வரலாற்றைக் கூறும் நூல். சிலம்பின் செயலை மையமாய்க் கொண்ட கதையைக் கூறுவதால் சிலப்பதிகாரம் எனப்படுகிறது.
- இந்நூல் இயல், இசை, நாடகம் என்னும் முப்பொருளும் கலந்து முத்தமிழ்க்காப்பியம் என்றும், நாடகக்காப்பியம் என்றும் உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் வழங்கப்படுகிறது. இந்நூல் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும்.
- இந்நூல் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது
- இந்நூலுக்கு அரும்பதவுரை ஒன்று உள்ளது. யார் எழுதியவர் எனத் தெரியாது. மேலும் அடியார்க்கு நல்லா, வேங்கடசாமி நாட்டார் என்போர்கள் உரைகளும் உள்ளன.
- நூலாசிரியர் : இளங்கோவடிகள்
  பெற்றோர் : இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்,நற்சோனை
  ஊர் : சேரநாட்டு வஞ்சி மாநகரம்
  சமயம் : சமணம்
  காலம் : கி.பி. இரண்டாம் நூற்றாண்டு
- சிலப்பதிகாரம் கோவலன் கண்ணகி மாதவி ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது. மணிமேகலைக் காப்பியத்துடன் கலைத்தொடர்பு கொண்டிருப்பதால் இரட்டைக்காப்பியம் என இவை இரண்டும் அழைக்கப்படுகின்றன.
- சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கலைத்தொடர்பு கொண்டிருப்பதால் இரட்டைக் காப்பியங்கள் எனப்பட்டன.
- எண்வகைத் தானியங்கள் நெல், கானம், வரகு, இறுங்கு, திணை, சாமை, புல்லு, கோதுமை என்பனவாகும்.
- குழல் (புல்லாங்குழல்) யாழ் மூலம் இசைக்கும் இசைவாணர்கள் குரல், துத்தம் கைக்கிளை, உழை, இளி, விவரி, தாரம் என்னும் ஏழு இசைகளைக் குற்றமின்றி இசைத்து அவர்களின் சிறந்த திறமையைக் காட்டும் பெரும்பாணர் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

**1. பொருள் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுண்ணம் | - | சுண்ணப்பொடி | நறும்சாந்தம் | - | மணம் மிகுந்த சந்தனம் |
| மறுகுளம் | - | தெரு, வீதி | காழியன் | - | பிட்டு வணிகன் |
| கூவியர் | - | அப்ப வணிகர் | கூலம் | - | தானிய வகைகள் |
| பாசவர் | - | வெற்றிலை விற்பவர் | தூசு | - | பட்டு |
| துகிர் | - | பவளம் | நிணம் | - | மாமிசம் |
| நொடை | - | விலை | ஓசுநர் | - | எண்ணெய் வணிகன் |
| கஞ்சகாரன் | - | கன்னான் | மண்ணுள் வினைஞர் | - | ஓவியர் |
| மண்ணீட்டாளர் | - | குழைசாந்தினால் பாவை செய்வோர் | | | |

**2. இலக்கணக்குறிப்பு**

வண்ணமும் சுண்ணமும் - எண்ணும்மை
பயில்தொழில், செய்வினை - வினைத்தொகை
ஆரமும் அகிலும், தூசும் துகிரும், முத்தும் மணியும், குழலினும் யாழினும் – எண்ணும்மை
அரும்பெறல் - பண்புத்தொகை
அறியா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
தெரிந்த - பெயரெச்சம்
இசைந்து - வினையெச்சம்

**3. பகுபத உறுப்பிலக்கணம்**

**மயங்கிய - மயங்கு + இ(ன்) + ய் + அ**

மயங்கு – பகுதி, இ(ன்) – இறந்தகால இடைநிலை, (ன்) – புணர்ந்துகெட்டது, அ – பெயரெச்ச விகுதி

**செறிந்த – செறி + த் (ந்) + த் + அ**

செறி – பகுதி, த் – சந்தி, ந் – விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்சவிகுதி

**இசைத்து – இசை + த் + த் + உ**

இசை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்சவிகுதி

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்கள்
   **அ) புகார், மதுரை, வஞ்சி** ஆ) பால, வஞ்சி, மதுரை
   இ) புகார், அயோத்தியா, வஞ்சி ஈ) அயோத்தியா, பால, புகார்
2. சிலப்பதிகாரம் பிறித்தறியும் முறை
   அ) சிலம்பு + காரம் ஆ) சிலம்பு + அதி + காரம்
   **இ) சிலம்பு + அதிகாரம்** ஈ) சிலம் + பு + அதிகாரம்
3. 'அரும்பிறல்' என்னும் சொல்லை பிரித்தறியும் முறை
   அ) அரு + பெறல் ஆ) அரு + பெறுதல்
   **இ) அருமை + பெறல்** ஈ) அருமை + பெறுதல்
4. பொருத்துக : சொல்லை தொழிலுடன் பொருத்துக
   அ) காழியர் - 1) வெற்றிபாக்கு விற்போர்
   ஆ) கூவியர் - 2) எண்ணெய் வணிகர்
   இ) பாசவர் - 3) பிட்டுவணிகர்
   ஈ) வாசகர் - 4) அப்பம் சுடுவர்
   உ) ஓசுஞர் - 5) பஞ்சவாசம் விற்போர்
   அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4, உ – 5 ஆ) அ – 2, ஆ – 3, இ – 5, ஈ – 4, உ – 1
   **இ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 5, உ – 2** ஈ) அ – 5, ஆ – 4, இ – 3, ஈ – 2, உ – 1
5. *"பகர்வனர் திரிதிரு நகர வீதியும்*
   *பட்டினும் பயிரினும் பருத்தி நூலினும்*
   *கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்*
   *தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"*

1. இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?

**விடை:** இவ்வடிகள் இடம்பெற்ற நூல் 'சிலப்பதிகாரம்'

2. பாடலின் அமைந்த மோனையை எடுத்து எழுதுக

**விடை:** பாடலின் பகர்வனர், பட்டிலும் என்னும் சொற்களில் அடிமோனை அமைந்துள்ளது.

3. எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக

**விடை:** பகர்வனர், நகர வீதியும் – சீர்எதுகை

பட்டினும், கட்டி – அடி எதுகை

4. காருகர் – பொருள் தருக

**விடை:** காருகர் – நெசவுத்தொழில் செய்பவர்

5. இப்பாடலில் காணப்படும் நறுமணப்பொருள்கள் யாவை?

**விடை:** ஆரம் – சந்தனம்

அகில் – வாசனை மரம். அதுவே அதுதரும் வாசனைப் பொருளுக்குப் பெயராய் அமைந்தது.

## 5. மங்கையராய்ப் பிறப்பதற்கே

- பிரெஞ்சு புரட்சியின் போது ஆண்களுக்கு சமமாக பெண்களும் கல்வி, வேலைவாய்ப்பு, சுதந்தரம் என எல்லாவற்றிலும் சமஉரிமை கேட்டுப் போராடினர். அப்போது தொடங்கிய இப்போராட்டம் மெல்ல மெல்ல உலகம் எங்கும் பரவியது. பெண்கள் தங்களின் வலிமையை உணரத் தொடங்கினர். அப்போரட்டங்களின் முடிவே நாள் 1911 மார்ச் 18ஆம் நாள் சர்வதேச மகளிர் தினமாக அறிவிக்கப்பட்டது.
- **கிருஷ்ணம்மாள் ஜெகன்னாதன்**
- மதுரையின் முதல் பட்டதாரிப்பெண்.
- இந்திய அரசின் தாமரை விருது பெற்றவர்.
- சுவிட்சர்லாந்தின் காந்தி அமைதி விருது என பல்வேறு விருதுகளை பெற்றவர்.
- விடுதலைக்கு முன் கல்வி மறுக்கப்பட்ட காலத்திலே போராடிக் கற்றவர். காந்தியச் சிந்தனையால் கவரப்பட்டவர். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையேன வெளியேறு இயக்கம் போன்றவற்றில் பங்கேற்றவர். கணவருடன் பூதான இயக்கத்தில் பணியாற்றியவர். "உழுபவருக்கே நில உரிமை இயக்கம்" தொடங்கி, வேளாண்மை இல்லாத காலத்திலும் வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தவர்.

## 6. புறப்பொருள் இலக்கணம்

**1. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவனைப்படுத்துக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெட்சி | - | கரந்தை | வஞ்சி | - | காஞ்சி |
| நொச்சி | - | உழிஞை | தும்பை | - | வாகை |
| பாடாண் | - | பொதுவியல் | கைக்கிளை | - | பெருந்திணை |

**2. புறத்திணைகள் எத்தனை வகைப்படும். அவை யாவை?**

புறத்திணைகள் பன்னிரண்டாகும். அவை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நெச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகியவை ஆகும்.

**3. வெட்சி, கரந்தைத் திணைகளை விளக்குக**

வெட்சித்திணை: மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில் ஆநிரைகளான மாடுகளைச் சொத்தாகக் கருதினர். ஒரு குழுவினரிடமிருந்து மற்றொரு குழுவினர் ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாக இருந்தது. ஆநிரைகளைக் கவர்ந்து வர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வர். எனவே ஆநிரை கவர்தல் வெட்சித்திணை எனப்பட்டது.

கரந்தைத்திணை: கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்கச் செல்வர். அப்போது கரந்தைப் பூவகைச் சூடிக்கொள்வர். அதனால் கரந்தைத்திணை என்று பெயர் பெற்றது.

**4. வஞ்சித்திணை, காஞ்சித்திணையை விளக்குக**

வஞ்சித்திணை: மண் (வாழும் நாடு) சொத்தாக மாறிய காலத்தில் மண்ணைக் கவர்தல் போராயிற்று. மண்ணாசைக் காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப் பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணையாகும்.

காஞ்சித்திணை: தன் நாட்னைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணையாகும்.

**5. நொச்சித்திணை, உழிஞைத்திணையை கூறுக**

**நொச்சித்திணை:** மண்ணைக் காக்க கோட்டைகள் கட்டப்பட்டன. கோட்டையைக் காத்தல் வேண்டி. உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப் பூவைச் சூடி உள்ளிருந்தே போரிடுவது நொச்சித்திணையாகும்.

**உழிஞைத் திணை:** மாற்றறரசன் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப்பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை எனப்படும்

**6. தும்பைத்திணையை விளக்குக**

பகைவேந்தர் இருவரும் தங்கள் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச் சூடிப் போர்களத்தில் ஒருவருடன் ஒருவர் போரிடுவது தும்பைத்திணை எனப்படும். போரிடும் இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூ மாலையையே சூடியிருப்பார்கள்.

**7. வாகைத்திணை – குறிப்பிடுக**

போரிலே வெற்றி வெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது வாகைத்திணை எனப்படும் வாகை என்றாலே வெற்றியெனப் பொருள்.

**8. பாடாண்திணை விளக்குக**

பாடு + ஆண் + திணை = பாடாண் திணை. பாடக்கூடிய தகுதியுடைய ஆண் மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் புகழ்ந்துபாடுவது.

**9. பொதுவியல் திணையைக் கூறுக**

வெட்சி முதல் பாடாண் திணை வரையுள்ள புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவாய் அமைந்தனவும் அவற்றுள் கூறப்படாதவற்றையும் கூறுவதே பொதுவியல்திணை எனப்படுகிறது.

**10. கைக்கிளைத் திணையாவது யாது?**

கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். அஃதாவது ஆண், பெண் ஆகியோருள் ஒருவரிடம் மட்டும் தோன்றும் அன்பு. இது கைக்கிளை எனப்படும். இஃது ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று என இருவகைப்படும்.

**11. பெருந்திணையை விவரி**

பெருந்திணை என்பது பொருந்தாக்காமம். ஒத்த தலைவனும் தலைவியும் அலலாதவரிடத்து தோன்றும் அன்பாகும். இஃதும் ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று என இருவகைப்படும்.

**12. திணைகளையும், சூடும் பூக்களையும் வரிசையாகக் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெட்சித்திணை | - | வெட்சிப் பூ | கரந்தைத்திணை | - | கரந்தைப் பூ |
| வஞ்சித்திணை | - | வஞ்சிப் பூ | காஞ்சித்திணை | - | காஞ்சிப் பூ |
| நொச்சித்திணை | - | நொட்சிப் பூ | உழிஞைத்திணை | - | உழிஞைப் பூ |
| தும்பைத்திணை | - | துப்பைப் பூ | வாகைத்திணை | - | வாகைப் பூ |

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. இருநாட்டு அரசர்களும் தும்பைப்பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் .....................

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

**இ) வலிமையை நிலைநாட்டல்** ஈ) கோட்டையை முற்றுகையிடல்

2. வெட்சித்திணையும், கரந்தைத் திணையும் முறையே .......................

**அ) நிறை கவர்தல், நிறை மீட்டல்** ஆ) நிறை மீட்டல், நிறை கவர்தல்

இ) நாட்டைக் கவருதல், நாட்டை மீட்டல் ஈ) நாட்டை மீட்டல், நாட்டைக் கவருதல்

3, மண்ணாசை கருதி போருக்குச் செல்வது ..................

அ) வாகைத்திணை **ஆ) வஞ்சித்திணை**

இ) காஞ்சித்திணை ஈ) வெட்சித்திணை

4. ஒருதலைக் காமம் என்பது ..................

அ) அன்பின் ஐந்திணை ஆ) பெருந்திணை

**இ) கைக்கிளை** ஈ) பொதுவியல் திணை

5. பாடாண்திணை என்பது இப்படிப் பிரியும் ....................

**அ) பாடு + ஆண் + திணை** ஆ) பாடாண் + திணை

இ) பாடு + ஆண்திணை ஈ) பாடு + ஆண்றினை

6. பாடாண் திணை என்பது .....................

அ) போரின் தன்மை ஆ) பாடுபவனின் திறன்பற்றியது

இ) பெண்மகளின் ஒழுக்கலாறு **ஈ) ஆண் மகனின் ஒழுக்கலாறு**

7. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனுடன் எதிர்த்துப் போரிடுவது ....................

**அ) நொச்சித்திணை** ஆ) தும்பைத்திணை

இ) உழிஞைத்திணை ஈ) காஞ்சித்திணை

8. பொருத்துக: திணையையும் செயல்பாட்டையும் இணைக்க

| | | |
|---|---|---|
| அ) வெட்சி | - | 1) பொருந்தாக்காமம் |
| ஆ) கரந்தை | - | 2) இருபெருவீரர்களும் போரிடல் |
| இ) உழிஞை | - | 3) ஆநிரை மீட்டல் |
| ஈ) தும்பை | - | 4) மாற்றரசன் கோட்டை முற்றுகை |
| உ) பெருந்திணை | - | 5) ஆநிரை கவர்தல் |

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4, உ – 5 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1, உ – 5

**இ) அ – 5, ஆ – 3, இ – 4, ஈ – 2, உ – 1** ஈ) அ – 5, ஆ – 4, . – 3, ஈ – 2, உ – 1

9. புறத்திணைகளின் எண்ணிக்கை ....................

அ) எட்டு ஆ) ஐந்து

இ) மூன்று **ஈ) பன்னிரண்டு**

**2. மொழிபெயர்க்க**

Among the five geographical division of the tamil country in sangam literature, the marutam region was the fit for cultivation, as it had the most fertile lands the properity of former depended on getting the necessary sunlight, swasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient tamils.

தமிழகத்தில் சங்க இலக்கியங்களில் புவியின் அமைப்பையொட்டி ஐந்து பிரிவுகளைக் காண முடிகிறது. அவற்றுள் மருதநிலமே வேளாண்மைக்கு எற்ற வளமான நன்செய் நிலப்பகுதியாகும். சங்ககால மக்களின் கணக்குப்படி மேலே கூறிய இயற்கை கூறுகளில் மிகவும் இன்றியமையாதது சூரிய ஒளியே என அதற்கு முக்கியத்துவமும் தமிழர் அளித்தனர்.

**3. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க**

**அ) இல்லாமல் இருக்கிறது:** கடந்த இரண்டு ஆண்டுகளாகவே தமிழகத்தில் மழையே பெய்யாததால் நீர் நிலைகளான ஏரி, குளம், குட்டையெல்லாம் நீர் இல்லாமல் இருக்கிறது.

**ஆ) கொஞ்சம் அதிகம்:** குழம்பில் இன்று காரமும், உப்பும் கொஞ்சம் அதிகமே

**இ) முன்னுக்குப்பின்:** நீதி மன்றத்தின் பொய்சாட்சிக்காரன் முன்னுக்குப்பின் முரணாகப் பேசினான்

**ஈ) மறக்க நினைக்கிறேன்:** என் நண்பனாகப் பழகிய அவன் எனக்குச் செய்த தீமைகளை மறக்க நினைக்கிறேன் இயலவில்லை.

**4. ஊர்பெயர்களின் மரூஉவை எழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புதுக்கோட்டை | - | புதுகை | திருச்சிராப்பள்ளி | - | திருச்சி |
| உதகமண்டலம் | - | உதகை | கோயம்புத்தூர் | - | கோவை |
| நாகப்பட்டினம் | - | நாகை | புதுச்சேரி | - | புதுகை |
| கும்பகோணம் | - | குடந்தை | திருநெல்வேலி | - | நெல்லை |
| மன்னார்குடி | - | மன்னை | மயிலாப்பூர் | - | மயிலை |
| சைதாப்பேட்டை | - | சைதை | | | |

**5. பொருள் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மிரியல் | - | மிளகு | வருத்தனை | - | பெருக்குதல் |
| அதசி | - | சணல் | துரிஞ்சல் | - | வெளவால் |

## இயல் – 8: 1. சங்க இலக்கியத்தில் அறம்

**முக்கிய குறிப்புகள்**

- அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு
- உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.
- மதுரையிலிருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. மேன்மை தரும் அறம் என்பது ...........................

**அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது** ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ்கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ....................

**அ) உதியன், சேரலாதன்** ஆ) அதியன், பெருஞ்சாத்தன்

இ) பேகன், கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

3. "இம்மைச் செய்தது மறுமைக்கும் ஆம் எனும்

அறவிலை வணிகன் ஆஆய் அல்லன்"

இதில் கூறப்பட்ட வள்ளல் ..................... வள்ளலைப் புகழ்ந்த புலவர் .....................

அ) அதியன், ஔவையார் ஆ) பெருஞ்சாத்தன், நக்கீரனார்

**இ) ஆய், முடமோசியார்** ஈ) பேகன், பரணர்

4. "அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும்" எனக் கூறியவர் .................

**அ) ஊன் பொதிப் பசுங்குடையார்** ஆ) மாங்குடி மருதனார்

இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) பெருந்தலைச் சாத்தனார்

5. 'இதுஒரு அதிசயத் திறவுகோல்; இன்பத்தின் கதவைத் திறப்பதும் இதுவே; துன்பத்தின் கதவைத் திறப்பதும் இதுவே' இது எனப்பட்டது எது?

அ) சாவி **ஆ) நாக்கு**

இ) வாய் ஈ) கன்னக்கோல்

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. சங்க காலத்திற்குப் பின் அற இலக்கியங்களின் காலத்தை **அறநெறிக்காலம்** என்பர்
2. அறம் செய்வதில் வணிகநோக்கம் இருக்கக்கூடாது என்பது **சங்க கால மக்களின்** கருத்தாக இருந்தது
3. வீரத்தைப் போலவே **கொடை** தமிழர்களால் விரும்பப்பட்டது
4. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் **அதியன்** என்கிறார் **ஔவையார்**
5. 'உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது தான்' என்றார் **நல்வேட்டனார்**.

## 2. ஞானம்

**- தி.சொ.வேணுகோபாலன்**

**முக்கிய குறிப்புகள்**

- நம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்ட கவிதை தி.சொ. வேணுகோபாலனின் **'கோடை வயல்'** என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இவர் திருவையாற்றில் பிறந்தவர். மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர். 'எழுத்து' காலப் புதுக்கவிஞர்களில் ஒருவர். இவரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு **மீட்சி விண்ணப்பம்**.

**1. பொருள் கூறுக**

சாளரம் - சன்னல் (காலதர்) ஒய்வு - ஒழிவு, தளர்வு

புழுதி - மண்துகள் சாயம் - நிறம்

**2. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக**

துடைத்தேன்- துடை + த் + த் + ஏன்

துடை – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; ஏன் – ஒருமை வினைமுற்று விகுதி

**3. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் இவ்வடி குறிப்பிடிவது ........................

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

**இ) இடையறாது அறப்பணிச்செய்தலை** ஈ) வண்ணம் பூசுவதை

2. காற்றுடைக்கும் பிரித்து எழுதுக

**அ) காற்று + உடைக்கும்** ஆ) காற்று + முடைக்கும்

இ) காற்று + முடை + கும் ஈ) காற்று + உடை + கும்

3. உலகமில்லை பிரித்து எழுதுக

அ) உலகு + மில்லை **ஆ) உலகம் + இல்லை**

இ) உலகி + ல்லை ஈ) உலகு + இல்லை

4. சாளரம் என்பதன் சரியான தமிழ்ச்சொல் **காலதர்**

5. சாயம் என்பதன் பொருள் **வண்ணம்**

**4. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் தலைப்பினை எழுதி பொருளினை எழுதுக**

1. அருளுடைமை - அருள்தன்மையை மேற்கொளல்
2. அன்புடைமை - அன்பினை வாழ்வில் கடைபிடித்தல்
3. அடக்கமுடைமை - அடக்கப்பண்பை உடைமையாக்கி உயர்தல்
4. அவா அறுத்தல் - ஆசைகளைத் துறத்தல்
5. அழுக்காறாமை - பொறாமை கொள்ளாதிருத்தல்
6. அறன் வலியுறுத்தல் - அறத்தின் சிறப்பு
7. இல்வாழ்க்கை - இல்லறத்தின் மேன்மை
8. இன்னா செய்யாமை - துன்பம் தரும் செயலைச் செய்யாமை
9. இனியவை கூறல் - நல்ல இனிய சொற்களையே பேசுதல்
10. ஈகை - இல்லாதவர்க்குக் கொடுத்து மகிழ்தல்
11. ஊழ் - விதி.விதியை வெல்லுதல்
12. ஒழுக்கமுடைமை - ஒழுக்கத்தை கடைபிடித்து, உயரும் வழி
13. ஒப்புரவறிதல் - உலக நடையை அறிந்து செய்தல்
14. கள்ளாமை - களவாடாத (திருடாத) நிலை
15. கடவுள் வாழ்த்து - இறைவணக்கம்
16. கூடா ஒழுக்கம் - தீய ஒழுக்கம் நீக்குதல்
17. கொல்லாமை - உயிர்களை எக்காரணம் கொண்டும் கொல்லாநிலை
18. செய்நன்றி அறிதல் - நன்றி மறவாத தன்மை
19. தவம் - நோன்பு மேற்கொள்ளுதல், பின்பற்றல்

20. தீவினையச்சம் - பாவச்செயல்களுக்கு அஞ்சுதல்
21. துறவு - வாழ்வில் இருவகைப் பற்றினையும் நீக்க வேண்டியதையும் நீக்கல்
22, நடுவுநிலைமை - எதற்காகவும் விருப்பு வெறுப்பின்றி செயலாற்றுதல்
23. நிலையாமை - நிலையில்லாமை
24. நீத்தார் பெருமை - இறந்தோரைப் பேணல்
25. பயனில சொல்லாமை - பயனில்லாத சொல் பேசாதிருத்தல்
26. புதல்வரைப் பெறுதல் - புதல்வர்களின் சிறப்பும், கடமையும்
27. பிறனில் விழையாமை - மாற்றான் மனைவியை விரும்பாமை
28. புறங்கூறாமை - ஒருவன் இல்லாதபோது அவனைப்பற்றி இகழ்ந்து கூறாமை
29. புகழ் - புகழுக்குரிய செயல்கள்
30. புலால் மறுத்தல் - மாமிசம் உண்ணாமை
31. பொறையுடைமை - பொறுமையும், உயர்வும்
32. மக்கட்பேறு - நல்ல குழந்தைகளின் தன்மை
33. மெய்யுணர்தல் - பிறப்பு, வீடு ஆகியவைபற்றிய உண்மையை உணர்தல்
34. வாய்மை - உண்மையைக் கடைபிடித்தல்
35. வான்சிறப்பு - மழையின் சிறப்பு
36. விருந்தோம்பல் - விருந்தின் சிறப்பும், ஓம்புதலும்
37. வெகுளாமை - கோபம் (சினம்) கொள்ளாதிருத்தல்
38. வெஃகாமை - பிறர் பொருளை அபகரிக்காதநிலை

## 3. காலக்கணிதம்

**- கண்ணதாசன்**

**மனப்பாடப்பகுதி**

*மாற்றம் எனது மானிடத் தத்துவம்;*
*மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!*
*எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை*
*என்ப தறிந்து ஏகுமென் சாலை!*
*தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;*

*தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!*
*கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!*
*உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;*
*நானே தொடக்கம்; நானே முடிவு;*
*நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!*

**முக்கிய குறிப்புகள்**

- **கவிஞர் கண்ணதாசன்**
  - கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா
  - சிவகங்கை மாவட்டத்தின் சிறுகூடல்பட்டியில் பிறந்தவர்
  - இவரின் பெற்றோர்கள் சாத்தப்பன், விசாலாட்சி
  - 1949ஆம் ஆண்டு திரையுலகில் பாடல் எழுதத் தொடங்கினார்
  - திரை உலகிலும், இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர்
  - சிறந்த கவியரங்கப் பேச்சாளர்.
  - தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கியவர்
  - இவர் எழுதிய சேரமான் காதலி என்னும் வரலாற்று நாவல் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளது.
  - திரைப்படப் பாடலின் மூலம் எளிய முறையில் மெய்யியலை மக்களிடையே கொண்டு சேர்த்தவர்
  - அர்த்தமுள்ள இந்துமதம், ஆட்டனத்தி, ஆதிமந்தி, மாங்கனி, இயேசு காவியம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

**1. பொருள் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புவியில் | - | பூமியில் | பற்றுதல் | - | பிடித்தல், அன்பு |
| இயம்புதல் | - | கூறுதல் | பண்டோர் | - | முன்னோர் |
| ஆக்கல் | - | படைத்தல் | முனைதல் | - | முற்படுதல் |
| பாசம் | - | அன்பு, பற்று | ஏகுதல் | - | போகுதல் |

**2. இலக்கணக்குறிப்பு**

எவ்வெவை - அடுக்குத்தொடர்

கொள்வர் - வினையாலனையும் பெயர்

**3. பகுபத உறுப்பிலக்கணம்**

அழித்தல் - அழி + த் + த் + அல்

அழி – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; அல் – தொழிற்பெயர் விகுதி

4. ‘கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க!

உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது’

அ) அடியெதுகையை எடுத்தெழுதுக

ஆ) இலக்கணக்குறிப்பு எழுதுக – கொள்க, குரைக்க

**அடியெதுகை** - கொ<u>ள்</u>வோர், உ<u>ள்</u>வாய்

**இலக்கணக்குறிப்பு** - கொள்<u>க</u>, குரைக்<u>க</u> - வியங்கோள் வினைமுற்று

**5. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் ....................

**அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது** ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

2. “ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்

அவனும் யானுமே அறிந்தவை” – இதில் அவனும் யானுமே என்போர் ........................... , ....................

**அ) கடவுளும், கவிஞரும்** ஆ) கடவுளும், பக்தனும்

இ) பக்தனும், கவிஞனும் ஈ) கவிஞரும், கம்பரும்

3. "தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்" என்பதில் தலைவர், தர்பார் என்பதன் பொருள் ........................

**அ) அரசியல் தலைவர், அரசாங்கம்** ஆ) குடும்பதலைவர், குடும்பம்

இ) கடவுள், கவிஞர் ஈ) ஊர் தலைவர், பஞ்சாயத்து

4. கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் ........................ , பிறந்த ஊர் ..................

அ) முத்துசாமி, சிறுமையிலூர் ஆ) முத்துநாதன், சிறுவாபுரி

**இ) முத்தையா, சிறுகூடல்பட்டி** ஈ) முத்தையா, சின்னாளம்பட்டி

## 4. இராமானுசர்

**முக்கிய குறிப்புகள்**

- இராமானுசர், கூரேசர், முதலியாண்டான் ஆகியோர் திருக்கோட்டியூர் பூரணர் இல்லத்திற்கு வந்தனர்.
- இராமானுசர் பதினெட்டுமுறை திருக்கோட்டியூர் வந்துள்ளார்.
- "நான் கூறும் மந்திரப்பொருள் திருவரங்கன் திருவருளால் கிடைக்கப் பெற்றது. இது நமது பரம ஆச்சாரியார் ஆளவந்தார் அவர்களால் எனக்கு மட்டுமே கிடைத்த வாய்ப்பு. இதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதை நீங்கள் நாள்தோறும் தியானிப்பதால் பிறவித்தனை நீங்கும். இறைவனடி செல்ல இயலும்" எனப் மந்திரப் பொருளின் தன்மையாகப் பூரணர் கூறினார்.

## 5. பா – வகை, அலகிடுதல்

**1. ஓசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

ஓசையானது செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூக்லோசை என நான்கு வகைப்படும்.

**2. 'பா' எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் 'பா' நான்கு வகைப்படும்

**3. பாக்களையும் – ஓசையையும் இணைத்துக் கூறுக**

வெண்பா – செப்பலோசை; கலிப்பா – துள்ளலோசை; ஆசிரியப்பா – அகவலோசை; வஞ்சிப்பா – தூங்கலோசை

**4. வெண்பாவின் இலக்கணம் கூறுக**

- செப்பலோசை பெற்று வரும்.
- ஈற்றடி, மூச்சீராயும், ஏனைய அடி நாற்சீராயும் வரும்
- இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் பயின்றுவரும்
- இரண்டடி முதல், பன்னிரெண்டடி வரை அமையும்
- ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்

**5. ஆசிரியப்பாவின் 'பொது' இலக்கணம் கூறுக**

- அகவல் ஓசை பெற்று வரும்
- ஈரசைச்சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்
- ஆசிரியத்தளை மிகுதியாகவும், வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும்
- மூன்று அடிக்குமேல், எழுதுவோர் மனநிலைக்கேற்ப வரும்
- ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு

**6. வெண்பாவின் வகைகள் யாவை?**

வெண்பா குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என ஐந்து வகைப்படும்.

**7. ஆசிரியப்பாவின் வகைகளைக் கூறுக**

நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்

**8. அலகிடுதல் என்றால் என்ன?**

அலகிடுதல் என்பது சீரைப் பிரித்து அசை பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு காணுதல் ஆகும்

**9. அசை என்பது என்ன?**

ஓர் எழுத்தோ, பல எழுத்துகளோ சேர்ந்தும், அசைந்தும் இசைந்தும் சீருக்கு உறுப்பாய் வருவதே அசை எனப்படும்.

**10. நேரசை, நிரையசை விளக்குக**

நேரசை: தனிக்குறில், தனிக்குறிலுடன் ஒற்று தனிநெடில் ஒற்று

தனிநெடில், தனிநெடிலுடன் ஒற்று. இங்ஙனம் வருவதே நேரசை எனப்படும்

எ.கா: கெ = தனிக்குறில் கல் = தனிக்குறில் + ஒற்று

கா = தனிநெடில் கால் = தனிநெடில் + ஒற்று

நிரையசை: இருகுறில் இணைந்து

இருகுறில் + ஒற்றுடன்

குறில் நெடில்

குறில் நெடில் + ஒற்று என வருவதே நிரையசையாகும்.

எ.கா: கல = இருகுறில் இணைந்து

கலம் = இருகுறில் + ஒற்று

கலா = குறில் நெடில்

கலாம் = குறில் நெடில் ஒற்று

**11. ஈரசைச்சீர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

ஈரசைச்சீர் நான்கு வகைப்படும். அவை

நேர் + நேர் = தேமா நிரை + நேர் = புளிமா

நிரை + நிரை = கருவிளம் நேர் + நிரை = கூவிளம்

**12. மூவகைச்சீர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

மூவகைச்சீர் எட்டு வகைப்படும். அவை காய்ச்சீர், கனிச்சீர் எனப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காய்ச்சீர்: | நேர் | நேர் | நேர் | = | தேமாங்காய் |
| | நிரை | நேர் | நேர் | = | புளிமாங்காய் |
| | நிரை | நிரை | நேர் | = | கருவிளங்காய் |
| | நேர் | நிரை | நேர் | = | கூவிளங்காய் |
| கனிச்சீர்: | நேர் | நேர் | நிரை | = | தேமாங்கனி |
| | நிரை | நேர் | நிரை | = | புளிமாங்கனி |
| | நிரை | நிரை | நிரை | = | கருவிளங்கனி |

நேர் நிரை நிரை = கூவிளங்கனி

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ....................

**அ) அகவற்பா** ஆ) வெண்பா

இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

2. வெண்பாவிற்குரிய ஓசை ..................

அ) அகவலோசை ஆ) தூங்கலோசை

இ) துள்ளலோசை **ஈ) செப்பலோசை**

3. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை ....................

**அ) அகவலோசை** ஆ) செப்பலோசை

இ) தூங்கலோசை ஈ) துள்ளலோசை

4. ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும் பாவினம் ....................

அ) ஆசிரியப்பா **ஆ) வெண்பா**

இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

5. தூங்கலோசை, துள்ளல் ஓசை பெறும் பாவினங்கள் ...................... , ........................

அ) ஆசிரியப்பா, வெண்பா **ஆ) வஞ்சிப்பா, கலிப்பா**

இ) கலிப்பா, வஞ்சிப்பா ஈ) வெண்பா, வஞ்சிப்பா

6. வெண்பா .................... வகையாகவும், ஆசிரியப்பா ........................ வகையாகவும் உள்ளது.

அ) நான்கு, ஐந்து ஆ) ஐந்து, ஆறு

**இ) ஐந்து, நான்கு** ஈ) மூன்று, நான்கு

2. கவிதைகளையும் அவற்றின் பா வகைகளையும் வகைப்படுத்திப் பட்டியலிடுக

முல்லைப்பாட்டு - கலிவெண்பா

மலைபடுகடாம் - ஆசிரியப்பா

திருக்குறள் - குறள் வெண்பா

பரிபாடல் - கலிவெண்பா

திருவிளையாடல் புராணம் தேம்பாவணி – வெண்பா

மெய்க்கீர்த்தி, சிலப்பதிகாரம் ஞானம், காலக்கணிதம் – ஆசிரியப்பா

**3. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக**

**மனக்கோட்டை:** இராஜன் தான் லட்சாதிபதியாக வேண்டுமென மனக்கோட்டை கட்டி கையூட்டு பெற சிறை சென்றான்.

**கண்ணும் கருத்தும்:** விவசாயப் பெருமக்கள் தங்கள் நிலத்துப் பயிரைப் பெற்ற குழந்தையைப் போல கண்ணும் கருத்துமாய் வளர்த்தனர்.

**அள்ளி இறைத்தல்:** கம்பர் தன் இராமாயண காவியத்தில் சந்தத்தைச் சொற்கள் மூலம் அள்ளி இறைந்திருப்பார்.

**ஆறப்போடுதல்:** கோபம் இருக்கும் போது முடிவு எடுக்காமல் மனதை ஆறப்போட்டு அமைதியில் முடிவு எடுத்தல் நலம் பயக்கும்.

**4. சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக**

வருந்தாமரை : வரும் + தாமரை = வருகின்ற தாமரை

வரும் + தர + மரை = வரும் தாவுகின்ற மான்

பிண்ணாக்கு : பிண் + ணாக்கு = அரைக்கப்பட்டு எண்ணெய் எடுத்த எள், தேங்காய் சக்கைகள்

பலகையொலி : பல + கையொலி = பலர் சேர்ந்து ஒலிக்கும் கையொலி

பலகை + ஒலி = பலர் சேர்ந்து ஒலிக்கும் கையொலி

பலவை + ஒலி = மரப்பலகையின் சப்தம்

**5. பொருள் கூறுக**

ஆசுகவி – பாடவேண்டியப் பொருளைக் கொடுத்த உடனேயே செய்யுள் இயற்றும் புலமை பெற்ற புலவர்

மதுரகவி – இலக்கணமுறைப்படி செய்யுள் இயற்றுபவர். நான்குவகையான கவிஞருள் இனிமை பெருகப் பாடுபவர்

சித்திரக்கவி – இறைகவி. பலவகைப்பாக்களுடன் புதிய வகைகளில் பாக்கள் அமைத்துச் செய்யுளுக்குரிய வண்ணங்கள் அமைத்து தொன்று தொட்டு வரும் மரபை மீறாமல் பாடுபவர்.

வித்தாரக்கவி – விரித்து கவிதை இயற்றுபவர்

**6. கலைச்சொல் அறிவோம்**

| | | |
|---|---|---|
| Belief | - | நம்பிக்கை |
| Philosopher | - | மெய்யியலாளர் |
| Renaissance | - | மறுமலர்ச்சி |
| Revivalism | - | மீட்டுருவாக்கம் |

## இயல் – 9: 1. ஜெயகாந்தம் (நினைவு இதழ்)

**முக்கிய குறிப்புகள்**

- கருத்தாழமும், வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன்.
- சமகாலக் கருத்துகளையும், சமகால மொழியில், சமகால உணர்வில் வழங்கியவர் ஜெயகாந்தன்
- **ஜெயகாந்தன் பெற்ற விருதுகள்:** குடியரசுத் தலைவர் விருது (உன்னைப் போல் ஒருவன் திரைப்படம்) சாகித்திய அகாதமி விருது (சில நேரங்களில் சில மனிதர்கள்) சோவியத் நாட்டு விருது (இமயத்துக்கு அப்பால் தாமரைத் திருவிருது)
- குருபீடம், உண்மைசுடும், புதிய வார்ப்புகள், யுகசந்தி, இனிப்பும் கரிப்பும், ஒருபிடி சோறு, தேவன் வருவாரா ஆகியவை **ஜெயகாந்தனின் சிறுகதைத் தொகுப்புகளாகும்**.
- பிரளயம், பிரம்ம உபதேசம், சினிமாவுக்குப் போன சித்தாறு, கைவிலங்கு, யாருக்காக அழுதான், ரிஷிமூலம், கருணையினால் அல்ல ஆகியவை **ஜெயகாந்தனின் குறும்புதினங்கள்**
- பாரீசுக்குப் போ, கங்கை எங்கே போகிறாள், சுந்தரகாண்டம், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், உன்னைப்போல் ஒருவன், இன்னும் ஒரு பெண்ணின் கதை, ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் ஆகியவை **ஜெயகாந்தனின் புதினங்கள்** ஆகும்

- வாழ்விக்க வந்த காந்தி (பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம்). ஒரு கதாசிரியனின் கதை (முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு) ஆகியவை ஜெயகாந்தனின் மொழி பெயர்ப்புகளாகும்.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனைணம், சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ....................
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் **ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்**
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
2. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன். – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது.
   **அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.**
   ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணிப் புரியவே எழுதினார்
   இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
   ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்
3. கருத்தாழமும் வாசகச் சுவையும் கலந்து இலக்கியங்களைப் படைத்தவர் எனப்பாடநூல் கூறுவது ....................
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
   **இ) ஜெயகாந்தன்** ஈ) அகிலன்
4. சிலநேரங்களின் சிலமனிதர்கள் புதினம் பெற்ற விருது ....................
   அ) குடியரசுத் தலைவர் விருது **ஆ) சாகித்திய அகாதமி விருது**
   இ) ஞானபீட விருது ஈ) சோவியத்து நாட்டு விருது
5. நேர் கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகள், நிமிர்ந்த ஞானச் செருக்கு, கம்பீரமான குரல், வளமான புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் – இதை தாம் அவரின் அடையாளம் ............... அவர் யார்? இப்படிக் கூறியவர் யார்?
   அ) பாரதி, பாரதிதாசன் ஆ) ஜெயகாந்தன், பாரதிதாசன்
   இ) பாரதியார், ஜெயகாந்தன் **ஈ) ஜெயகாந்தன், கா. செல்லப்பன்**
6. ஜெயகாந்தனின் குடியரசுத் தலைவர் விருது பெற்ற திரைப்படம் ................
   **அ) உன்னைப்போல் ஒருவன்** ஆ) ஊருக்கு நூறு பேர்
   இ) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் ஈ) சிலநேரங்களில் சிலமனிதர்கள்
7. பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம் ......................
   அ) தென்னாட்டில் காந்தி **ஆ) வாழ்விக்க வந்த காந்தி**
   இ) சத்தியசோதனை ஈ) மகாத்மா காந்தி
8. சங்கரய்யர் ஹோட்டலில் காபியின் விலை .....................
   அ) ஒரணா ஆ) முக்கால் அணா
   **இ) இரண்டணா** ஈ) அரையணா
9. ஜெயகாந்தன் இரண்டணா பிச்சைப்போட்டதும் அவன் வாழ்த்தியது ....................
   அ) சாமி! நன்றி வாழ்க! **ஆ) சாமி! நீங்க போற வழியெல்லாம் புண்ணியமுண்டு**

இ) சாமி! நல்ல இருங்க ஈ) சாமி! உங்க குழந்தை குட்டி நல்லா இருக்கட்டும்

10. ஜெயகாந்தன் ஊருக்குச் செல்ல இரயில் கட்டணம் ..................... ஆனால் அவரிடமிருந்து ..............

அ) பதினொரணா, பத்தணா **ஆ) பதிமூன்றணா, பன்னிரண்டணா**

இ) பதிமூன்றணா, பத்தணா ஈ) பதிமூன்றணா, எட்டணா

**2. பொருத்துக**

அ) ஒருபிடி சோறு - 1) திரைப்படம்

ஆ) ரிஷிமூலம் - 2) சிறுகதைத் தொகுப்பு

இ) சுந்தரகாண்டம் - 3) குறும்புதினம்

ஈ) ஊருக்கு நூறுபேர் - 4) புதினம்

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

**இ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1** ஈ) அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3

**3. பொருத்துக**

1) சோவியத்நாடு விருது பெற்றது - அ) சிறுகதைத்தொகுப்பு

2) சாகித்திய அகாதமி விருது - ஆ) இயமத்துக்கு அப்பால்

3) தேவன் வருவாரா? - இ) சிலநேரங்களில் சில மனிதர்கள்

4) பிரம்ம உபதேசம் - ஈ) புதினம்

5) பாரீசுக்குப் போ - உ) குறும்புதினம்

**அ) 1 – ஆ, 2 – இ, 3 – அ, 4 – உ, 5 – ஈ** ஆ) 1 – அ, 2 – ஆ, 3 – இ, 4 – ஈ, 5 – உ

இ) 1 – உ, 2 – ஈ, 3 – இ, 4 – ஆ, 5 – அ ஈ) 1 – ஈ, 2 – இ, 3 – அ, 4 – உ, 5 – ஆ

## 2. சித்தாளு

**- நாகூர்ரூமி**

**முக்கிய குறிப்புகள்**

- முகம்மதுரஃபியின் புனைப்பெயர் நாகூர்ரூமி. தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்.
- கவிதை, குறுநாவல், சிறுகதை மொழி பெயர்ப்பு என்னும் பல தளங்களில் இயங்கி வருபவர்.
- கப்பலுக்குப் போன மச்சான் என்னும் நாவலையும் படைத்துள்ளார் முகம்மதுரஃபி.
- மீட்சி, சுபமங்களா, புதியபார்வை, குங்குமம், கொல்லிப்பாவை, இலக்கிய வெளிவட்டம், குமுதம், கணையாழி ஆகிய இதழ்களில் நாகூர்ரூமியின் படைப்புகள் வெளிவந்துள்ளன.
- நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் ஆகிய மூன்று கவிதை நூல்கள் ஆகிய நாகூர்ரூமியின் கவிதை தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. "இவன் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும்" – இவ்வடிகளில் கற்காலம் என்பது ......................

அ) தலைவிதி ஆ) பழைய காலம்

இ) ஏழ்மை **ஈ) தலையில் கல் சுமப்பது**

2. வாழ்வில் ................ பிடித்தவர் உண்டு எனப் பாடலில் கூறப்படுகிறது.

அ) பணத்தாசை ஆ) கொழுப்பு

இ) ஆணவம் **ஈ) தலைக்கனம்**

3. 'சித்தாளு' கவிஞர் நாகூர்ரூமியின் இயற்பெயர் ....................

அ) முகம்மது உசேன் **ஆ) முகம்மது ரஃபி**

இ) முகம்மது கனி ஈ) முகம்மது கௌஸ்

4. நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் என்ற மூன்றும் நாகூர்ரூமி எழுதிய ...............

அ) மொழி பெயர்ப்புக் கவிதைகள் ஆ) சிறுகதைகள்

**இ) கவிதைத் தொகுப்புகள்** ஈ) சிறுகதைத் தொகுதிகள்

**2. பொருள் கூறுக**

சித்தாளு – கட்டுமானப் பொருள்களைத் தலையில் சுமப்போர்

அலுக்காமல் – சலிப்பில்லாமல்

**3. பிரித்து எழுதுக**

| | | | |
|---|---|---|---|
| பொற்காலம் = | பொன் + காலம் | கற்காலம் = | கல் + காலம் |
| தலைக்கனம்= | தலை + கனம் | சிறிதளவே = | சிறுது + அளவே |
| செங்கற்கள் = | செம்மை + கற்கள் | | |

**4. பகுபத உறுப்பிலக்கணம்**

புலம்புவார் = புலம்பு + வ் + ஆர்

புலம்பு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

## 3. தேம்பாவணி

**- வீரமாமுனிவர்**

**மனப்பாடச்செய்யுள்**

*நவமணி வடக்க யில்போல்*
*நல்லறப் படலைப் பூட்டும்*
*தவமணி மார்பன் சொன்ன*
*தன்னிசைக்கு இசைகள் பாடத்*
*துவமணி மரங்கள் தோறும்*
*துணர்அணிச் சுனைகள் தோறும்*
*உவமணி கானம்கொல் என்று*
*ஒலித்து அழுவ போன்றே.*

**முக்கிய குறிப்புகள்**

- கருணையன் கிறித்துவுக்கு முன் தோன்றியவர்
- கருணையன் திருமுழுக்கு யோவான், அருளப்பன் எனவும் கூறுவர்
- கருணையன் கிறித்துவின் வருகையைப் புவிக்கு முதலில் அறிவித்தார்.
- வீரமாமுனிவர் தேம்பாவணியில் கருணையன் எனக்குறிப்பிடுவார்.
- கருணையன் தன் தாய் எலிசபெத்துடன் காட்டில் வாழ்ந்தார்.
- தன் மலர் போன்ற இருகைகளையும் குவித்து "பூமித்தாயயே என் அன்னையின் உடலை நீ அன்புடன் காப்பாயாக" என கருணாயன் பூமித்தாயிடம் வேண்டினார்.

- தேம்பா + அணி எனப்பிரிந்து வாடாத மாலை என்றும், தேன் + பா + அணி எனப்பிரிந்து தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும். இந்நூலுக்குப் பொருள் கொள்ளப்படுகிறது.
- கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினைப் (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல்.
- இப்பெருங்காப்பியம் மூன்று காண்டங்களையும் 36 படலங்களையும் உள்ளடக்கி 3615 பாடல்களைக் கொண்டுள்ளது. காலம் 17ஆம் நூற்றாண்டு.
- **வீரமாமுனிவர்:** இத்தாலி நாட்டை சேர்ந்தவர்
  இவரின் இயற்பெயர் **கான்சுடான்சு ஜோசப் பெஸ்கி**
  இவரின் பெற்றோர்கள் **கொண்டல் போபெசுகி – எலிசபெத் அம்மாள்.**
  **பிறப்பு** – 08.11.1680
  மதபோதகர், எழுத்தாளர்
  **மொழிகள்:** இத்தாலி, இலத்தீர கிரேக்கம், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், உருது, எபிரேயம், தெலுங்கு
  வீரமாமுனிவர், தைரியநாதன் என்பது இவரின் சிறப்புப் பெயர்கள்.
  **இவர் இயற்றிய நூல்கள்:** சதுரகராதி, தொன்னூல் விளக்கம், பரமார்த்த குரு கதைகள், தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, ஞான உபதேசம், வேத விளக்கம், அழுங்கல் அந்தாதி, கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் போன்றவை.
  **இறப்பு** – 04.02.1747
- தமிழின் முதல் சதுரகராதி, தொன்னூல் விளக்கம் (இலக்கணநூல்) சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள், பரமார்த்த குரு கதைகள், மொழி பெயர்ப்பு நூல்கள்
- வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக் கொண்டார். இவருடைய எளிமையையும், துறவையும் கண்டு வியந்த சந்தாசாகிப் இவருக்கு **இஸ்மத் சன்னியாசி** என்னும் பட்டத்தை வழங்கி கௌவித்தார் **இஸ்மத் சன்னியாசி** என்ற பாரசீகச் சொல்லுக்கு **தூய துறவி** எனப் பொருள்.

**1. பொருள் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேக்கை | - | படுக்கை | யாக்கை | - | உடல் |
| பிணித்து | - | கட்டி | வாய்ந்த | - | பயனுள்ள |
| இளங்கூழ் | - | இளம்பயிர் | தயங்கி | - | அசைந்து |
| காய்ந்தேன் | - | வருந்தினேன் | வாய்மையே | - | மெய்யே |
| தூய் | - | சுத்தமான | கொம்பு | - | கிளை |
| புழை | - | துளை | கான் | - | காடு |
| தேம்ப | - | வாட | அசும்பு | - | நிலம் |
| புள் | - | பறவை | | | |
| வீ | - | இது பூவின் ஆறு பருவங்களான முகை, அரும்பு, மொட்டு, மலர், பூ, வீ என்பன. வீ என்பது பூவின் ஆறாம் பருவமான முற்றிலும் விரிந்த பருவமாகும். | | | |
| உய்முறை | - | வாழும்வகை | கடிந்து | - | விலக்கி |
| மெய் | - | உடல், உண்மை | உவமணி | - | மணமுள்ளமலர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| படலை | - | மாலை | துணர் | - | மலர்கள் |
| பூவே | - | பூமி | துளி | - | மழைத்துளி |
| தடவிலா | - | தடம் தெரியாத | சுனை | - | ஊற்று |

நவமணி - வைரம், மரகதம், நீலம், கோமேதம், பவளம், மாணிக்கம், முத்து, புட்பராகம், வைடூரியம் என்ற ஒன்பது மணிகள்

**2. இலக்கணக்குறிப்பு**

| | | |
|---|---|---|
| காய்முறை, செய்முறை, உய்முறை, செல்வழி | - | வினைத்தொகைகள் |
| இளங்கூழ், நல்லறப்படலை | - | பண்புத்தொகைகள் |
| நுதி நச்சு | - | உம்மைத்தொகை |
| பூக்கை, பூஞ்சேக்கை | - | உவமைத்தொகை |
| இல்லா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் |
| செல்வழி, இரங்கி | - | வினையெச்சங்கள் |

**3. பகுபத உறுப்பிலக்கணம்**

**அறியேன் = அறி + ய் + ஆ + ஏன்**

அறி – பகுதி; ய் – சந்தி; ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது; ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று

**குவித்து = குவி + த் + த் + உ**

குவி – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

**காய்ந்தேன் = காய் + த்(ந்) + த் + ஏன்**

காய் – பகுதி; த் – சந்தி; ந் – ஆனது விகாரம்; அன் – சாரியை; அ – பெயரெச்ச விகுதி

**ஒலித்து = ஒலி + த் + த் + உ**

ஒலி – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. பூக்களைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ...................... வேண்டினார்.

**அ) கருணையன் எலிசபெத்துக்காக** ஆ) எலிசபெத் தமக்காக

இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக

2. தீயையும், நஞ்சினையும் முனையில் கொண்டது .......................

அ) கத்தி ஆ) வாள்

இ) வேல் **ஈ) அம்பு**

3. மழையில்லாமல் நெற்பயிர் வாடியது போல் .................... இல்லாமல் ................. வாடினார்

**அ) தாய், கருணையன்** ஆ) மலர், தாய்

இ) மழை, தாய் ஈ) மழை, வீரமாமுனிவர்

4. விரிந்தன கொம்பில் கொய்த வீயென உள்ளம் வாட இதி 'வீ' என்பது ....................

அ) வீல் என்று அலறுதல் **ஆ) மலர்**

இ) சோவென ஈ) காய்

5. துணையைப் பிரிந்த .................... போல நான் காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன் கருணையன் வாடினார்.

அ) மானைப் போல ஆ) விலங்குகளைப் போல

இ) வண்டினைப் போல **ஈ) பறவையைப் போல**

6. வீரமாமுனிவருக்கு 'இஸ்மத் சன்னியாசி' என்னும் பட்டத்தை வழங்கியவர் ......................... இதன் பொருள் ......................

அ) உமறுப்புலவர், தூய துறவி **ஆ) சந்தாசாகிப், தூய துறவி**

இ) அப்துல்காதல், தூயவர் ஈ) அப்துல்காசிம், துறவி

7. 'இஸ்மத் சன்னியாசி' என்பது .............

அ) இந்தி மொழி ஆ) உருது மொழி

இ) அரேபிய மொழி **ஈ) பாரசீக மொழி**

8. தேம்பா + அணி எனப் பிரித்தால் ................... என்றும்

தேன் + பா + அணி எனப் பிரித்தால் ...................... தொகுப்பு என்றும் பொருள் கொள்ளப்படும்.

அ) வாடாதமாலை, தேன்மாலை ஆ) தேன் மாலை, இனிய பாடல்

**இ) வாடாதமாலை, தேன் போன்ற இனிய பாடல்கள்** ஈ) வாடாத பூ, இனிப்பான பாடல்கள் கொண்ட

9. தேம்பாவணி நூல் ..................... காண்டங்களையும் ..................... படலங்களையும் .......................... பாடல்களையும் கொண்ட நூல்

அ) மூன்று, முப்பது, 3616 ஆ) மூன்று, முப்பத்து மூன்று, 3618

**இ) மூன்று, முப்பத்தாறு, 3615** ஈ) மூன்ற, முப்பத்துஎட்டு, 3614

## 4. ஒருவன் இருக்கிறான்

**- கு.அழகிரிசாமி**

**முக்கிய குறிப்புகள்**

- சமூகப்பணியாற்றி (இசை, நாட்டியம், கலை, அறிவியல், சமூகசேவை, இலக்கியம்) இந்தியாவின் உயரிய விருதான பத்மபூசண் விருது பெற்ற தமிழகத்தைச் சார்ந்தோர் பலர்.
- அறிவியல் துறை: அ.பெ.ஜெ. அப்துல்கலாம், ஆரோக்கியசாமி பவுல்ராஜ், நம்பி நாராயணன்
- இலக்கியம்: ஜெயகாந்தன்
- சமூக சேவை: முத்துலெட்சுமி ரெட்டி, சரோஜினி வரதப்பன்.
- இசைத்துறை: அரியக்குடி இராமானுஜர், லால்குடி ஜெயராமன், உமையாள்புரம் கே.சிவராமன் பாபநாசம் சிவன், எம். எல். வசந்தகுமாரி, அ.இ.ரகுமான்

## 5. அணிகள்

**1. தீவிக அணியின் வகைகள் யாவை?**

தீவக அணி முதல் நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூன்று வகைப்படும்

**2. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

பண்பும் பயனும் அது – இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி நிரல்நிறை அணியாகும்.

**3. அணி எனப்படுவது யாது?**

அணி – அழகு : பெண்களுக்கு அழகு தர அணியப்படும் ஆபரணம் அணி எனப்படும். அதுபோல செய்யுளுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவது அணி எனப்படும்.

**4. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**5. தீவக அணி என்றால் என்ன?**

'தீவகம்' என்னும் சொல்லுக்கு விளக்கு என்று பொருள். ஓர் அறையில ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களில் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் தீவக அணி எனப்பட்டது.

**6. தன்மையணி என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறுக**

எவ்விதமானப் பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்போர் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப்பாடுவது தொழிற் தன்மையணி என நான்கு வகைப்படும்.

**7. தற்குறிப்பேற்ற அணி:**

**அணிவிளக்கம்:** இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

எ.கா: *"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுக்கொடி*
*வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட"*

**பாடலின் பொருள்:** கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத்தடுப்பது போல் கை காட்டியது என்பது பொருள்.

**அணிப்பொருத்தம்:** கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால் இளங்கோவடிகள் கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள் கையை அசைத்து "இம்மதுரைக்குள் வரவேண்டா" என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**8. தீவக அணியை எடுத்துக்காட்டுடன் விவரி**

தீவகம் என்னும் சொல்லுக்கு 'விளக்கு' என்று பொருள். ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையின், பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அவ்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களுடன் பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.

எ.கா: *சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்*
*ஏந்து தடந்தோள், இழிகுருதி – பாய்ந்து*
*திசை அனைத்தும், வீரச்சிலை பொழிந்த அம்பும்,*
*மிசை அனைத்தும் புள்குலமும் வீழ்ந்து*

**பாடலின் பொருள்:** அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன. அவை சிவந்த அளவில் பகை மன்னர்களுடைய பெரிய தோள்கள் சிவந்தன. குருதி பாய்ந்து திசைகள் அனைத்தும் சிவந்தன. வலிய வில்லால் ஏவப்பட்ட அம்புகளும் சிவந்தன. குருதி மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்களும் யாவும் சிவந்தன.

**அணிப்பொருந்தம்:**

*வேந்தன் கண் சேந்தன*
*தெவ்வேந்தர் தோள் சேந்தன.*
*குருதி பாய்ந்து திசை அனைத்தும் சேந்தன*
*அம்பும் சேந்தன*
*புள் குலம் வீழ்ந்தது*
*மிசை அனைத்தும் சேந்தன*

இவ்வாறாக முதலில் சேந்தன (சிவந்தன) என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது. அதனால் இது தீவக அணியாயிற்று.

**9. நீரல் நிறை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

**அணிவிளக்கம்:** நிரல் – வரிசை; நிறை – நிறுத்துதல்

சொல்லையும், பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறையணி எனப்படும்.

எ.கா: *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது*

**குறளின் பொருள்:** இல்வாழ்க்கை அன்பும் அறமும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும், பயனும் என்ற சொற்களை முறையாகக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணி எனப்படும்.

அணிப்பொருத்தம்: இக்குறளில் அன்பும், அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும், பயனும் என்ற சொற்களை முறையாகக் கூறியுள்ளமையால் இது **நிரல் நிறை அணி** எனப்படும்.

**10. தன்மையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

**அணிவிளக்கம்:** எவ்வகைப்பட்டப் பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவதே தன்மையணி ஆகும்.

எ.கா: *மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்*
*கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக்கோன்*
*கண்டனவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்*
*உண்டளவே தோற்றான் உயிர்*

**பாடலின் பொருள்:** உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வைகை நதி பாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான். அவளது சொல் தன் செவியில் கேட்டவுடனே உயிரை நீத்தான்.

**அணிப்பொருத்தம்:** கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இச்செய்யுளில் இயல்பாகக் கூறியமையால் இது தன்மை நவிற்சியணி எனப்படும்.

**11. திருக்குறளும் பயின்று வரும் அணிகளும்**

**உவமையணி:**

- வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
  கோலொடு நின்றான் உறவு
- நச்சப்படாதவன் செல்வம் நடு ஊருள்
  நச்சுமரம் பழுத் தற்று
- குன்றேறி யானைபோர் கண்டற்றால் தன்கைத்தொன்
  றுண்டாகச் செய்வான் வினை
- மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
  ஒப்பாரி யாம் கண்டதில்லை
- சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
  கொல்லப் பயன்படும் கீழ்

**எடுத்துக்காட்டு உவமையணி:**

- பண் என்னாம் பாடற்கியைபின்றேல்; கண்ணென்னாம்
  கண்ணோட்டம் இல்லாத கண்

**சொற்பொருள் பின்வருநிலையணி:**

- இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
  இன்மையே இன்னாதது

**வஞ்சப்புகழ்ச்சியணி:**

- தேவர் அணியவர் கயவர் அவரும் தாம்
  மேவன செய்தொழுகலான்

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி ...................

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்

**இ) உருவகம்** ஈ) தீவகம்

2. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது .....................

அ) தீவகஅணி ஆ) உவமையணி

**இ) தற்குறிப்பேற்ற அணி** ஈ) உருவக அணி

3. தீவகம் என்னும் சொல்லின் பொருள் ....................

**அ) விளக்கு** ஆ) தீவு

இ) விலக்கு ஈ) விலங்கு

4. கோட்டை மதில் கொடிகள் அசைந்து கண்ணகி, கோவலனை வரவேண்டாம் எனக் கூறுவது போல் இருந்த கோட்டை மதில் இருந்த ஊர் ....................

அ) வஞ்சி ஆ) பூம்புகார்

இ) உறையூர் **ஈ) மதுரை**

5. செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு பொருந்திப் பொருளை விளக்குதல் ......................

அ) நிரல் நிறையணி ஆ) சொற்பொருள் பின்வரு நிலை அணி

இ) உவமையணி **ஈ) தீவக அணி**

6. சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது ..................... அணியாகும்.

அ) தற்குறிப்பேற்றம் ஆ) உவமை

**இ) நிரல்நிறை** ஈ) தீவகம்

**2. மொழி பெயர்க்க**

1. Education is what remains after one has forgotten what one has learned in school – Albert Einstein

**விடை:** பள்ளியில் கல்வி கற்றபின் எது நமது நினைவில் நிற்கிறதோ அதுவே கல்வியாகும்.

2. Tomorrow is often the busiest day of the week – Spanish Proverb

**விடை:**நாளையே இந்தவாரத்தின் மிகவும் மகிழ்ச்சியான நாள் – ஸ்பானிஷ் முதுமொழி

3. it is during our darkest moments that we must focus to see the light – Aristotle

**விடை:** நம்முடைய வாழ்க்கையில் கடினமான இருளடைந்த பகுதியில் நாம் நம் அகத்தின் ஒளியைக் காண வேண்டும்

4. Success is not final, failure is not fatal. It is the courage to continue to counts – Winston Churchill

**விடை:** வெற்றி என்பது இறுதியல்ல. தோல்வி என்பதும் இறப்பல்ல. அவைகளைத் தொடர்ந்து முன்னேறும் துணிவே நாம் கணக்கில் கொள்ள வேண்டும். – வின்செண்ட் சர்ச்சில்

**3. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக**

**அ) தாமரை இலை நீர்போல**

**விடை:** பட்டினத்தார் வாழ்வைத் தாமரை இலைத் தண்ணீர்போல ஒட்டாது துறந்தார்

**ஆ) மழைமுகம் காணாப் பயிர் போல**

**விடை:** கணிதத் தேர்வின் வினாக்கள் மிகவும் கடினமாக இருந்ததால் இராமு மழைமுகம் காணாப் பயிர் போல வாடி நின்றான்

**இ) கண்ணினைக் காக்கும் இமைபோல**

**விடை:** எங்கள் தந்தையார் அவருடைய 100வயது தாயாரைக் கண்ணினைக் காக்கும் இமைபோல பார்த்துக் கொள்வார்.

**ஈ) சிலைமேல் எழுத்து போல**

**விடை:** பேரறிஞர் அண்ணாவின் கருத்துகள் படித்தால் நம் மனதில் சிலைமேல் எழுத்து போலப் பதியும்.

**4. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக**

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத் தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிறமலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**விடை:** சேரர்களின் பட்டப் பெயர்களில், 'கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன், 'கொல்லி வெற்பன்' எனவும், பிறமலைப்பகுதிகளை வென்றவர்கள் "மலையமான்" எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**தெரிந்து கொள்வோம்**

1. சிறுபொழுதின் வகைகளுள் ஒன்று – காலை
2. நேர் நேர் – வாய்பாடு – தேமா
3. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று – கலித்தொகை
4. மக்களே போல்வர் – கயவர்
5. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது – கார்காலம்
6. மொழிஞாயிறு – தேவநேயப்பாவாணர்ரு
7. நல்ல என்னும் அடைமொழி கொண்ட தொகைநூல் – குறுந்தொகை
8. கழை என்பதன் பொருள் – மூங்கில்
9. மதியின் மறுபெயர், இது நிலவையும் குறிக்கும் – திங்கள்
10. குறிஞ்சித் திணைக்குரிய விலங்கு – சிங்கம்
11. கைக்கினை – என்பது புறத்திணைகளுள் ஒன்று
12. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் – ஆசிரியர் – ஔவையார்
13. மதிமுகம் உவமை எனில் முகமதி – உருவகம்
14. விடையின் வகைகள் – எட்டு
15. வீரமாமுனிவர் இயற்றிய நூல் – தேம்பாவணி
16. பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவம் – செங்கீரை
17. முப்பால் பகுப்பு கொண்ட நூல்களுள் ஒன்று – திருக்குறள்
18. மன்னது உண்மையான புகழை எடுத்துக் கூறுவது - மெய்க்கீர்த்தி
19. 96 வகை சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று – பிள்ளைத்தமிழ்
20. செய்தவம் – இலக்கணக்குறிப்பு - வினைத்தொகை